விலை: 50.00
பக்கங்கள் : பதினாறு + 16
Viber : 076 636 3378

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 32 ஞாயிற்றுக்கிழமை (16.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

## வடக்கு மாகாண தமிழ் மக்களின் அரசியலமைப்பு பிரச்சினைகளுக்கு முரணற்ற விதத்தில் தீர்வு

### அமைச்சர் வாசுதேவ உறுதி



(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் - முஸ்லிம்

15

## திடீரென 30 பேருக்கு யாழில் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், சாவகச்சேரி உதயசூரியன் கிராமத்தில் 30 பேருக்கு திடீரென நேற்று முன்தினம் காலை கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபையில் சுகாதாரத் தொழிலாளர்களாகப் பணி புரியும் 30 பேருக்கே சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் இப் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

15

## எந்தவொரு சர்வதேச நாட்டிடமும் கோட்டா அரசு அடி பணியாது

### வெளிவிவகார அமைச்சர் தினேஷ் வீராப்பு



(கொழும்பு)
பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள கோட்டாபய அரசாங்கமானது எந்தவொரு சர்வதேச நாடுகளிடமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அடிபணிந்து செயற்படாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் புதிய அரசு மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் இதைத் தெளிவாக எடுத்துக்காட்டு

15

## 12 ஆயிரம் பட்டதாரிகள் புறக்கணிப்பு

(கொழும்பு)
வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்கும் திட்டத்தில் சுமார் 12 ஆயிரம் பட்டதாரிகள் இணைக்கப்படவில்லை என பட்டதாரிகளுக்கான தேசிய மையத்தின் இணைப்பாளர் சந்தன சூரியா

15

## ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ரணிலுக்கு அழைப்பு

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக சாட்சியமொன்றை பெற்றுக்கொள்வதற்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஜனாதி

15

## அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஒன்பது மாகாணங்களிலும் ஒரே நாளில் தேர்தல்

(கொழும்பு)
நல்லாட்சி அரசாங்கத்தால் ஒத்திவைக்கப்பட்டுவந்தமாகாண சபைத் தேர்தலை 2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அரசியல் தரப்பு வட்

15

## புதிய அரசியலமைப்புச் சட்டம் மிகவும் ஆபத்தானது

### மயந்த எம்.பி எச்சரிக்கை

(கொழும்பு)
புதிய அரசியலமைப்புச் சட்டம் பற்றி அரசாங்கம் பேசினாலும் அந்த அரசியலமைப்புச் சட்டம் குறித்து எதுவும் எவருக்கும் தெரியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற

15

## முல்லையில் குடும்பஸ்தர் கைது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பிரிவிற்கு உட்பட்ட குமுழமுனை, தாமரைக் கேணிப் பகுதியில் தனது வீட்டுக் காணி

02

## கடலட்டை பிடித்த மூவர் பருத்தித்துறை கடலில் கைது

(யாழ்ப்பாணம்)
சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகளைப் பருத்தித்துறைக்கு 3 கடல் மைல் தொலை

16

## தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்பட்ட முறை தவறானது

### கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது த.அ.கட்சியின் செயற்குழு

(திருகோணமலை)
தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்ட முறை தவறானது என்பதை இலங்கை தமிழ் அரசு கட்சியின் அரசியல் செயற்குழு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது.

இதனால், இந்த விவகாரத்தை வரும் 29ஆம் திகதி வவுனியாவில்

15

## கோட்டா அரசின் நகர்வுகளை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கிறது

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)
இலங்கையின் பிரதமராக மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவாகியிருப்பதுடன் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் ஆட்சியதிகாரத்

02

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராளுமன்ற சபை முதல்வராக தினேஸை நியமிக்க யோசனை

(கொழும்பு)

பாராளுமன்ற சபை முதல்வராக மீண்டும் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவை நியமிப்பது தொடர்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆளும் கட்சியில் பிரதான அமைப்பாளரான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நியமிப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னர் அவர் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக தெரிவாகியிருந்தார்.

எனினும் குறித்த பதவிகள் தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவிக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம், லக்ஸ்மன் கிரியெல்ல, பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் கலாநிதி ஹர்ச டி சில்வா ஆகியோரின் பெயர்களே இவ்வாறு முன்மொழியப்பட்டுள்ளன.

இதே நேரம் பாராளுமன்ற சபாநாயகராக மகிந்த யாப்பா அபேவர்த்தனவை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஞா)

## தேசியப்பட்டியல்...

பின்னர் கட்சியின் தேர்தல் பின்னடைவு தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது, ஒரே மாவட்ட வேட்பாளர்களிற்கிடையிலான முரண்பாடுகள், எதிர்த்தரப்பு வேட்பாளர்கள் அதிக பணத்தை செலவிட்டதே தமது தோல்விக்கு காரணமென கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் கட்சிகள் சம்பந்தப்படாத சுயாதீன குழுவொன்றை நியமித்து தோல்விக்கான காரணத்தை ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டது. அந்த குழுவை எதிர்வரும் மத்தியகுழு கூட்டத்தில் பிரேரிக்க தீர்மானிக்கப்பட்டது. (ஞா)


**மணமகள் தேவை**

கனடாவில் வாழும் 30 வயது 7ல் செவ்வாய் அனுஷ நட்சத்திர மணமகனுக்கும் அவுஸ்ரேலியாவில் வாழும் 29 வயது திருவாதிரை நட்சத்திர மணமகனுக்கும் இலங்கையில் அரச தொழில் புரியும் 35 வயது 7ல் செவ்வாய் பரணி நட்சத்திர B.Sc பட்டதாரி மணமகனுக்கும் படித்த அழகிய மணமகள்களைத் தேடுகிறோம்.

மேலதிக விபரங்களுக்கு
சொர்க்கம் திருமணசேவை (C-077)
www.sorkham.com
0014166661855, 0014377728129,
021 222 1515, 077 650 5097, 076 236 4188



**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (3586)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021-221-7603, 021-567 1532



# மரண அறிவித்தல்



## இராமாசிப்பிள்ளை சுப்பிரமணியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட இராமாசிப்பிள்ளை சுப்பிரமணியம் 09.08.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம்-சின்னாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் சரோஜினி தேவி (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மாணிக்கம் தேவராஜா அவர்களின் அருமை மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, கந்தையா, நடராசா, சிவஞானப்பிள்ளை (குணம்), கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், ரஞ்சிதம்மா, பரமேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கபிலன்-பிரகாசினி (பிரான்ஸ்), சுபதா-சுரேஸ்குமார் (இலண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிஷோர், ஜீவிகா, அஞ்சிகா, நிரோஜிகா, ஹரிணிகா, அஜிலன் ஆகியோரின் செல்லப் பூட்டியுமாவார்.

அன்னாரது பூதவுடலினை கிரியைகளுக்காக 17.08.2020 9.30A.M-11.30 A.M வரை 31 Rue paul camile Thomoux, 93330 Neuilly-Sur-Marne, France என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு தகனத்திற்காக 71 Rue des Rondeaux, 75020 Paris, France என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ. இல :-
077 074 7397 (3587)

தகவல்:- பெறாமகன்
சந்திரசேகரம் (செல்வம்) குடும்பத்தினர்


# பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியம் சரவணபவனுக்குக் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனுக்கு பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியம் உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பாராளுமன்றத்தில் முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகி இம்முறை தெரிவு செய்யப்படாத சிலருக்கு உரிய கால நிர்ணயம் இன்மையால் ஓய்வூதியம் கிடைக்கவில்லை.

எனினும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஏலவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததன் காரணமாக அவருக்கு பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியம் உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஞா)

# இளவாலைப் பகுதியில் வீடு புகுந்து திருட்டு

(அராலி)

இளவாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து சமையல் காஸ் சிலிண்டர் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

வீட்டில் உள்ள அனைவரும் வெளியே சென்றுவிட்டு மாலை 6.30 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு சிலிண்டர் ஒன்று திருடப்பட்டிருந்தது. இது தொடர்பாக இளவாலைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஞா-104)

## குடும்பஸ்தர்...

யில் இருந்து எடுத்த துப்பாக்கி ரவைகளை படையினரிடம் ஒப்படைத்த குடும்பஸ்தர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

இச் சம்பவம் பற்றி தெரியவருகையில், தாமரைக்கேணி பகுதியில் வீட்டுக் காணியில் துப்பரவு செய்யும் போது கண்ணாடி போத்தல் ஒன்றிற்குள் ஒயில் ஊற்றப்பட்டு அதற்குள் 22 துப்பாக்கி ரவைகள் போட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட போத்தல் ஒன்றினை அருகில் உள்ள படையினரிடம் எடுத்து ஒப்படைத்துள்ளார்.

அருகில் உள்ள படையினர் இதனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளமையினை தொடர்ந்து நேற்று முன்தினம் குறித்த நபரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணை செய்து வருவதாக தெரிவித்துள்ளதுடன் தனியார் காணியில் இருந்து கிடைக்கப்பெற்ற 22 துப்பாக்கி ரவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கைதுசெய்யப்பட்ட நபர் தொடர்பில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (ஞா)

## இந்தியா ...

தில் இருக்கும் நிலையில், இந்த அரசாங்கத்தினால் டில்லியின் பாதுகாப்பிற்கும் பொருளாதார ரீதியான ஈடுபாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதமான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றவா என்று இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஆங்கில செய்தி ஊடகமான "எகொனொமி நெக்ஸ்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

இலங்கை சீனாவுடனான தனது தொடர்புகளை நீர்த்துப் போகச் செய்யவேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கவில்லை. எனினும் டெல்லியின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் முன்னெடுக்கப்படக்கூடாது என்று விரும்புகின்றது என்று இந்திய - இலங்கை உறவு தொடர்பான அவதானியொருவர் எகொனொமி நெக்ஸ்ட் ஊடகத்திற்குத் தெரிவித்திருக்கிறார் என்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஞா)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்தார் தோனி

(டெல்லி)

இந்திய கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவரும் இந்திய அணிக்கு இரு முறை உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்தவருமான மகேந்திர சிங் தோனி சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தனது உத்தியோகபூர்வ இன்ஸ்டர் கிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக மகேந்திர சிங் தோனி உள்ளார்.

ஏற்கெனவே, சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகிய நிலையில், தற்போது அவர் அனைத்து வகையான சர்வதேச போட்டிகளில் இருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார். (ஞா)


**வீடு விற்பனைக்கு**

முல்லைத்தீவு, கரைச்சி குடியிருப்பில்
சகல வசதிகளுடன் கூடிய
வீட்டுடன் 4 பரப்பு
காணி விற்பனைக்குண்டு. (C-039)

தொடர்புகளுக்கு
விஜி :- 011 272 3372
நிவேதா :- 077 406 6508



**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் Harmes Avenue வில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு 2,3,6 Bed Rooms சுபகாரியங்களுக்கும் கொடுக்கப்படும்.
( Market, Station அருகில் ) (C-1000)

தொடர்புகளுக்கு-SATHIYA
077 766 7511 / 011 250 3552



**சிங்கள மொழி கற்பிக்கப்படும்**

பேச, எழுத, வாசிக்கவும், பரீட்சைகளுக்கும் சிங்கள மொழி பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (3590)
077 327 6253

# வடமாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாது

## இராஜாங்க அமைச்சரின் நிலைப்பாட்டை பாராட்டும் உலமா கட்சி தலைவர்



**(கொழும்பு)**

**வட மாகாண சபைக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க எந்த வகையிலும் இடமளிக்க போவதில்லையென்ற இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவின் நிலைப்பாட்டை உலமா கட்சி பாராட்டுவதாக கட்சித்தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.**

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்காகவே இந்தியாவின் தலையீடு காரணமாக 13வது திருத்தச் சட்டமும், மாகாண சபையும், மாகாணங்களுக்கான காணி, பொலிஸ் அதிகாரமும் கொண்டு வரப்பட்டன.

இந்த சட்டத்திருத்தம் ஏற்பட்ட போது ஆட்சியாளர்களாக இருந்தவர்கள் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் கருத்தை கேளாமல் பலவந்தமாக வடக்குடன் கிழக்கை இணைத்தனர். அது மட்டுமல்லாது பொலிஸ் அதிகாரத்தை பயன்படுத்தி வடக்கு-கிழக்கு மாகாண பொலிஸ் இராணுவத்தை உருவாக்கிவிட்டு பின்னர் தமிழ் பொலிஸாரை வேறுபடுத்தி முஸ்லிம் பொலிஸாரை தனியாக பிரித்து காரைதீவு சந்தியில் வைத்து சுட்டுக் கொன்றமையாகும். அத்துடன் காணி அதிகாரத்தை வைத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை பறிமுதல் செய்தனர். அவை இன்று வரை திருப்பி வழங்கப் படவில்லை.

இத்தகைய பயங்கரமான சூழல் நிலவிய போதுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அன்று ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவினதும் அர்ப்பணிப்பால் வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டு சுதந்திரம் பெற்றது. பின்னர் யுத்தமும் நிறைவுக்கு வந்தது.

இந்த நிலையில் மீண்டும் வடக்கு அல்லது கிழக்கு மாகாண சபைக்கும் காணி, பொலிஸ் அதிகாரம் கொடுப்பது அங்கு இனவாத ஒதுக்கல் ஏற்பட வழி வகுக்கும். இவ்வாறான காணி அதிகாரம் வழங்கப்பட்டால் படு பயங்கரமான சூழ்நிலைக்கு கிழக்கில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தள்ளப்படுவார்கள். காணி அதிகாரம் வடக்குக்கும் கிழக்குக்கும் கொடுப்பது மேலும் மேலும் இன முறுகல்களை ஏற்படுத்தும் என்பதே உலமா கட்சியின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்தார். (ஜ-2)

# நல்லூர் தேர் உற்சவத்திற்கு அதிகளவில் ஒன்றுகூடாதீர்கள்




## பக்தர்களுக்கு அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய கொரோனா சூழ்நிலையை கருத்திற்கொண்டு நல்லூர் தேர் உற்சவத்திற்கு அடியவர்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாளை நல்லூர் ஆலய தேர் உற்சவம் நடைபெறவுள்ள நிலையில் தற்போதுள்ள கொரோனா நிலைமையை கருத்திற்கொண்டு மக்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.



நல்லூர் கந்தனை தரிசிப்பதற்கு வருகை தருவதனை நாங்கள் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஏற்கனவே, சுகாதாரப் பகுதியினர் அதேபோன்று பொலிஸார் மற்றும் பாதுகாப்பு பிரிவினரும் ஆலய நிர்வாகத்தினரும் சுகாதார அறிவுறுத்தல்களை பக்தர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையிலே சுகாதார நடைமுறைகளைப் பேணி சமூக இடைவெளியைப் பின்பற்றி பக்தர்கள் சகல உற்சவங்களிலும் கலந்துகொள்வதற்கு ஏற்றவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்களுக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கொரோனா சூழ்நிலையை கருத்தில் கொண்டு பக்தர்கள் இந்த சூழ்நிலையை அனுசரித்து செயற்பட வேண்டிய கடப்பாடு காணப்படுகின்றது.

இவ்வருட நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவில் சுகாதார நடைமுறைகளை, சமூக இடைவெளியை பின்பற்றி ஆலய உற்சவங்களில் கலந்து கொள்ளுமாறு ஏற்கனவே பக்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பக்தர்கள் ஆலயத் தேர் உற்சவத்தினை உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி வழியாக வீடுகளில் இருந்தவாறே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

சமூகத்தில் தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு பக்தர்களும் தங்களுடைய பிரசன்னத்தை குறைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றேன்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# அமைச்சர்களுக்கு ஆறுமாதகால அவகாசம் இலக்கை அடையத் தவறினால் பதவி பறிப்பு



(கொழும்பு)

அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள துறையில் ஆறு மாதங்களுக்குள் அடையும் முன்னேற்றம் குறித்து ஆராய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் ஆறு மாதங்களுக்கு பின்னர், அனைத்து அமைச்சர்களின் செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கை ஒன்றை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆறு மாதங்களுக்குள் அமைச்சர்கள் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வழங்கியுள்ள பங்களிப்பு, வழங்கிய இலக்கை பூர்த்தி செய்துள்ளமை, அமைச்சுக்கள் அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இதன் போது அமைச்சர்கள் எவராவது அரசாங்கம் மற்றும் அமைச்சுக்களின் இலக்கை அடைய தவறினால், அவர்களை உடனடியாக அமைச்சு பொறுப்பில் இருந்து நீக்குவது எனவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். (ஜ-2)

## சுற்றிவளைப்பில் 61 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பு- கிராண்ட்பாஸ் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 61 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு- மோதரைப் பகுதியிலுள்ள உயன வீடமைப்புத் திட்டத்தில் சுமார் 870 வீடுகளில் திடீர் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதன்போதே ஹெரோயின், கஞ்சா மற்றும் போதை வில்லைகள் ஆகியவற்றை கைப்பற்றிய பொலிஸார், சம்பவம் தொடர்பாக 61 பேரைக் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சுமார் 518 பொலிஸ் அதிகாரிகள் ஈடுபட்டிருந்ததாக மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஜ-4)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவ திருவிழாவின் 22 ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழா நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. வசந்தமண்டப பூஜையை தொடர்ந்து பிள்ளையாரும் முருகப்பெருமானும் வெளிவீதியுலா வந்தனர். இந்த மாம்பழத் திருவிழாவில் நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் கலந்துகொண்டதுடன் முருகப் பெருமான் தங்க மயில் வாகனத்தில் எழுந்தருளி இருந்தார். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

## கமலா ஹரிஸின் புதிய அலுவலக பிரதானியாக இலங்கைப் பெண் நியமனம்

(வோஷிங்டன்)



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் துணை ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹரிஸின் புதிய அலுவலக பிரதானியாக இலங்கைப் பெண் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை - அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த ரோஹினி கொசோக்லு என்ற பெண் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க அலுவலக பிரதானி பதவியில் நியமிக்கப்பட்ட முதல் ஆசிய அமெரிக்கப் பெண் ரோஹினி கொசோக்லு என்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் துணை ஜனாதிபதி வேட்பாளராக கலிபோர்னியா செனட்சபை உறுப்பினர் கமலா ஹரிஸ் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## நியூசிலாந்தில் ஏழு பேருக்கு கொரோனா

### அதில் ஆறு பேருக்கு சமூகத் தொற்று



(வெலிங்டன்)

நாட்டின் மிகப் பெரிய நகரமான அக்லாந்து முடக்கப்பட்ட நிலையில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக புதிதாக ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 7 பேரில் ஆறு பேர் சமூகத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதாக வெலிங்டனில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்தார்.

1.7 மில்லியன் மக்கள் வசிக்கும் அக்லாந்தில் கிட்டத்தட்ட இரண்டு வாரங்களுக்கு முடக்க நிலை நீடிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொரோனா வைரஸ்தொற்றினால் பாதிக்கப்பட்ட 12 பேர் புதிதாக அடையாளம் காணப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## வரணியில் மிதிவெடி மீட்பு

(கொடிகாமம்)



தென்மராட்சி வரணிப் பகுதியில் மிதிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் சுட்டிபுரம் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதி காப்பெற் வீதியாக புனரமைப்பு செய்யும் வேலை இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது மணலில் இருந்து மிதிவெடி ஒன்று பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் அதனை எடுத்துச் சென்று செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (2-114)

## குணமடைந்தோர் 2666

(கொழும்பு)

நாட்டில் நேற்றையதினம் சனிக்கிழமை மேலும் 8 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களில், 8 பேர் அங்கொடை தொற்று நோய் வைத்தியசாலையிலிருந்தும் ஒருவர் கொழும்பு கிழக்கு வைத்தியசாலையிலிருந்தும் 3 பேர் மினுவாங்கொட வைத்திய சாலையிலிருந்தும் ஒருவர் வெலிகந்த வைத்தியசாலையிலிருந்தும் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 666 ஆக உயர்வடைந்துள்ளது. (ஜ-4)

## 306 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொவிட் -19 தொற்று நிலைமை காரணமாக தாயகம் திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 306 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

சீனாவில் இருந்து 10 பேர் ஈஸ்டன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்றிலும் மற்றும் ஓமானில் இருந்து 296 பேர் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் ஒன்றிலும் நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுநாயக்க நிலையம் வந்தடைந்ததாக விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.

அவர்கள் அனைவரும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)




இந்தியாவின் 74 ஆவது சுதந்திரதின நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் சங்கர் பாலசந்திரன் கலந்து கொண்டிருந்தார். மேற்படி நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவரால் மரம் நாட்டி வைக்கப்பட்டது.

# இராசிபலன்

16.08.2020
ஆடி 32, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி நண்பகல் 11.55 மணிவரை
புனர்பூசம் முழுவதும்
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சந்திராஷ்டமம்- மூலம்
நல்லைக் கந்தன் சப்பறம், பிரதேச விரதம்.

வளவன்


மேஷம்

கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தொல்லை தந்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர்.


ரிஷபம்

அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக் கிக்கொள்ள முற்படுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


மிதுனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.


கடகம்

மனப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்கள் சற்றுக் கூடும்.


சிம்மம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சிறப்பான நாள், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


கன்னி

திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்

விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம்.


விருச்சிகம்

குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமனாகும் நாள்.


தனுசு

நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


மகரம்

நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.


கும்பம்


பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள், இனிமையான நாள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு.

அறிவு தலைவனாகவும், உணர்வு தொண்டனாகவும் இருக்க வேண்டும்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல் சேகரிப்பு நிறைவு



(கொழும்பு)

பொதுத் தேர்தலில் இம் முறை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தமது தகவல்களை வழங்கும் கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இடம் பெறும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியேற்கும் நிகழ்வில் இந்த தகவல்கள் அவசியம் எனவும் செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவித்தார். (ஜ-2)

# தங்கத்தின் விலையில் மாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் 24 கரட் தங்கத்தின் விலை நேற்றைய நிலவரப்படி ஒரு இலட்சத்து 4 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகிறது.

கடந்த சில நாட்களில் தங்கத்தின் விலை ஏற்ற இறக்கங்களை சந்தித்து வருகிறது. எனினும் குறித்த விலை மாற்றங்கள் நாடளாவிய ரீதியிலேயே அமுலாகின்றன.

இதன்படி நேற்றைய நிலவரப்படி 24 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 4 ஆயிரமாகக் காணப்படுகிறது.

நேற்றைய வலம்புரியில் பிரசுரமான செய்தியில் தங்கத்தின் விலை மாவட்ட ரீதியில் வேறுபட்டிருப்பதாக தவறாக பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# 25 ஆண்டுகளுக்கு பின் அரை இறுதிக்குள் பி.எல்.ஜி

கழக அணிகளுக்கு இடையிலான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிக்கட்ட போட்டிகள் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற காலிறுதி போட்டியொன்றில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பி.எஸ்.ஜி) அணியும், அட்லன்டா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியின் 27 ஆவது நிமிடத்தில் அட்லன்டா வீரர் மரியோ பாசலிக் கோல் அடித்தார்.

பி.எஸ்.ஜி. அணியினர் பந்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதிலும், எதிரணியின் தடுப்பு அரணை எளிதில் உடைக்க முடியவில்லை. நெய்மார், கிலியன் எம்பாபே ஆகிய நட்சத்திர வீரர்கள் கடுமையாக முயற்சித்தபோதும் கோல் அடிக்க முடியாது தவித்தனர். அவர்கள் கோல் வலையை நோக்கி அடித்த சில உதைகளை அட்லன்டா காப்பாளர் மார்கோ ஸ்போர்ட்டில்லோ முறியடித்தார்.

அட்லன்டா வெற்றியை நெருங்கிய சமயத்தில் பி.எஸ்.ஜி. வீரர் நெய்மார் தட்டிக்கொடுத்த பந்தை மர்கியூனோஸ் 90 ஆவது நிமிடத்தில் கோலாக்கி ஆட்டத்தின் போக்கை மாற்றினார். அதைத் தொடர்ந்து காயம் உள்ளிட்ட விரயத்துக்காக 5 நிமிடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டது. இந்த கூடுதல் நிமிடத்தில் மற்றொரு பி.எஸ்.ஜி. வீரரான சோவ்போ மோட்டிங் கோல் அடித்தார்.

முடிவில் பி.எஸ்.ஜி. அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன்ஸ் லீக்கில் 25 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக அரை இறுதிக்குள் நுழைந்தது. பி.எஸ்.ஜி. அணி இறுதியாக 1995 ஆம் ஆண்டில் அரைஇறுதியில் விளையாடி அதில் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# இந்தியாவின் கிரிக்கெட் வீரர் தற்கொலை

இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவர் தற்கொலை செய்து உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மும்பை கிரிக்கெட் கழகத்தைச் சேர்ந்த வீரரான கரண் திவாரி என்பவரே இவ்வாறு கடந்த திங்கட்கிழமை இரவு அவரது இல்லத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


குறித்த கிரிக்கெட் வீரர் அவரது அறையில் உள்ள மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஐ.பி.எல். 2020 தொடரில் தெரிவு செய்யப்படாமையால் அவர் மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்ததாக அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (4)

## பற்றைக்காடாய் காட்சியளிக்கும் உலகத் தமிழாராய்ச்சி

# மாநாட்டு படுகொலை நினைவாலயம்

### கவனத்தில் கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

1974 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 9 பேரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள வரலாற்று ஆவணமாக பாதுகாக்கப்பட வேண்டிய உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவாலயம் புற்கள் வளர்ந்து பற்றைக் காடாய் காட்சியளிக்கின்றது.

தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் மற்றும் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் இங்கு வந்து தமது நினைவேந்தல் நிகழ்வினை மேற்கொள்வதோடு குறித்த பகுதியினைத் தூய்மையாகப் பேணுவதற்குரிய நடவடிக்கை எடுப்பதில்லை.

குறித்த நினைவாலய பகுதியானது யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாகும். எனினும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியில் உள்ள யாழ்ப்பாண மாநகரசபை கூட தமிழாராய்ச்சி மாநாடு நினைவாலயத்தினைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படவில்லை எனப் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த பகுதியில் புற்கள் வளர்ந்து பற்றையாக காணப்படுகின்றது. நினைவேந்தல் தினங்களில் மட்டும் அந்த இடத்திற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புக்கள் வந்து போராட்டங்கள் மற்றும் நினைவேந்தல்களை மட்டும் நடத்துவதற்கு அந்த இடம் பயன்படுத்தப்படுகிறது.

குறித்த நினைவாலயத்தில் பெயர்ப்பலகை கூட சேதமடைந்து துருப்பிடித்து உக்கிய நிலையில் காணப்படுகின்றது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள யாழ்.நகரத்தின் மத்தியில் காணப்படும் குறித்த இடத்தினைத் தூய்மையாக்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-5-33)

# எரு மூடைகளில் மறைக்கப்பட்டு
## பெருந்தொகை முதிரைக் குற்றிகள் கடத்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சரசாலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு லொறி ஒன்றினுள் எரு மூடைகளால் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட பெருமளவான முதிரை மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சாவகச்சேரி பொலிஸாரின் விசேட அதிரடி நடவடிக்கை மூலம் இக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



குறித்த முதிரை மரக்குற்றிகள் கிளிநொச்சி பகுதியில் இருந்து சட்டவிரோதமாக எடுத்து வரப்பட்டிருப்பதாக முதற்கட்ட விசாரணை மூலம் தெரிய வருகிறது.

குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய லொறி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், சாரதியும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகள் பல இலட்சம் ரூபாய் பெறுமதியானவை எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30-114)

# குருவிக் காட்டில் மீண்டும் கொட்டப்படும் குப்பைகள்

(சாவகச்சேரி)

சரசாலை -குருவிக் காட்டு சூழல் சாவகச்சேரி பிரதேச சபையினரால் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் மீண்டும் அவ்விடத்தில் பெருந்தொகையான குப்பை கூழங்கள் கொட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற அமர்வின் போதே இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிக் கையில்,

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் கனகம்புளிச் சந்தி தொடக்கம் நுணாவில் வரையான பகுதி மற்றும் வேம்பிராய் சந்தி தொடக்கம் கனகம் புளிச் சந்தி வரையான பகுதிகளில் இனந்தெரியாதோரால் வீதியோரங்களில் அதிகளவு குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இயற்கை வனமான குருவிக் காட்டு சூழலிலும் சுத்தம் பேணப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பிரதேச சபை எல்லைக்குள் பல பகுதிகளுக்கு பிரதேசசபையின் கழிவகற்றும் வாகனம் செல்வதில்லை எனவும் சுட்டிக்காட்டினர். (ஐ-5-30)



நயினை நாகபூஷணி அம்மன் கோயிலில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவத்தில் கலந்து கொள்ளும் வருடாந்த வேல் வழிபாடு பாதயாத்திரை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது.


# தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அனைத்துத் தொண்டராசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள NEC கல்வி நிலையத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டராசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (2)

# சப்ரிகம திட்டத்தின் மூலம்
## மகிழங்கேணியில் வெள்ளவாய்க்கால்
### அமைக்கும் பணி ஆரம்பம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரை அண்மித்து கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மகிழங்கேணி கிராமத்தின் வெள்ளப் பிரச்சினைக்கு புதிய அரசாங்கத்தின் சப்ரிகம (நிறைவான கிராமம்) திட்டத்தின் ஊடாக தீர்வு கிடைத்துள்ளது.

சாவகச்சேரி கடற்கரையை அண்மித்து காணப்படுகின்ற மகிழங்கேணி கிராம மக்கள் தொடர்ச்சியாக மாரி காலத்தில் வெள்ளப் பிரச்சினையால் அவதிப்பட்டு வருகின்றனர்.

அக்கிராம மக்கள் தமது பிரச்சினை தொடர்பாக நகர சபை, பிரதேச செயலகம், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவம் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதிலும் முழுமையாக அம்மக்களின் வெள்ளப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டாத நிலை இருந்து வந்தது.

இந்நிலையில் தற்போது சப்ரிகம திட்டத்தின் முதற்கட்ட நிதி ஒதுக்கீடான இருபது இலட்சம் ரூபாய் நிதியில் மகிழங்கேணி கிராமத்தில் வெள்ள வாய்க்கால் அமைக்கப்பட்டு வருகிறது.

மகிழங்கேணி மக்கள் எந்த வித அடிப்படை வசதிகளும் இன்றி காணப்படுகின்றனர்.

வீட்டுத்திட்ட நிதி கூட முழுமையாகக் கிடைக்காத நிலையில் அம்மக்கள் அல்லல்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-30)



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் நேற்று சனிக்கிழமை முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்தினர்.

# இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலியா

இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களை கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்த சுற்றுப்பயணம் ஜூலை மாதம் நடைபெறவிருந்தபோதும் உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக போட்டி தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுடனான தொடர் இங்கிலாந்தில் வெற்றிகரமாக இடம் பெற்றுள்ளமையினால் செப்டெம்பர் மாதம் சுற்றுப்பயணம் மேற்கொள்ள அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களின்படி, செப்டெம்பர் 4, செப்டெம்பர் 6 மற்றும் செப்டெம்பர் 8 ஆகிய திகதிகளில் சவுத்தம்ப்டனில் மூன்று இருபதுக்கு-20 போட்டிகளை நடத்தவும் செப்டெம்பர் 11, செப்டெம்பர் 13 மற்றும்செப்டெம்பர்16 ஆகிய திகதிகளில் மூன்று ஒருநாள் போட்டிகளை மான்செஸ்டரில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் குழாம் எதிர்வரும் 24 ஆம் திகதி இங்கிலாந்துக்கு செல்லும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (4)



யாழ்.மாவட்டத்திலுள்ள 8 பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 4 விளையாட்டுக் கழகங்களுக்குள் கரப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. நேற்று முன்தினம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட ஆவரங்கால் கரப்பந்தாட்ட கழகம் எதிர்வரும் 26 ஆம் திகதி காங்கேசன்துறை பொலிஸ் நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பங்குபற்றவுள்ளது. இறுதிப்போட்டியில் வெற்றி பெறும் கழகங்களுக்கு பணப்பரிசும், வெற்றிக்கேடயமும் வழங்கப்படும். நேற்று முன்தினம் பங்குபற்றிய 4 விளையாட்டுக் கழகங்களுக்கும் வெற்றிக் கேடயமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (படம்: கரணவாய் செய்தியாளர்)


## தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள Elim சிறுவர் இல்லத்திற்கு சிறுவர்களை தங்கியிருந்து பராமரிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் வேலையாட்கள் தேவை. சமையல் மற்றும் தோட்ட வேலைகளுக்கு தங்கியிருந்து வேலை செய்ய தம்பதியினர் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டோர் தங்குமிடம் உணவு வழங்கப்படும்.
21.08.2020 முதல் விண்ணப்பங்கள் அனுப்பவும்.

Chairman Elim Children home
Memorial Lane Manipay
E-mail:- Chairmanelim@gmail.com (C-999)

Tei:- 0787681144



## 75வது ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2020

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் கடந்த 2020 மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறு மென அறிவிக்கப்பட்ட பொதுக்கூட்டம் "கொரோனாத் தொற்று நோய்" காரணமாக பிற்போடப்பட்டது.

மேற்படி ஆண்டுப் பொதுக்கூட்டம் 2020 ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் "யாழ்ப்பாணம் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில்" தலை வர் Dr.ச.நிமலன் தலைமையில் நடைபெறும். சகல பங்குதாரர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இ.சபேசன்
கம்பனி செயலாளர் (3577)



## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA.Gold Center

0765684346 (C-998)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: Information Technology Gov, Sector Test Analyst. (Australia)<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகள் மட்டும் அவுஸ்திரேலியா விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/7328 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 45 ¾ செவ் 12 இல்<br>உயரம்: 156 cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர் யாழ்.மாவட்டத்திற்குள்<br>தொ.இ: G/8785 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 18 செவ் 2 இல்<br>உயரம்: 5'4''<br>தகைமை/தொழில்: Postgraduate Diploma Database Administrator<br>எதிர்பார்ப்பு: சைவ போசனமுடையவராக அல்லது மாறக் கூடியவராக உள்ள பெண் தகுந்தவரன்.<br>தொ.இ: B/7333 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 31 செவ் 11 இல்<br>உயரம்: 5'2''<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டவர் மட்டும்.<br>தொ.இ: G/8789 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7346 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரி,செவ் 1 இல்<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்<br>தொ.இ: G/8796 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 47 ½ செவ் 2 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி இளைஞர் முயற்சியாண்மை பயிற்சி உத்தியோகத்தர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/7356 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'6''<br>தகைமை/தொழில்: HNDA. தனியார் வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/8799 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## ராஜ் ஜூவல்லர்ஸ்
### அடகு பிடிப்பவர்கள்



Best Choice

78000/-

1 பவுண் – 22 கரட்டிற்கு



(3562)

முக்கிய அறிவித்தல்

2018.11.01 ஆம் திகதி தொடக்கம் 2019.09.30ஆம் திகதி வரை (பற்றுச்சீட்டு இலக்கம் 21000-38000 வரையான) வைக்கப்பட்ட அடகுகளை 2020.09.30 இற்குள் மீட்டுக் கொள்ளவும்.அல்லது தற்போதைய தங்கத்தின் அதிகரித்த பெறுமதிக்கு ஏற்ப வட்டியுடன் சேர்த்து புதுப்பித்துக் கொள்ளலாம். தவறின் 2020.09.30 இற்கு பின் விற்பனை செய்யப்பட்டு விடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது.

இல.31C, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)
Tel: 0212217287, 0766361238

# போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வங்கிக் கணக்கில் 220 கோடி ரூபாய்

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வங்கிக் கணக்குகளில் பரிமாற்றப்பட்டுள்ள 220 கோடி ரூபா பணம் தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.**

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடந்த சில தினங்களாக திட்டமிட்ட குற்றச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கமைய சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையங்களிலிருந்து பெருந்தொகையான மதுபானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த ஒருமாத காலத்திற்குள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து எட்டு சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையங்களை சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது கொழும்பு குற்றப்பிரிவு, கொழும்பு வடக்கு குற்றப்பிரிவு மற்றும் தெற்கு குற்றப்பிரிவும் சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டிருந்தது.

இதேவேளை ஊழல் தடுப்பு பிரிவும் இந்த சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. அதற்கமைய இது போன்ற 12 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது 10 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான சட்டவிரோத மதுபானம் மற்றும் மதுபான வடித்தலுக்காக பயன்படுத்தப்படும் 75 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான கோடாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.



தொடர்ந்தும் இந்த சுற்றிவளைப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கும் மத்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் பணம் மற்றும் இந்த பணத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள சொத்துகளும் கறுப்பு பண சுத்திகரிப்பு சட்டத்தின் பிரகாரம் அரசுடைமையாக்கப்படும்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர், மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கும் மத்திய ஊழல் தடுப்பு பிரிவின் பணிப்பாளருக்கும் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதிக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த இரு வாரங்களாக போதைப்பொருள் கடத்தல்கார்களால் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கணக்குகள் தொடர்பில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது 220 கோடி ரூபா தொகை பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்த பணம் எதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது, எதற்காவது முதலீடு செய்யப்பட்டுள்ளதா? போதைப் பொருள் கொள்வனவுக்காக வெளிநாடுக்கு அனுப்பப்பட்டுள்ளதா? அல்லது இந்த பணத்தின் மூலம் வேறு வகையான சொத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்தார். (ஜ-4)

## ரயிலில் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று அதிகாலை ரயிலுடன் மோதி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

காலியிலிருந்து மருதானை நோக்கி பயணித்த ரயில் குறித்த நபர் மீது மோதியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் வெள்ளவத்தையைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 130 | 130 | 130 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 80 | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 80 |
| கோவா | 130 | 120 | 130 | 120 |
| கரட் | 140 | 140 | 160 | 160 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 140 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | -- | 160 |
| பயற்றங்காய் | 80 | 120 | 60 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 120 | 280 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 100 | 160 |
| போஞ்சி | 250 | 250 | 280 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 120 | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 60 | 60-50 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 150 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 50 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 70 | 70 | 50 | 60 |

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு புதிய தலைமைத்துவம் அவசியம்

## சந்திரிகா சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதியத் தலைமைத்துவமொன்று அவசியம் என சுட்டிக் காட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்க தான் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சந்திரிகா குமாரதுங்க இதனை வலியுறுத்தினார்.

குறித்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் உருவாக்கப்பட்ட குழப்பகரமான அரசியலமைப்புக்கு இணாங்க, அறிமுகப்படுத்தப்பட்ட தேர்தல் முறைமையினால் இன்று தனி ஒரு கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளது.

இதனை பாரிய வெற்றியாக அந்தத் தரப்பினர் இன்று கொண்டாடி வருகிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்ட வாக்குகளை விட இரண்டு இலட்சம் வாக்குகள் இந்தத் தேர்தலில் அந்தத் தரப்புக்கு குறைவடைந்துள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது, தேர்தல் முறைமையினால் தான் அவர்களுக்கு கிடைத்தது. அத்தோடு, எதிர்க்கட்சி இன்று முழுமையாக பலமிழந்துள்ளது.

இந்த நாட்டின் பெரிய ஜனநாயகக் கட்சிகள் இரண்டும் இன்று அழிவடைந்துள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்கு என்று இன்னமும் நான் தேடிக் கொண்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று துண்டு துண்டுகளாக சிதைவடைந்துள்ளது.

70 வருடங்களுக்கு மேல் வரலாறு கொண்ட இந்தக் கட்சிகள் இரண்டும் காணாமற் போயுள்ளன. ராஜபக்ஷவின் அரசியல் கொள்கைகளை நாம் என்றும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர் சக்திமிக்கதொரு தலைவர் என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

அவருக்கு ஏற்ற வகையிலான பலமான ஒரு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் இன்று நாட்டில் இல்லை என்பதுதான் உண்மையாகும்.

சுதந்திரக் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமையை நினைத்து நான் மிகவும் வருந்துகிறேன். நாம் அன்று கூட்டணிகளை அமைத்தோம். அன்று ஒரு கொள்கைக்கு அனைவரும் இணாங்கினோம். ஆனால், இன்று எமது கொள்கைக்கு முற்றிலும் முரணான பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்துள்ளோம்.

சுதந்திரக் கட்சியினருக்கு அமைச்சுப் பதவிகள் கூட வழங்கப்படவில்லை. சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் இன்றும் இலங்கையில் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.


தற்போது இந்தக் கட்சியை மறுசீரமைக்கும் காலம் வந்துள்ளது. இதற்கான வேலைத்திட்டமொன்றை ஸ்தாபிக்க வேண்டும்.

புதிய தலைமைத்துவமொன்று சுதந்திரக் கட்சிக்கு அவசியமாகிறது. இதற்கான முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நான் என்றும் தயாராகவே இருக்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுப்போம் - ஞானசார தேரர்

(கொழும்பு)

**பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும் கிடைக்காவிடினும் பௌத்த மக்களின் உரிமைகளை பாதுகாக்க முன்னெடுத்த தேசிய செயற்றிட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம் என்றும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் சட்டங்களை இயற்றவே கிடைக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறோம் என்றும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.**



பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அபேஜன பல கட்சிக்கு கிடைக்கப் பெற்ற ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. தேசியப் பட்டியல் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் பல குறிப்பிடப்படுகின்றன. பதவிகளுக்காக தேரர்கள் முரண்பட்டுக் கொள்ளும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

இவ்வாறான நிலைமை பௌத்தமத கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணானது.

பௌத்த மத உரிமைகளை பாதுகாப்பதற்கு பாராளுமன்றம் செல்ல வேண்டிய தேவை கிடையாது. கடந்த காலங்களில் பல பிரச்சினைகளுக்கு தனித்துப் போராடி வெற்றி கண்டோம். பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தாலும், கிடைக்காவிடினும் பௌத்த மதம் மற்றும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க இதுவரை காலமும் முன்னெடுத்த தேசிய செயற்றிட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்போம்.

நாட்டில் மறைமுகமாக எழுச்சி பெற்றுள்ள இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்க தேவையான சட்டங்கள் பாராளுமன்றத்தில் இயற்றிக்கொள்ள வேண்டும். இதற்காகவே தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்ல முயற்சிக்கிறோமே தவிர அரச வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கு அல்ல.

பயங்கரவாதி சஹ்ரானால் எங்களையும் எமது கொள்கைகளையும் வீழ்த்த முடியவில்லை. ஆனால் எம்மவர்கள் தற்போது குறுகிய நோக்கங்களைக் கொண்டு தேசியத்துக்கு துரோகமிழைக்கிறார்கள். எமது கொள்கை மீது நம்பிக்கை வைத்து ஆதரவு வழங்கிய 67 ஆயிரம் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் நிச்சயம் நிறைவேற்றுவோம் என அவர் தெரிவித்தார்.(ஐ-4)

## பொறுப்பேற்றதும் ஆசிரியரிடம் ஆசி பெற்ற அமைச்சர்




(கொழும்பு)

கூட்டுறவு, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண நேற்று முன்தினம் அமைச்சு கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது, வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பிரசன்னமாகியிருந்தார்.

பந்துல குணவர்த்தனவின் மாணவனே லசந்த அழகிய வண்ண. அமைச்சு பொறுப்பேற்ற பின்னர் தனது ஆசிரியரிடம் அவர் ஆசி பெற்ற புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது. (ஐ-4)

## அலை சறுக்கல் விளையாடிய நாமல்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை கடற்கரைப் பகுதிகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக இளைஞர் விவகாரம் மற்றும்விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்றுக் காலை அம்பாந்தோட்டை கடற்பரப்பில் அலையில் சறுக்கி விளையாடும் விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்.

இந்த விளையாட்டில் நாமல் ராஜபக்ஷவின் விளையாட்டு பயிற்சியாளரான அவுஸ்திரேலிய பிரஜை ஸ்டீவ் டெய்லர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் வெளிநாட்டவர்கள் அதிகளவில் விளையாடும் இவ்வாறான விளையாட்டுக்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(ஐ-4)

## தனிமைப்படுத்தல் 30 ஆயிரத்தைக் கடந்தது

(கொழும்பு)

முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல் மையங்களில் சுமார் 30 ஆயிரத்து 274 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர் என கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் தற்போது 41 தனிமைப்படுத்தப்பட்ட மையங்களில் 4 ஆயிரத்து 689 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தேசிய செயற்பாட்டு மையம் குறிப்பிட்டுள்ளது.

அந்த வகையில் 160 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து வீடுகளுக்கு திரும்புவார்கள் எனவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 886 பேராக பதிவாகியுள்ளது.

இதேவேளை இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 209 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 55 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதோடு, இந்த வைரஸ் தொற்றினால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## ரணிலுடன் முறுகல்

# செயற்குழுக்கூட்டத்தை தவிர்த்த அகிலவிராஜ்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிய வந்துள்ளது. இந்த செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.





ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அகிலவிராஜ் காரியவசத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையை அடிப்படையாகக் கொண்டே அவர் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக அகிலவிராஜ் ஊடகங்களிடம்கூறியமை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க, கடுமையாகச் சாடியதாக தெரிய வந்துள்ளது. (ஐ-4)

## பெற்றோரே அவதானம்!

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் கடத்தல்கள்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

**கொழும்பு நகர்ப்புறங்களில் காணப்படும் உயர்நிலை பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போலி இன்ஹெலர்கள் மூலம் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்றுவருவதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, போதைப்பொருள் அடங்கிய இன்ஹெலர் ஒன்று மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.**



இதேவேளை இவ்வாறான கடத்தல்காரர்களிடமிருந்து தங்களது பிள்ளைகளை காப்பாற்றிக் கொள்வதற்கு பெற்றோர் அவதானத்துடன் செயற்படுவதுடன், பாடசாலை மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் இவ்வாறான நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றால் அதனை 1997 என்ற இலக்கத்திற்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ தெரிவிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு நகரப் பகுதியில் காணப்படும் உயர் பாடசாலைகளை இலக்குவைத்து, அங்கு கல்விகற்றுவரும் மாணவர்களிடம் மிக சூட்சுமமான முறையில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் போதைப்பொருட்களை விற்பனை செய்துவருவதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆஸ்துமா நோயாளர்கள் பயன்படுத்தும் இன்ஹெலர்களை போன்ற பொருட்களில் போதைப் பொருட்களை வைத்து விற்பனை செய்துவருவதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர் ஒருவரிடமிருந்து இதுபோன்ற போதைப்பொருள் அடங்கிய இன்ஹெலர் ஒன்றை அவரது பெற்றோர் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்தனர்.

இவ்வாறான போதைப்பொருள் நிரப்பபப்பட்ட இன்ஹெலர்களைக் கடத்தல்காரர்கள் மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்வதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறான இன்ஹெலர்கள் அனுமதியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றமையினால், போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ள இன்ஹெலர்களிலே இவ்வாறு போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதுபோன்ற கடத்தல்காரர்களின் வலையிலிருந்து மாணவர்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் பெற்றோர்களும் பாடசாலை ஆசிரியர்களும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை இவ்வாறான கடத்தல்காரர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் உடனே அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது 1997 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்புகொண்டு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# மக்கள் மைய பொருளாதாரத்திற்கு முன்னுரிமை



(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் பொருளாதாரக்கொள்கைகள் செயற்படுத்தப்படும்போது மிகவும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான 'மக்கள் மைய பொருளாதாரத்திற்கு' முன்னுரிமை வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

தற்போது அந்நிய நேரடி முதலீடு குறைவு, ஏற்றுமதி வீழ்ச்சி, டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி குறைதல், தொழில்துறை பலவீனமடைதல் மற்றும் பெரும் கடன் சுமை ஆகியவற்றை அரசாங்கம் கவனத்திற்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் நிதி அமைச்சில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த நிலைமை கொரோனா தொற்றின் பரவல் காரணமாகவும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஸ்திரமில்லாத ஆட்சியினாலேயே ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு வாக்காளர்களால் தெளிவான ஆணை வழங்கப்பட்டதாகவும் இப்போது அதை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

உள்ளூர் தயாரிப்புகள் உலகளாவிய சந்தையில் உள்ளவற்றுடன் இணையாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் இலங்கை தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளில் ஊடுருவ முடியும் என்றும் ஆகவே வரி சீர்திருத்தங்கள், நாணய மற்றும் வங்கி விதிமுறைகள் மற்றும் நிதி காப்புப் பிரதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இந்த இலக்கை அடைய தேவையான சூழலை நிதி அமைச்சு உருவாக்கும் என்றும் அவர் கூறினார். (ஜ-4)

# ஸ்ரீலங்கன் விமானநிறுவனம் தொடர்பில் அரசு அக்கறை



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தை விற்பனை செய்ய முயன்றாலும் தற்போதைய அரசாங்கம் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அவர் மேற்கொண்ட விஜயத்தின் போது இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் நட்டத்தை எதிர்நோக்கும் நிலையை மாற்றியமைப்பதே சமகால அரசாங்கத்தின் இலக்காகும் என்றும் அவர் கூறினார். (ஜ-4)

# மகிந்த வசமாகியது 85 அரச நிறுவனங்கள்

### மயந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் 85 அரச நிறுவனங்கள் கைவசம் உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 70 வயதைக் கடந்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் 85 அரச நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முதியவர் ஒருவர் எவ்வாறு அவற்றை வினைத்திறன் மிக்கதாக இயக்க முடியும்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி அமைச்சுப் பதவி வகிக்க முடியாது. அப்படி இருந்தும் அரசியலமைப்பை மீறும் வகையில் பாதுகாப்பு அமைச்சை அவர் தன்வசம் வைத்துள்ளார். அடுத்ததாக மகிந்த ராஜபக்ஷவுக்கு 74 வயதாகிறது. அவரின் கீழ் 85 இற்கும் மேற்பட்ட அரசநிறுவனங்கள்கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்புலத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

அதில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படும் என்பது தெரியாது. சிலவேளை தமது ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளும் விதத்தில் தமக்குத் தேவையான வகையில் ராஜபக்ஷர்கள் அரசமைப்பை உருவாக்கக்கூடும் என்ற அச்ச நிலையும் இருக்கிறது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு முழுமையான ஆதரவு வழங்குவோம்

## பாகிஸ்தான் உறுதி



(கொழும்பு)

**இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய விடயங்களில் முழுமையான ஆதரவை வழங்குவதோடு, தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக பாகிஸ்தானிய பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமத் உறுதியளித்துள்ளார்.**

பாகிஸ்தானின் 74 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வானது "பாகிஸ்தானை வலுவான, முற்போக்கான, ஆற்றல்மிக்க, சகிப்புத் தன்மையுள்ள ஜனநாயக இஸ்லாமிய நாடாக மாற்றுதல்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது.

பாகிஸ்தானின் தேசியக் கொடியை ஏற்றி இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்த இலங்கைக்கான பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமத், தனது உரையின் போது "பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பாகிஸ்தானின் கனவை அடைவதற்கு ஈடு இணையற்ற தியாகங்களைச் செய்த அனைத்து வீரர்களுக்கும் அஞ்சலிகள் உரித்தாக வேண்டும்" என்று குறிப்பிட்டதோடு, அந்த வீரர்களின் கனவுகளை நனவாக்குவது அனைத்து பாகிஸ்தானியர்களினதும் பொறுப்பாகும் என்றும் இந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் நல்லுறவும் நல்லிணக்கமும் சகோதரத்துவமும் பேணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை பரஸ்பர மரியாதை, புரிந்துணர்வு மற்றும் நெருங்கிய ஒத்துழைப்பு என்பவற்றின் அடிப்படையில் இலங்கையுடன் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் உறவிற்கு பாகிஸ்தான் மிகுந்த மதிப்பளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். பாகிஸ்தான் தொடர்ந்தும் இலங்கைக்கு அதன் ஆதரவை வழங்கி வருவதாகக் கூறிய அவர், குறிப்பாக இலங்கையின் தேசியப் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகிய விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரக அதிகாரிகள், பாகிஸ்தான் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கட்சியின் ஒற்றுமை தான் முக்கியம் எனக்கு தேசியப்பட்டியல் வேண்டாம்

## சஜித் அணியின் முக்கியஸ்தர் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்திக்கு, இம்முறை நடந்த பாராளுமன்றத் தேர்தலின் மூலம் 7 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன.

இதனை பங்கிட்டுக் கொள்வதில் பங்காளிக் கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் முரண்பட்டுக்கொண்டன.

குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் சார்ந்த (மனோ, றிசாத், ஹக்கீம்) தரப்புக்கள் தமக்கு ஒவ்வொரு தேசியப் பட்டியல் வீதம் 3 தேசியப் பட்டியல் ஆசனங்களைக் கோரியிருந்தன.

இந்நிலையில் நெருக்கடியை தவிர்க்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒற்றுமையை



தக்க வைக்கவும் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பார்க்கீர் மாக்கார் தனக்கு ஒதுக்கப்பட்ட தேசியப் பட்டியல் ஆசனத்தை விட்டுக்கொடுக்க தீர்மானித்துள்ளார்.

எனினும், சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இம்தியாஸ் தேசியப் பட்டியலிலிருந்து ஒதுங்கக் கூடாதென வலியுறுத்தியுள்ளனர்.

சிறுபான்மைக் கட்சிகளும் இம்தியாஸ் எக்காரணம் கொண்டும் தேசியப் பட்டியல் ஆசனத்தை விட்டுக்கொடுக்கக் கூடாது. அவரின் சேவை நாட்டுக்கும் சமூகத்திற்கும் தேவையென சுட்டிக்காட்டியுள்ளன.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கடந்த வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் இம்தியாஸின் பெயரும் உள்ளீர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர்கள் ஏழு பேருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

காலி - பூஸா சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர்கள் 7 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறித்த 7 பேரும் சிறையிலுள்ள பிரபல போதைப் பொருள் வர்த்தகர் வெலே சுதாவுடன் தொடர்பினை பேணியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

ஆகவே, இவ்விடயத்தில் உண்மையான விபரங்கள் வெளியாகும் வரை இவ்வாறு 7 பேருக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அச்சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)




## சப்பறம் காணவிரையுமின்னே

நல்லூரான் பவனி வருகிறான்
பளபளவென பட்டொளி வீசிட
பக்தர்களின் குற்றங்குறைகளை நீக்கிட
சுவாமிக்கே நாதனாகி ஞானம் புகட்டிட
கடுவினை களைந்திட நல்லருள் புரிந்திட
நல்லைக் கந்தன் பவனி வந்திட
விரைகின்றான் சப்பை ரதம் ஏறிடவே
நரர்களே விரையுமின்னே (சப்பைரதம்)
சப்பறம் காண நல்லூர் விரையுமின்னே

கவிக்கோ, மல்லாகம்.

## சப்பை ரதச் சோபனங்கள்

காலம் முழுதாகும் காலம்வரை கதியாளும்
கந்தன் கருணை மிகும் சிவமைந்தன்
கோலமோ நிகரில்லா அழகினை யாளும்
கவின் மேவும் மயிலேறும் மேலோன்
சீலம் மிளிர் நல்லைப் பதியாளும்
சேவல் கொடி ஓங்கும் சுப்ரமணியன்
ஞாலத் துயர் போக்க வேலாளும்
ஞான சொரூபனின் சப்பை ரதச் சோபனங்காண்

செல்வராணி,
வட்டுக்கோட்டை.

## சப்பறத்தில் ஏறிநின்று சஞ்சலங்கள் சரித்திடுவாய்!

சப்பறத்தில் ஏறி நின்று
சஞ்சலங்கள் சரித் திடையா!
இப் புவியில் ஏற்ற மதை
இதமாக ஈந் திடையா!

காலத்தா லழியாத
கற்பகமாய் நீ மிளிர்ந்து
சீலத்தின் சிறப் பொளிர (ச்)
சீர்த்தி தமை யீந்திடையா!


சத்தியத்தின் உத்த மனாய்
சரித்திரத்தில் வித்தகனாய்
இத்தலத்தைக் காத் தென்றும்
இசை பெறவே வைத்திடையா!

கலாபூஷணம், கலைமாமணி
கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

ஆர்த் தெழுந்த பிறவி தன்னில்
அளைந்த பாவம் யாவுமே
சேர்ந்து வந்து செறிந் துவந்தென்
செயலி ழுக்கச் செய்யுதே
ஆர்து ணையு மின்றி யின்றுன்
அடிகள் பற்றிக் கூவினேன்
நீர்த்தென் னூழை நீக்கிக் காக்க
நிற்க! நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



மருதமடு அன்னையின் ஆவணித் திருவிழா நேற்று சனிக்கிழமை காலை சிறப்பாக இடம் பெற்றது. கண்டி மறை மாவட்ட ஆயர் வியானி பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற திருவிழாத் திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் காலி மறை மாவட்ட ஆயர், அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் ஆகியோர் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். (படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

# மன்னாரில் சடலமாக மீட்கப்பட்ட பெண் இதுவரை அடையாளம் காணப்படவில்லை

## பொலிஸார் தீவிர விசாரணை

(மன்னார்)

மன்னார் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்தி பாத்தியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்ட நிலையில் குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த, பெண்ணின் உடலில் பலத்த காயங்கள் காணப்படதுடன் இழுத்து செல்லப்பட்ட அடையாளங்கள், ஆண் ஒருவரின் பாதணி ,கையுறை உட்பட சில தடயப் பொருட்களையும், சம்பவ இடத்தில் இருந்து விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பெண் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேதப்பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மன்னாரை சேர்ந்தவரா? அல்லது வேறு மாவட்டத்தை சேர்ந்தவரா? என்பது தொடர்பாகவும்,குறித்த பெண் குறித்த இடத்திற்கு எவ்வாறு வந்தார்? அவர் கொலை செய்யப்பட்டாரா? என்பது தொடர்பாக மன்னார் பொலிஸார் புலன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-4-285)

# மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் வாகனங்களுடன் கைது



(தருமபுரம்)

கண்டாவளை மடுக்கரைப் பகுதியில் மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் வாகனங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை டிப்பர், உழவு இயந்திரத்தில் வந்த இருவர் மணல் கடத்தலில் ஈடுபட்டதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் வாகனங்களுடன் இருவரையும் கைது செய்தனர். (2-4-316)




கடந்த 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகத்தில் முதலுதவி பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா விமானப்படையின் போர் விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் 61 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த இப்படுகொலை நிகழ்வினுடைய 14 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று தமிழர் தாயகப் பகுதி எங்கும் இடம்பெற்று வருகின்ற நிலையில் முல்லைத்தீவில் இயங்கி வருகின்ற நெய்தல் கல்வி நிலையத்தின் வகுப்பறைகளுக்கு செஞ்சோலையில் உயிரிழந்த மாணவர்களின் நினைவாக பெயர்ப்பலகைகள் திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டதோடு, குறித்த மாணவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் பெயர் பலகைகள் பொறிக்கப்பட்ட வகுப்பறைகளை திறந்து வைத்தனர். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 154 பேர்



(நெளுக்குளம்)


டுபாயிலிருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 154 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்த்தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் கடந்த முதலாம் திகதி டுபாயிலிருந்து அழைத்து வரப்பட்ட பயணிகள் பும்பைமடு தனிமைப்படுத்தல் முகாமிற்கு அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், 154 பேர் அவர்களது சொந்த இடங்களான கம்பஹா, கொழும்பு, கண்டி, கேகாலை, திருகோணமலை, களுத்துறை போன்ற பகுதிகளுக்கு பேருந்துகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த பயணிகளிற்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், கொரோனாத் தொற்று பீடிக்கவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தமது சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-299)



நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும், தனிநபர் உரிமைகளையும் அறிந்து கொள்வதற்கான விசேட செயலமர்வு இரண்டு நாட்கள் மன்னார் தேசிய சமாதானப் பேரவையின் மாவட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்றது. (படம்:- மன்னார் செய்தியாளர்)

மரணம் என்னை விழுங்கும் வரை நான் ஒரு மாணவன்; படித்துக் கொண்டே இருப்பேன்.

– கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பனைகள் இல்லாதவிடத்து வடலிகளே பனைகளாம்

தமிழ் மொழியின் சிறப்பு அம்மொழியில் இருக்கக்கூடிய சொற்களஞ்சியமாகும்.

தவிர, எதனையும் பிரித்தறியும் வகையிலும் தமிழ்ச் சொற்கள் படைக்கப்பட்டுள்ளன.

உதாரணத்துக்கு பிறப்பு என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால், முருகன் உதித்தான். ஞானசம்பந்தர் அவதரித்தார். காந்தியடிகள் தோன்றினார் என்றவாறு அவரவர் மாண்பின் பொருட்டு அவர் தம் பிறப்பை தமிழ் உணர்த்தி நிற்கிறது.

இஃது ஒரு வகை என்றால், சாமானியர்கள் பிறந்தனர் என்பதாகத் தமிழின் சொல் வழமைப்படுத்துகிறது.

இங்கு பிறந்தவர் என அழைக்கப்பட்ட ஒருவரை; தோன்றினார் என அழைப்பதற்குள், அவரின் மாண்பான வாழ்வும் பண்பான கருமங்களும் உச்சம் பெற்றுள்ளன என்பது உணர்தற்குரியது.

இதுபோல இளமைப் பெயர்கள், முதுமைப் பெயர்கள் என்றவாறான பேதப்படுத்தல்களும் தமிழில் தாராளம் உண்டு.

பனையை எடுத்துக் கொண்டால் பனையின் முளைப்பருவம் பீலி என்றும் அதன் இளமைப்பருவம் வடலி என்றும் முதுபருவம் பனை என்றும் அழைக்கப்படுகின்றன.

இங்கு வடலிகளே பனைகளாகுகின்றனவெனினும் வடலியைப் பனை என்று அழைப்பதோ அன்றி பனையை வடலி என்று கூறுவதோ ஏற்புடையதாகாது.

ஆக, வடலிப் பருவம் என்பது அதற்குரிய குணம் குறிகளைக் கொண்டதாகும். வடலிகளில் கருக்கு நிறைந்த மட்டைகள்; இறுக்கமான பிடிமானங்கள்; காவோலைகளின் தடிப்பும் விட்டுக் கொடுக்காத வைராக்கியங்களும் என அனைத்தும் ஒன்று திரண்டதாகவே வடலிகள் காணப்படும்.

ஆனால் பனைப் பருவம் அதுவன்று. கருக்கில் மென்மை, இறுக்கமான பிடிமானமின்மை, பழுத்த ஓலைகளைப் பக்குவமாக நிலத்துக்கு அனுப்பி வைத்து மக்களுக்கு உதவுகின்ற பெருந்தன்மை.

நுங்கு, பனம் பழம், பதநீர் எனத் தன் தலையால் தருகின்ற தருமம் என ஏகப்பட்ட சாந்தங்களும் கொடைகளும் பனைகளில் உண்டு.

இங்கு முற்று முழுதாகப் பனைகள் இல்லாதவிடத்து, வடலிகளைப் பனைகள் என்று காட்டுகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது.

இந்த நிலைமை பனைகளுக்கு மட்டுமல்ல. மனிதர்களுக்கும் ஏற்புடையதுதான். பண்பான, தருமம் நிறைந்த மானிடர்கள் இல்லாதவிடத்து, அதிகாரமும் அதட்டலும் விட்டுக் கொடுக்காத மனநிலையும் வஞ்சம் தீர்க்கும் எண்ணங்களும் உடையவர்களே மனிதர் ஆகுவர்.

இந்த நிலைமைகளே இன்றைய அத்தனை அவலங்களுக்கும் அடிப்படையாகும்.

என்ன செய்வது பனைகள் இல்லாதவிடத்து வடலிகளுக்குப் பனைகளைத் தெரிய நியாயம் இல்லை என்பதும் ஏற்புடையதுதான்.

# நல்லூர் தேருக்கு மக்கள் வருவதனைத் தவிர்த்து வீட்டில் இருந்து முருகக் கடவுளை தரிசியுங்கள்

## யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய தேர் உற்சவத்திற்கு பெருமளவில் மக்கள் வருவதனைத் தவிர்த்து வீட்டில் இருந்து முருகக் கடவுளை தரிசியுங்கள் என யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஷ் சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

நாளை இடம்பெறவுள்ள நல்லூர் ஆலய வருடாந்த தேர் உற்சவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துமுகமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்ர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. குறித்த ஆலய உற்சவத்திற்கு வரும் பக்தர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியினைப் பேணி வழிபாட்டினை மேற்கொள்ள ஏற்பாடுகள் பொலிசார், இராணுவத்தினர் அதேபோல் சுகாதாரப் பிரிவினர் மற்றும் கோவில் நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் சுகாதார பிரிவினரால் சுகாதார நடைமுறைகள் தொடர்பான விடயங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மக்கள் அதனைப் பின்பற்றி தமது வழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றார்கள்.

எனினும் அண்மைய நாட்களில் ஆலயத்திற்கு வரும் அடியவர்களின் எண்ணிக்கை சற்று அதிகமாக காணப்படுகின்றது. மக்கள் இது தொடர்பில் சற்று தெளிவாக இருக்க வேண்டும். தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று சற்று தணிந்து காணப்படுகின்றது. எனினும் சமூக தொற்று தொடர்பில் நாம் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

உதாரணமாக அண்மைய நாட்களில் இராஜாங்கனைப் பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவருக்கு தொற்று இனங்காணப்பட்ட விடயம் தொடர்பில் நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தினைப் பொறுத்தவரைக்கும் கொரோனா தொற்று ஏற்படாவண்ணம் பாதுகாப்பு பிரிவு மற்றும் சுகாதாரப் பிரிவினரின் முயற்சியால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம். மக்களின் பூரண ஒத்துழைப்புடன் அதனைச் செயற்படுத்தியுள்ளோம்.

எனினும் நல்லூர் ஆலயத்தை பொறுத்தவரையில் நாட்டின் அனைத்துப் பாகங்களிலுமிருந்தும் பொதுமக்கள் ஆலய தேர் உற்சவத்தில் கலந்து கொள்வது வழமை. நாட்டில் கொரோனா தொற்று அச்ச நிலைமை காணப்படுவதன் காரணமாக இம்முறை அவ்வாறு இடம்பெற அனுமதிக்க முடியாது.

இம்முறை நல்லூர் ஆலய உற்சவத்தின் தேர் உற்சவம் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த முறை ஆலய தேர் உற்சவத்திற்கு மக்கள் அதிகளவில் வருவதை தவிர்த்து சமூகத் தொற்றிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் என்ற ரீதியில் எனக்கு ஒரு கடமையுள்ளது. அதாவது சமூகத் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது. அந்தரீதியில் இந்த வேண்டுகோளை உங்களிடம் முன்வைக்கின்றேன்.

மக்கள் நல்லூர் ஆலய தேர் உற்சவத்திற்கு அதிகளவில் வருகை தராது வீடுகளிலிருந்து தரிசியுங்கள். அது உங்கள் எதிர்காலத்திற்கு நல்லதாக அமையும். இந்த விடயத்தினை கருத்தில் கொண்டு நாளை இடம்பெறும் நல்லூர் ஆலய தேர் உற்சவத்திற்கு அடியவர்கள் வீட்டில் இருந்தவாறே முருகக் கடவுளை தரிசியுங்கள் என கோரிக்கை விடுக்கின்றேன் என்றார். (ஞா-101)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** கொழும்புத்துறை மணியந்தோட்டம், உதயபுரம், உதயபுரம் Infants Ice Solutions பிறைவேற் லிமிற்றெட் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** பத்தினியார்மகிழங்குளம் கிராமம், மகாகச்சக்கொடிய கிராமம், கோவில் குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம் வரை, ஆண்டியப் புளியங்குளம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

## கட்டுநாயக்கவைத் திறக்க விரைவில் நடவடிக்கை

### சுற்றுலாத்துறை அமைச்சர்

(கொழும்பு)

அமைச்சுகளின் எதிர் வரும் திட்டங்களை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பகுதியில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


சுகாதார பிரிவுகளின் அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை மீண்டும் திறப்பதற்கு தயார் என அமைச்சர் கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கட்டுநாயக்க விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

வாழ்வில் அணியாகவும் தாழ்வில் தக்க துணையாகவும் விளங்குவது கல்வி. -அரிஸ்ரோட்டில்

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- கடவுளின் ஜீவன் எங்கிருக்கிறதோ அங்கு சுதந்திரமுண்டு.
- வேஷதாரியே, முதலில் உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்தெறி. பிறகு, உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பை எடுத்தெறியத் தெளிவாய்ப் பார்க்கலாம்.
- சிறைக்கு வழி நடத்துபவன் சிறைக்குள்ளே போவான். வாளாலே கொல்லுகிறவன் வாளாலே கொல்லப்பட வேண்டும்.
- சகோதரரே, நீங்கள் சுதந்திரத்துக்கு அழைக்கப்பட்டுஇருக்கிறீர்கள். சுதந்திரத்தை உங்கள் சரீர இச்சைகளுக்குரிய ஒரு சந்தர்ப்பமாக உபயோகப்படுத்த வேண்டாம். ஆனால், அன்பினால் ஒருவருக்கொருவர் பணிபுரியப் பயன்படுத்துங்கள்.
- எதைச் சாப்பிடுவோம், எதைக் குடிப்போம், எதை உடுத்திக் கொள்வோம் என்று சிந்திக்க வேண்டாம். ஏனெனில் இவைகளையெல்லாம் அறிவிலிகளே தேடியலைகிறார்கள்.
- அக்கிரமக்காரர் எதிர்பார்ப்பது அழிந்தே போகும். நேர்மையானவனோ இடுக்கண்ணிலிருந்து விடுவிக்கப்படுவான்.

# சொல்ல மறந்த கதை

## நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

மேற்கத்தேய நாடொன்றின் அரசியல் வாதியொருவர் தென் ஆசிய நாடொன்றிற்கு சுற்றுலா சென்றார். அந்த நாட்டின் முக்கிய நகரத்தை சுற்றிப்பார்க்க காரொன்றை வாடகைக்கமர்த்தினார். நகரத்தை முழுவதும் சுற்றிப்பார்த்த பின் "வாடகை எவ்வளவு " என கார் சாரதியிடம் கேட்டார். "ஆயிரத்து ஐந்நூறு" என்றான் சாரதி. உடனே இரண்டாயிரத்தைக் கொடுத்து "வைத்துக்கொள்" என்றார் சுற்றுலா வந்த அரசியல்வாதி. "ஐயா அதிகமாகத் தந்துவிட்டீர்கள்" என்றான் சாரதி. "அது உனக்கு நான் சந்தோசமாகத் தருவது" என்றார் சுற்றுலா அரசியல்வாதி. "உங்கள் நல்ல குணத்திற்கு நன்றி. நீங்கள் அங்கு என்ன செய்கிறீர்கள்" என சாரதி வினாவினான்.

"நான் என் நாட்டில் அரசியல்வாதியாக இருக்கிறேன். சொந்தக்கார் என்னிடமிருந்தாலும் தேர்தல் காலங்களில் வாடகைக் காரிலேயே பயணிப்பேன். பயணம் முடிந்ததும் சாரதி சொல்லும் வாடகைக் கட்டணத்தை விட அதிகமாகக்கொடுப்பேன். அப்போது அவன் என்னைப்பற்றி விசாரிப்பான். அதற்கு நானொரு அரசியல்வாதி என்று சொல்லி என்னை அறிமுகம் செய்து என் கட்சிப் பெயரையும், சின்னத்தையும், என் விருப்பு இலக்கத்தையும் கூறிச்செல்வேன். நிச்சயம் அவன் வாக்களிக்கும்போது என் தாராள குணத்தை நினைத்து எனக்கே வாக்களிப்பான். இது என் தேர்தல் தந்திரோபாயம்" என்றார் மேற்கத்தேய அரசியல்வாதி. "அது சரி உங்கள் நாட்டு அரசியல்வாதிகள் எப்படி. அவர்களின் தேர்தல் தந்திரோபாயங்கள் எப்படி" என்று வினவினார்.

"அவர்கள் எமகாதகர்கள். காரை வாடகைக்குப்பிடிப்பார்கள். நாள் முழுவதும் சுற்றுவார்கள். பயணம் முடிந்து வாடகைக்கட்டணத்தை நாங்கள் கேட்டால் எங்கள் கன்னத்தில் அறைவார்கள். காலால் உதைப்பார்கள். காசா கேட்கிறாய் என்று மிரட்டிவிட்டு தாங்கள் வேறு கட்சியொன்றின் ஆதரவாளர்களென கூறி தமக்கெதிரான கட்சியின் பெயரைச் சொல்லிவிட்டுப் போவார்கள். நாங்களும் அதை உண்மையென நம்பி அந்தக் கட்சியை வெறுப்பதுடன் அவர்களுக்கெதிரான இவர்கள் சார்ந்த கட்சிக்கு வாக்களிப்போம். அடித்து உதைத்து விட்டு அதற்கு உபகாரமாக எம் வாக்குகளையும் சூறையாடும் தந்திரம் மிக்கவர்கள் நம் அரசியல்வாதிகள்"என்றான் வாடகைக் கார் சாரதி. செலவில்லாமலே வாக்கு வேட்டையாடும் தந்திரத்தில் நம்மவர்கள் வல்லவர்கள் என்பதை மேற்கத்தேய அரசியல்வாதி புரிந்து கொண்டார்.

நம் அரசியல்வாதிகள் தேர்தல் தந்திரோபாயங்களில் என்னதான் ஆகாசசூரர்களாக இருந்தாலும், கணிசமான வாக்குகள் ஒவ்வொரு தேர்தலிலும் நிராகரிக்கப்படுவதை தடுக்கமுடியாமல் கோட்டை விட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். சில மாவட்டங்களில் ஒரு நாடாளுமன்ற ஆசனத்தையே பெறக்கூடியளவு வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருப்பது. அதிலும் குறிப்பாக யாழ். வன்னி மாவட்டங்களில் இது நிகழ்ந்திருப்பது கவலையே.

### நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்து விட்டால் வெற்றி - தோல்வி என்பவற்றுடன் பிரதான பேசுபொருளாக நிராகரிக்கப்பட்ட வாக்குகளும் முக்கியத்துவம் பெறுவது வழமை. இம்முறை நாடுமுழுவதிலுமாக 744373 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் சுமார் 6.5% ஆகும். யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை 35006 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது சுமார் 9% ஆகும். இது கிட்டத்தட்ட ஒரு நாடாளுமன்ற ஆசனத்தைப் பெறக்கூடியளவு வாக்குகளாகும்.

வன்னி மாவட்டத்தில் சுமார் 10% வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் வாக்காளர் தொகை அதிகமுள்ள கம்பஹா மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 4% தான்.

இதிலிருந்து தமிழ் வாக்காளர்களை விட சிங்கள வாக்காளர்கள் வாக்களிப்புத் தொடர்பாக அதிக தெளிவுடையவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இம்முறை கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு வடக்கு மற்றும் மத்திய தேர்தல் தொகுதிகளில் கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கு காரணம் மேற்படி தொகுதிகள் ஐ.தே.கவின் கோட்டைகளாகும். இம்முறை ஐ.தே.க.பிளவுபட்டு தம்மிடையே மோதிக்கொண்டதால் ஐ.தே.கவிற்குரிய கணிசமான நிலையான வாக்குத்தளம் விரக்தியுற்று தம் வாக்குகளை வீணடிப்பதற்காக அதை நிராகரிக்கும் வகையில் பிரயோகித்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனாலேயே அங்கு இம்முறை வாக்களிப்பு விகிதமும் குறைவடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கொழும்பு மாவட்டத்தில் சுமார் 7% வாக்குகள் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் வடக்கு- கிழக்கில் இம்முறை நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தென்னிலங்கையை விட அதிகமாகவேயுள்ளன.


இம்முறை தேர்தலில் நாடுமுழுவதும் சராசரியாக 6.5% வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சுமார் 5% வாக்குகளும், ஜனாதிபதி தேர்தலில் 2% வாக்குகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன. முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இம்முறை நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகமாகவிருப்பதற்கான காரணங்களிலொன்றாக இம்முறை வாக்களித்தவர்களில் 31% முதல்முறையாக வாக்களித்துள்ளனர் எனக்கூறப்படுகின்றது. எது எவ்வாறாயினும் எமது விகிதாசார தேர்தல் முறைமையும் பல சிக்கல்களுக்கு காரணமாக அமைந்துள்ளதையும், வாக்காளர்களை தெளிவூட்டுவதில் தேர்தல் திணைக்களம், கண்காணிப்பு அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என்பன அக்கறையுடன் செயற்படவில்லையென்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

### அஞ்சல் வாக்குகளின் நிராகரிப்பு

அஞ்சல் வாக்கு முறைமை தேர்தல் பொது வாக்களிப்பு நாட்களில் பல்வேறு கடமைகளில் ஈடுபடும் அரச சேவையாளர்கள் தமது வாக்கினை பிறிதொரு தினத்தில் பிரயோகிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட விசேட ஏற்பாடாகும். இம்முறை சுகாதார சேவை அலுவலர்களும் அஞ்சல் வாக்களிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

அஞ்சல் வாக்குகள் நிராகரிக்கப்படும் போது சமூக ஊடகங்களும் சில பொதுஜன ஊடகங்களும் அதை ஊதிப்பெருப்பித்து அரச அலுவலர்களுக்கு தேர்தல் பற்றிய அடிப்படை அறிவேயில்லை என்பதுபோல் செய்திகளை வெளியிடுவதைக் காணலாம். ஆனால் அநேகமான சந்தர்ப்பங்களில் அஞ்சல் வாக்குகள் நிராகரிக்கப்படுவதற்கு சம்பந்தப்பட்ட அஞ்சல் வாக்காளர் காரணமில்லை என்பதை பலரும் அறிவதில்லை.

அஞ்சல் வாக்குச்சீட்டு அடையாளமிடப்பட்ட பின் B உறையென அழைக்கப்படும் உறைக்குள் வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட பின்னர் ஆளடையாள வெளிப்படுத்துகைப்படிவம் பூரணப்படுத்தப்பட்டு B



உறையுடன் இணைக்கப்பட்டு இறுதியாக A உறையினுள் வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு உரிய மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறான செயலொழுங்கில் பின்வரும் சந்தர்ப்பங்களில் அஞ்சல் வாக்கு நிராகரிக்கப்படலாம்.

- ➢ ஆளடையாள வெளிப்படுத்துகை படிவத்தை இணைக்காது விடுதல்.
- ➢ ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தை வாக்குச்சீட்டுடன் சேர்த்து B உறையினுள் வைத்தல்.
- ➢ ஆளடையாள வெளிப்படுத்துகைப் படிவத்தை சரியாக பூரணப்படுத்தாது விடுதல் (வெளிப்படுத்துநர் ஒப்பம், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஒப்பம் இடப்படாமையும் இலட்சனை பதிப்பிடாமையும்)

இவையனைத்துமே அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கவலையீனத்தால் நிகழ்பவை. எனவே அஞ்சல் வாக்காளர் சரியாக வாக்களித்தாலும் மேற்குறித்த தவறுகளால் மேற்படி வாக்குகள் நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது.

### தேர்தல் திணைக்களம், கண்காணிப்பு அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் அசமந்தம்

சற்று சிக்கலான விகிதாசார தேர்தல் முறைமையில் சரியாக வாக்களிப்பது தொடர்பில் வாக்காளரைத் தெளிவூட்ட வேண்டிய பொறுப்பு மேற்குறித்த மூன்று பகுதியினருக்கும் உள்ளது.

ஆயினும் அவர்கள் அதனை சரியாக செய்ததாகத் தெரியவில்லை. தேர்தல் திணைக்களம் ஊடகங்கள் ஊடாகவும், கிராம சேவை அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மூலமாகவும் வாக்களிப்புத் தொடர்பான விளக்கங்களை மக்களுக்கு வழங்கியிருக்கலாம். இதனை அவர்கள் போதியளவில் செய்ததாகத் தெரியவில்லை. தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னதாக அவசர அவசரமாக பாடசாலைகள் ஊடாக இதனைச் செய்யுமாறு தேர்தல் திணைக்களம் கல்வி நிர்வாகத்தை கோரியதை (அதுவும் பாடசாலைகள் சீராக இயங்காத நிலையில்) அவதானிக்கும்போது தங்கள் பணியில் அக்கறையற்று இருந்துவிட்டு வேறு யாருடைய தலையிலாவது அதை சுமத்தி பின்னர் ஏற்படும் பின்னடைவுகளுக்கெல்லாம் அவர்களை குற்றஞ்சாட்டும் தந்திரோபாயமே வெளிப்பட்டது.

தேர்தலை தாங்களே மூழுமையாக கொந்தராத்து எடுத்ததுபோல் அடிக்கடி ஊடகங்களில் தலைகாட்டி சர்ச்சையான கருத்துக்களை தெரிவித்து வந்த ஆணைக்குழு உறுப்பினர்கள் கூட அதனைவிடுத்து வாக்களிக்கும் முறை பற்றி விபரமாக - விளக்கமாகச் சொல்லியிருந்தால் பிரயோசனமாகவிருந்திருக்கும்.

தேர்தலுக்கு முதல் நாள் கடதாசி மட்டையால் செய்யப்பட்ட வாக்குப்பெட்டி எவ்வளவு பலமானது - பாதுகாப்பானது என நிருபிக்க தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குனிந்து - நிமிர்ந்து, வளைந்து- நெளிந்து ஊடகங்கள் முன்னால் காட்டிய செயல் விளக்கத்தை விட வாக்களிப்பு பற்றிய செயல் விளக்கமொன்றை செய்து காட்டியிருந்தால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கும்.

பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் சின்னங்களைத்தவிர ஏனைய கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு சின்னங்களை ஒதுக்கும்போது தேர்தல் திணைக்களம் மக்களுக்கு மயக்கத்தைக் கொடுக்காத வகையில் சின்னங்களை ஒதுக்கியிருந்தால் இம்முறை வாக்களிப்பு ஆரோக்கியமாவிருந்திருக்கும். கடந்த கால அனுபவங்களிலிருந்து தேர்தல் திணைக்களமும், ஆணைக்குழுவும் இன்னும் பாடம் படிக்கவில்லை என்பதே வெளிப்படுகிறது.

தேர்தல் கண்காணிப்பு என்பது தன் நோக்கத்துடன் பயணிப்பதாக தெரியவில்லை. இதற்காகக் கிடைக்கும் பெருமளவு வெளிநாட்டு, உள்நாட்டு நிதியீட்டங்கள் மேலிடத்திலுள்ளவர்களை தங்கள் இருக்கைகளிலிருந்து அசைய முடியாமல் செய்துவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது. கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை எண்ணிச் சொல்வது மட்டும் தேர்தல் கண்காணிப்புப் பணியன்று, களத்திற்குச் சென்று அவதானிப்பது, சுயாதீனமாக தேர்தல் நடக்க வழிசமைப்பது, மக்களை வாக்களிப்புத் தொடர்பில் அறிவூட்டுவது எல்லாம் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்குள் உள்ளடங்கும். கடந்த சில தேர்தல்களில் பிரதான கண்காணிப்பு அமைப்புக்கள் களத்தில் தம் ஆளணியை நேரே இறக்காமல் பிரதேச ங்களிலுள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு கையளித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தில் வெவ்வேறு நோக்குடன் இயங்கும் இத்தகைய நிறுவனங்கள் தேர்தல் கண்காணிப்பில் தேர்ச்சியற்ற தம் ஆளணியை பணிக்கமர்த்துவது ஆரோக்கியமற்றதே. எல்லாம் ஒப்பந்தபொதி **(Contract package)** என்ற வகையில் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களுக்கு இது இலாபகரமாக இருக்கலாம். ஆனால் கண்காணிப்புப் பணியின் நம்பகத்தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகவே அமையும்.

### மேலும் தேர்ச்சியற்ற இளையோர்

இப்பணிகளில் ஈடுபடும் போது தேர்தல் கடமை அலுவலர்களுடன் கண்ணியமின்றி நடப்பதாகவும் ஆதங்கங்கள் உள்ளன.

நிராகரிக்கப்பட்ட வாக்குகள் விடயத்தில் அரசியல்கட்சிகளுக்கும் பங்குண்டு. தம் கட்சித் தொண்டர்கள் ஆதரவாளர்களை வாக்களிக்கும் முறை பற்றி தெளிவூட்ட வேண்டியது இவர்களின் கடமையாகும். ஆனால் வாக்குகளில் குறிவைக்கும் இவர்கள் அவை செல்லுபடியாகும் வாக்குகளாக இருக்கவேண்டுமென்பதில் கவனம் செலுத்துவதில்லை.

அநேகமான கட்சிகள் கூட்டிணைந்தே இம்முறை தேர்தலில் போட்டியிட்டன. அந்தக்கூட்டிற்கு ஒரு பெயரிடப்பட்டது. ஆயினும் அக்கூட்டிலுள்ள ஒரு கட்சியின் பெயரிலேயே வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. ஆகவே வாக்குச்சீட்டில் குறித்த கட்சிப்பெயரும், சின்னமுமே காணப்படும் எவ்வாறாயினும் குறித்த சின்னத்துடன் கூட்டிணைப்பின் பெயரே தேர்தல் மேடைகளில் காட்சிப்படுத்தப்பட்டன. இதனால் வாக்காளர் வாக்குச்சீட்டைப் பார்த்தும் குழப்பமடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. மேலும் விருப்பு வாக்குப் போட்டியால் சில வேட்பாளர்கள் தமக்கு மட்டுமே வாக்களிக்கக் கோரினர். இதனால் இம்முறை அநேகமான வாக்குச்சீட்டுக்கள் ஒரு வேட்பாளருக்கு புள்ளடியிடப்பட்டதாகவே காணப்பட்டதாக கூறப்படுகின்றது. இதிலும் சில வேட்பாளர்கள் ஒரு படி மேலே சென்று நீங்கள் என் இலக்கத்திற்கு மட்டும் புள்ளடியிட்டால் அது எனக்கு மூன்று வாக்குகளாக எண்ணப்படுமென்று வாக்காளரை தவறாக வழிநடத்தியதாகவும் தகவல். சில தீவிர ஆதரவாளர்கள் வேட்பாளர் மேல் உள்ள விசுவாசத்தைக் காட்ட குறித்த இலக்கத்திற்கே 3 புள்ளடிகள் இட்டதாகவும் தகவல். எனவே வாக்குகள் நிராகரிக்கப்பட்டதற்கு வாக்காளர்களை நோக்கி சுட்டுவிரலை நோக்கிக் காட்டும் தேர்தல் ஆணைக்குழு, கண்காணிப்பு அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஏனைய மூன்று விரல்களும் தம்மையே சுட்டுவதை சற்று அவதானித்தால் எதிர்கால தேர்தல்களாவது ஆரோக்கியமாக அமையும்.

**கோகர்ணன்.**

## பட்டதாரிகள்...

ராச்சி தெரிவித்துள்ளார்.

குறித்த வேலைத்திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி நடைமுறைக்கு வரவுள்ள நிலையில் இத்திட்டத்தின் கீழ் பட்டதாரிகள் அனைவரும் இணைக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதில் எமக்கு எவ்வித கவலையும் இல்லை. எனினும் 12 ஆயிரம் பட்டதாரிகளும் தகுதி வாய்ந்தவர்கள். ஆனால் அவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

சமனான தகுதிகளில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகளை தேர்ந்தெடுக்கும்போது 12 ஆயிரம் பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். (ஞ)

## ரணிலுக்கு...

பதி விசாரணை ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னதாக அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, எதிர்வரும் 25 ஆம் திகதி முன்னிலையாகுமாறு அவருக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இரா.சம்பந்தன், அநுரகுமார திசாநாயக்க, எம்.ஏ சுமந்திரன் உள்ளிட்ட மேலும் சிலரையும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.(ஞ)

## திடீரென 30...

தென்மராட்சியில் மொத்தமாக 180 பேருக்கு இப் பரிசோதனை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் முதற்கட்டமாக நாவற்குழிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அடுத்த வாரம் மட்டுவில் கிராமத்தில் கோவிட் - 19 பரிசோதனை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா சமூகப் பரவலைக் கண்காணிக்கும் நோக்கில் சமூகத்தோடு நெருக்கமாகப் பழகுபவர்கள் மற்றும் சமூக மக்களிடையே இப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. (ஞ)

## புதிய அரசியல...

உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது மிகவும் பயங்கரமான நிலைமை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை அரசியலமைப்புச் சட்டத்தை மீறியே ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக பதவி வகித்து வருகிறார்.

அந்தப் பதவிக்கு வேறு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் நியமிக்கப்பட வேண்டும். அத்துடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது 76 வயதுக்கும் மேல் ஆகிறது. அவரது அமைச்சுக்களின் கீழ் 85 நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றார். (ஞ)

## அரசியலமைப்பு...

சமூகத்தினருக்கு உரிய அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அரசியலமைப்புசார் பிரச்சினைகளுக்கும் முரணற்ற விதத்தில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியலமைப்புசார் பிரச்சினைகளுக்கு தீர்வு முரண்பாடற்ற விதத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.

பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரை தொடர்ந்து புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும். அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றார். (ஞ)

## ஒன்பது மாகாண...

டாரங்களில் இருந்து அறிய முடிகிறது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டிலுள்ள 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறும் எனவும் தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியாக தடங்கலாக உள்ள காரணிகள் சட்ட திருத்தம் மூலம் சீர்செய்யப்படவுள்ளது எனவும் தெரிய வருகின்றது.

மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்தாலும் நிதிப் பற்றாக்குறை காரணமாக, வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். பட்ஜெட் மீது சுமார் ஒரு மாத காலம் தொடர்ச்சியாக விவாதம் நடைபெறும். இதன்படி டிசம்பரில் வரவு செலவுத் திட்டம் நிறைவேறும். அதன்பின்னர் ஜனவரி மாதம் வரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்.

எனவே பெப்ரவரி மாதத்தில்கூட தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படலாம் என ஆளுங்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தின்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் கட்டங்கட்டமாகவே நடத்தப்பட்டது. ஆனால் இம்முறை ஒரே நாளில் நடத்தப்படும். (ஞ)

## கோட்டா அரசு...

கின்றது. எனவே, தமிழ் மக்களையும் அரவணைத்துக் கொண்டு வளமான எதிர்காலத்தை நோக்கி எமது பயணத்தைத் தொடர்வோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்முடன் விதண்டாவாதம் பேசாமல் அமைதியாக இருப்பதே நல்லது. கூட்டமைப்பினரை 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் நிராகரித்துள்ளார்கள்.

எனவே, கூட்டமைப்பினரின் கருத்துக்களைக் கேட்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாம் தமிழ் மக்களின் கருத்துக்களையே கேட்போம்.

தமிழ் மக்களுக்கு இங்கு பாதுகாப்பு இல்லை என்று பல பொய்களைக் கூறி சர்வதேசத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனிமேல் அழைக்க முடியாது.

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு இராணுவமே முழுப் பாதுகாப்பு. எம்மை நம்பிய தமிழ் மக்கள் மீது நாம் அதிக கவனம் செலுத்துவோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் இலங்கையின் சுயாதீனத்துக்கு அச்சுறுத்தலாக இருந்த ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு நல்லாட்சி அரசு வழங்கிய இணை அனுசரணை வாபஸ் பெறப்பட்டுள்ளது. அதனால் ஐ.நா. தீர்மானங்களும் செல்லுபடியற்றதாகி விட்டன.

இந்தப் புதிய அரசில் இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் எந்தத் தீர்மானங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என குறிப்பிட்டுள்ளார். (ஞ)

## தேசியப் பட்டியல்...

நடக்கும் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை ஆராய்ந்து, நடவடிக்கையெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயற்குழு நேற்று திருகோணமலையில் கூடியது.

இதன்போது, தமிழ் அரசுக் கட்சியின் ஒரு குழுவினரால் தேசியப்பட்டியல் ஆசனம் இரகசியமான முறையில் பெறப்பட்டது குறித்து ஆராயப்பட்டது.

அம்பாறை த.கலையரசனிற்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்பட் டது குறித்து யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆனால், அது வழங்கப்பட்ட முறை தவறானது என பலரும் சுட்டிக்காட்டினர்.

பங்காளிக் கட்சிகளிற்கு தெரியாமல் - திருட்டுத்தனமாக இது நடந்துள்ளது என்பதை பலரும் சுட்டிக்காட்டினர். மாவை சேனாதிராஜா, கே.வி.தவராஜா, குலநாயகம் என பலரும் இதை சுட்டிக் காட்டினர்.

எனினும், மாவை சேனாதிராஜா அதை மறுத்தார். தனக்கு இது பற்றி தெரியாதென்றும், கட்சி தலைவரான தனக்கு தெரியாமலே செயலாளர் நடந்து கொண்டது தவறு என்பதை சுட்டிக் காட்டினார்.

அங்கு கருத்து தெரிவித்த கே.வி. தவராசா,

“இது அடிப்படை நெறிமுறைகளிற்கு முரணானது. தலைவர் சம்பந்தன் ஐயா நூற்றிச் சொச்ச வாக்கினால் தான் வென்றீர்கள். ஒருவேளை நீங்கள் தோல்வியடைந்திருந்தாலும், இதுதான் நடந்திருக்கும். கட்சி முடிவுகளிற்கு அப்பால் தான்தோன்றித்தனமாக யார் இப்படி நடப்பது. இதன்பின்னணி யார் என்பதை முறையாக கண்டுபிடித்து நடவடிக்கை யெடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தேசியப்பட்டியலை முறையற்ற விதமாக வழங்கிய விவகாரத்தில் தொடர்புபட்டிருந்த எம்.ஏ.சுமந்திரன் அணியினர் இதன் போது மௌனமாக உட்கார்ந்திருந்தனர்.

விவகாரத்தை திசை மாற்ற முயன்ற செயலாளரும் முடியாமல் சுருதி இறங்க, ஆபத்பாந்தவனாக களமிறங்கிய இரா. சம்பந்தன் காப்பாற்றினார்.

02

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 15-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2510
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 14 19 31 75
தேசிய லொத்தர் சபை

**சுபிரி வாசனா**

சீட்டிழுப்பு திகதி 2020 / 08 / 15
சீட்டிழுப்பு இலக்கம் 1526
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 04 13 22 61
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

**ஜாதிக சம்பத**

சீட்டிழுப்பு திகதி 15-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 1046
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 2 1 5 4 8 2
தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

திகதி 2020/08/15
சீட்டிழுப்பு இலக்கம் 4215
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 0 4 8 8 7
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**

திகதி 15/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0582
வெற்றி எழுத்து C
சுப்பர் இலக்க 06
வெற்றி இலக்கங்கள் 11 45 51 75

**அத கோடிபதி** ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 1011
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,986,560/-
வெற்றி இலக்கங்கள் 33 48 52 53
ஆங்கில எழுத்து J
அபிவிருத்தி லொத்தர் சபை
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

சீட்டிழுப்பு இல.: 3351
திகதி: 2020.08.15
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 39 48 75
ஆங்கில எழுத்து L
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் ரூ. 36,627,439.50
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம் 2892
வர்ணம் இளம் நீலம்
திகதி 15.08.2020
வெற்றி இலக்கங்கள் 06 18 42 52
துலாம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,930,280
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 1192
சீட்டிழுப்பு திகதி 15.08.2020 நீலம்
L 22 32 67 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,642,565.20
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## கடலட்டை...

வில் உள்ள கடல் பகுதிக்கு கொண்டு சென்ற மூவரை ஒரு டிங்கிப் படகுடன் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 19, 21 மற்றும் 23 வயதுடைய மூன்று சந்தேக நபர்களும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் மீன்வள மற்றும் நீர்வளத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஞா)


### நிரந்தர வேலைவாய்ப்பு

வடபகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவனமான NFlash Super Detergent புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய நபர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத்தேர்வு 10 முதல் A/L வரை.
மூன்று மாத கால பயிற்சியின் போது 15000 /- வருமானம்.
பயிற்சியின் பின் 40000/- ற்கு மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.
**மேலதிக சேவைகள் – EPF, ETF, Medical,**
**ஆங்கிலம், சிங்களம் கற்பதற்கான வசதி.**
**பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.** (C-052)
**Tel : 077 552 1626, 021 222 2855**
602a, K.K.S Road, Jaffna.

### K.P TRAVELS

**புதிய பேருந்து சேவை - தினசரி**
மீண்டும் புதுப்பொலிவுடன் 17.08.2020
திங்கட்கிழமை தொடக்கம் தினசரி K.P Travels இன்
யாழ்ப்பாணம் - திருகோணமலை சேவை ஆரம்பம்.

- யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.45 மணிக்கு புறப்படும்
- திருகோணமலையிலிருந்து மாலை 4.45 மணிக்கு புறப்படும்

**சாதாரண கட்டணம்**



(3581)
**தொடர்பு**
**077 630 9888**
**077 373 7462**


# தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோர
# அனைத்து தரப்புக்களும் ஒத்துழைத்து எம்மோடு பயணிக்க வேண்டும்
## பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்

(முல்லைத்தீவு)

தமிழ்த்தேச அங்கீகாரத்திற்காக நாங்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கும், அத்தோடு தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதியைக் கோருகின்ற வகையிலேயும் நாங்கள் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும், அத்தோடு தமிழ்த்தேசம் திட்டமிடப்பட்ட வகையிலே கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அழிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிலையிலே, அந்த தேசத்தினைக் கட்டியெழுப்பி எமது சுய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுக்கின்றபோது அனைத்துத் தரப்புகளும் ஒத்துழைத்து எம்மோடு பயணிக்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பின்னர், முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நேற்று சுடரேற்றி, பூத்தூவி உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலிகளை மேற்கொண்டு தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முதல் தடவையாக எமது மக்கள் ஒரு ஆணையினை வழங்கியிருக்கக் கூடிய நிலையில், இந்த மக்களுடைய போராட்டத்தின் உயிர்த் தியாகங்களுக்கு மேலாக நாங்கள் எமது மக்களுக்கு எந்தக் கொள்கையினை முன்வைத்து ஆணையைக் கேட்டோமோ அந்தக் கொள்கைக்கு நேர்மையாக நாங்கள் செயலாற்றுவோம் என்ற உறுதி மொழியினை நாங்கள் இங்கு முள்ளிவாய்க்காலில் எடுத்திருக்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் எடுப்பதற்கான பிரதான நோக்கம், எங்களுடைய கொள்கைக்கு நேர்மையாக பயணிக்கின்ற, நேர்மைத் தன்மையினை வெளிப்படுத்துகின்ற வகையிலே நாங்கள் இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்திருக்கின்றோம்.

எம்மைப் பொறுத்த வரையிலே இந்தப் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு இருக்கக்கூடிய அரசியல் நிலைமைகள் மிகவும் சவாலுக்குள்ளே எம்முடைய இனத்தை தள்ளுகின்ற நிலைமையினைத்தான் உருவாக்கியிருக்கின்றது.

விசேடமாக எந்தத் தரப்பு எங்களைத் திட்டமிட்டு முள்ளிவாய்க்காலிலே அழிக்க முற்பட்டதோ, அந்தத் தரப்பு கடந்த பத்து வருடங்களாக காப்பாற்றப்பட்டு இன்று ஆட்சிபீடத்திற்கு ஏறியிருக்கின்ற ஒரு நிலையினைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆகவே தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், இனியும் நாங்கள் ஏமாந்து ஒரு பிழையான பாதையிலே தெரிந்தோ தெரியாமலோ செல்வது ஒரு தெரிவல்ல.

அந்த வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த பத்து வருடங்களாக ஒரு நேர்மையான அரசியலை எம்முடைய மக்களுக்குக் காட்டி வந்திருக்கின்றது. அந்த நேர்மையான அரசியலுக்கு ஒரு ஆணை கிடைத்திருக்கின்றது என்றார். (ஞா)


### ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம். சுபம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் யாழ்ப்பாணம். (C-071)
**076 328 7119**

### அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

5 kg / 11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | ரூ.1500/ரூ.1300 |
| ஜேர்மனி | ரூ.1500/ரூ.1300 |
| டென்மார்க | ரூ.1500/ரூ.1300 |
| கொலண்ட் | ரூ.1500/ரூ.1300 |
| பெல்ஜியம் | ரூ.1600/ரூ.1300 |
| இத்தாலி | ரூ.1700/ரூ.1450 |
| லண்டன் | ரூ.1500/ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள் (C-001)
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
லண்டன்-1000/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1500/=
சுவிஸ்- 1400/= அவுஸ்ரேலியா- 1600/= / 1000/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 075 5522999 076 1221566 | பளை மன்னார் கொழும்பு 12

### முக்கிய அறிவித்தல்
### இனுவில் மக்லோட் வைத்தியசாலை

**கருவள சிகிச்சை (IVF) முற்று முழுதாக நீங்கள் எமது வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.**

#### நீங்கள் பெறக்கூடிய நன்மைகள்

- அதிகூடிய கருத்தங்கல் வீதம் எங்கள் வைத்தியசாலையில்
- சிறந்த அனுபவம் வாய்ந்த Embryologist.
- மிகக் குறைந்த மொத்தச் செலவு.
- இயற்கையான சூழலில் சிறந்த அனுபவம்மிக்க VOG இன் நேரடிக் கண்காணிப்பில் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
- குழந்தையின்மைக்கான சிகிச்சை, செயற்கை கருக்கட்டல், கருவள சிகிச்சை (IVF) மற்றும் பெண் நோயியல், கர்ப்பவதிகளுக்கான விசேட வைத்திய ஆலோசனைகள் வைத்திய நிபுணர்களால் (VOG) தினமும் மாலை 4.00 மணிக்கு வழங்கப்படுகின்றது.

(C-070)

16.08.2020 இன்று காலை 8.00 மணிக்கு கொழும்பில் பிரசித்திபெற்ற கருவள சிகிச்சை (IVF) வைத்தியர் Dr.H.ரத்தினாயக்கா வருகை தருகின்றார்.

முற்பதிவுகளுக்கு
**021 224 1569, 021 224 3648, 076 394 4346**

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் (சாப்பாட்டுக் கடை) ஒன்றில் பாவித்த நல்ல நிலையில் உள்ள தளபாடங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்கள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்புகளுக்கு (3583)
**077 125 8072/ 071 104 1851**

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

Honda CD 185 மற்றும் 2007 Hero Honda Super Splender இல் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (3588)
**077 898 9691**
(யாழ்ப்பாணம் - கச்சேரி)

### விரைவு பொதிகள் சேவை
### V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (C-006)
**0768226240**

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1987ம் ஆண்டு, 5' 6", பூரட்டாதி 2ம் பாதம், கி.பாவம் 39, சூரி + செவ்வாய்- 11 இல், B.Sc., M.Sc., அரச தொழிலில் உள்ள மணமகனிற்கு மணமகள் தேவை.
எதிர்பார்ப்பு - பட்டதாரி, அரச தொழில் (3561)
**தொடர்பு : 077 693 6744**

### காணிகள் / வீடுகள்

கொக்குவிலில் 2 3/4 பரப்பு காணி மற்றும் 1 3/4 பரப்பு, மாலு சந்தி ( அல்வாய்) 4 1/2 பரப்பு காணி, வடமராட்சியில் 10 பரப்பு காணியில் ஒரு புத்தம் புதிய பங்களா விற்பனைக்குண்டு.
இலங்கையில் எப்பாகத்திலுருக்கும் காணிகள், வீடுகள், கடைகள் என்பவற்றில் சில உடன் விலைக்கு வாங்குவோம். (3584)
தொடர்புகளுக்கு
**077 522 1132, 076 534 6562, 077 147 9416**

### தேவை

நல்லூரில் அமைந்துள்ள பூங்கன்று விற்பனை நிலையம் ஒன்றுக்கு பராமரிக்கக்கூடிய ஆண் ஒருவர் தேவை. (3573)
**077 025 6640**



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
விலை : 30.00
வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்
நாதம் 271
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2051 16.08.2020 தொலைபேசி : 021 222 3378



புதிய அமைச்சரவை

## அரசியலுக்குள் சிக்குண்ட கேதீச்சரத்தை காப்பாற்றுங்கள்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கம் கோபாவேசம் கொண்டவராக இருப்பதை அவரின் முகபாவனை உணர்த்தி நின்றது.

விதானையாரின் கோபத்திற்குப் பலமான காரணம் இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும் எண்டாலும் அதனைக் கேட்பதற்கு எவரும் துணிந்திலர். அதனால் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

அமைதி நீடிப்பதை விரும்பாத பண்டிதர் பரமலிங்கம் என்ன முன்னணிக்குள்ளும் குழப்பம் போல என இழுத்தார்... பண்டிதர் இவ்வாறு கூறியதும் ஆலடி அலேட்டாகியது.

என்ன பண்டிதர் சொல்லுறியள் சாத்திரியார் சட்டென்று கேட்டார்.

பண்டிதர்: முன்னணியில இருந்து மணியை நீக்கிற வேலை நடக்குதாம். தாங்களாக கட்சியில இருந்து நீக்கிறது அவ்வளவு நல்லதல்ல என்பதால மணியிட்ட இருந்த ஊடகப் பேச்சாளர் பதவியையும் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கான அமைப்பாளர் பதவியையும் நீக்கிறதாக முன்னணி முடிவு செய்ததாகக் கேள்வி.

கங்காணி: அப்படிச் சொன்னால் கட்சியில இருந்து நாங்கள் நீக்கல்ல நீங்களா விலகிப் போங்க எண்ட மாதிரித்தானே!

மூப்பர்: அப்ப எங்கட அரசியலில கட்சிகள் இன்னும் அதிகரிக்கத்தான் போகுது எண்டு சொல்லுறியள்.

சிறாப்பர்: அதுவும் நல்லதுதான். ஒருத்தரை ஒருத்தர் விமர்சிப்பதற்கும் நடந்த உண்மைகளைச் சொல்வதற்கும் இப்படியான பிரிபாடல்கள் தேவைதான் போல.

கங்காணி: கட்சிகள் கனக்க உருவாகலாம். ஆனால் தமிழ் மக்களின்ர ஒற்றுமையல்லோ சிதறிப் போகுது.

பண்டிதர்: தமிழ் மக்களின்ர ஒற்றுமை சிதறும் எண்டு எப்படிச் சொல்லுறியள். இந்தாப் பாருங்க திருக்கேதீச்சர ஆலய நிர்வாகத்தில முக்கிய பதவி வகிக்கிறவர்கள் கடந்த



## மன்னார் மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

தேர்தலில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க வேணும் எண்டு கேட்டினம். அவர்களின்ர கோரிக்கையை ஏற்று தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரித்தினம். அதால வன்னியில கூட்டமைப்பில வெற்றிபெற்ற மூன்று எம்.பிகளும் கத்தோலிக்க மதம் சார்ந்தவர்கள்.

கங்காணி: அட சங்கதி அப்படியோ.

வாத்தியார்: ஏன் கங்காணியாருக்கு இதுகள் தெரியாதோ. வன்னித் தேர்தலில போட்டியிட்ட சத்தியமான டாக்குத்தர் நீதியரசர் விக்னேஸ்வரன் தன்னட்ட பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கிறதெண்டு சொன்னதாக ஒரு றீல் விட்டவரல்லோ.

மூப்பர்: அந்தப் பச்சைப் பொய்க்குத் தானே அவருக்குச் சனங்கள் பாடம் படிப்பித்துப் போட்டினம்.

சாத்திரியார்: ஆட்டுக்குள்ள மாட்டை விடாதீங்க. வன்னித் தேர்தல் மாவட்டத்தில திருக்கேதீச்சர நிர்வாகம் ஒரு கட்சியின்ர பெயரைக் கூறி அதனை ஆதரிக்கச் சொன்னது எண்டால் அது சரியோ. அப்ப நாளைக்கு மகிந்த அணியை ஆதரியுங்கள், சஜித்துக்கு வாக்களியுங்க எண்டும் சொல்லுவினம் தானே.

சிறாப்பர்: உண்மை... உண்மை... நூறுவீதம் உண்மை. திருக்கேதீச்சர ஆலயம் அரசியலுக்குள்ள வீழ்ந்து போயிற்றுது. இதை மீட்டெடுக்க சைவ மக்கள் தயாராகவேணும். இல்லையெண்டால் இண்டைக்கு கூட்டமைப்பை ஆதரியுங்க எண்டு சொல்லுறவியள் நாளைக்கு மகிந்தவை ஆதரியுங்க எண்டு சொல்லமாட்டினம் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

பண்டிதர்: என்ன இருந்தாலும் மன்னார் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகம் கூட்டமைப்பை ஆதரிக்குமாறு மக்களுக்குச் சொல்லி மூன்று கத்தோலிக்க வேட்பாளர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாக்கி இருக்கினம். இது பெரிய சாதனைதானே.

வாத்தியார்: அதெண்டால் உண்மைதான். அப்ப அவையள ஆதரித்த கோயில் நிர்வாகம் நுழைவு வாயில் வளைவைக் கட்டிப் போடுவினம் எண்டு சொல்லுறியள்.

விதானையார்: நடக்கும்... நடக்கும்... வெற்றி பெற்ற எம்.பிக்கள் மன்னார் ஆயரைச் சந்தித்து ஆசி பெற்றவியளாம். ஆனால் தங்கள ஆதரித்த திருக்கேதீச்சரத்து நிர்வாகத்தைத் திரும்பியும் பார்க்கல்ல எண்டெல்லோ சனங்கள் கதைக்கினம்.

வாத்தியார்: என்ன இருந்தாலும் திருக்கேதீச்சர நிர்வாகம் தேர்தலில ஒரு கட்சியின் பெயரைக் குறிப்பிட்டு அந்தக் கட்சியை ஆதரிக்கக் கோரியது மகா துரோகத்தனம்.

இது தொடர்பில மன்னார் மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகங்களைக் கலைக்க வேணும்.

விதானையார்: வாத்தியார் நீங்கள் இப்படிச் சொல்லுறியள். ஆனால் திருக்கேதீச்சர ஆலய நிர்வாகம் அரசியலில் ஈடுபட்டமை தொடர்பில இந்து அமைப்புகள் எவையும் கண்டிக்கவில்லைத் தானே.

மூப்பர்: அவையள் கண்டிக்காயினம். இப்படியான இடங்களில எங்கட சைவசமய அமைப்புகள் பௌவ்வியமாக நழுவிக் கொள்ளுவினம்.

சாத்திரியார்: என்னைப் பொறுத்தவரை இது விடயங்களில மன்னாரைச் சேர்ந்த சைவமக்கள் போர்க்கொடி தூக்க வேணும். மன்னாரைச் சேர்ந்த சைவமக்கள் தான் திருக்கேதீச்சர நிர்வாகத்தில இருக்கவேணும் எண்டும் வலியுறுத்த வேணும்.

மன்னாரைப் பூர்வீகமாகக் கொண்ட சைவ மக்களை ஓரங்கட்டிப் போட்டு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருக்கிறவியள் திருக்கேதீச்சர ஆலயத்தில இருந்து கொண்டு அரசியல் செய்யினம்.

இவ்வாறு சாத்திரியார் கோபமாகக் கூற, விறுக்கெண்டு விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் முழு நிர்வாகத்தையும் மன்னாரைப் பூர்வீகமாகக்கொண்ட சைவமக்களிடம் கையளிக்க வேணும்.

இதற்காக மன்னாரிலுள்ள சைவமக்கள் போராட வேணும். திருக் கேதீச்சர நிர்வாகம் அரசியலுக்குள் விழுந்து கிடக்கிற கொடுமையில இருந்து அந்த ஆலயத்தைக் காப்பாற்ற வேணும்.

இவ்வாறு விதானையார் ஆக்ரோசமாகக் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்த அனைவரும் வேகமாக எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழ் மக்கள் பேரவை பேரெழுச்சி பெறுவது காலத்தின் தேவை







நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தொடர்பில் பலவாறான கருத்துக்களும் விமர்சனங்களும் எழுந்தவண்ணமுள்ளன.

இதில் சரி, பிழைகளுக்கு அப்பால், தமிழர் தாயகத்தின் தேர்தல் முடிவுகள் அனைவருக்குமான படிப்பினையாக அமைந்துள்ளன என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட தவறுகள் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் அது தொடர்பில் கூட்டமைப்பின் தலைமை எந்தக் கரிசனையும் கொள்ளவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாங்களே எதையும் தீர்மானிப்போம். அது பற்றியெல்லாம் விளக்கம் கொடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை என்பதான கூட்டமைப்பின் இறுமாப்புக்குத் தமிழ் மக்கள் தக்கபாடம் புகட்டியுள்ளனர்.

மக்கள் புகட்டிய பாடத்திலிருந்து கூட்டமைப்பு கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்கள் ஏராளம்.

அதேநேரம் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்குச் சாதகமாக அமைந்தது. முன்னணியின் முக்கியஸ்தர்கள் இருவர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க மாற்றம் எனலாம்.

எனினும் இந்த வெற்றியை தமக்கான நிலைத்த வெற்றியாக மாற்றுவதில்தான் முன்னணியின் எதிர்காலம் தங்கியுள்ளது.

இருந்தும் முன்னணிக்குள் எழுந்துள்ள உள்ளக முரண்பாடு அவர்களுக்கு வாக்களித்த மக்களைத் திணுக்குற வைத்துள்ளது.

இரண்டு ஆசனங்கள் கிடைத்த போது இனி அரசியல் புலத்தில் முன்னணி தளைத்துவிடும் என்று நம்பிய மக்களுக்கு, அந்தக் கட்சிக்குள் எழுந்துள்ள உள்ளக முரண்பாடு இது என்ன? என்ற கேள்வியை ம்க்களிடையே ஏற்படுத்தவே செய்கிறது.

ஆக, உள்ளக முரண்பாடுகளில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை விடுவித்துக்கொள்வது கட்டாயமானது என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூறமுடியும்.

இவை அனைத்தும் ஒருபுறமிருக்க, தமிழர் தம் அரசியல் புலத்தில் ஏற்பட்ட நேர் நிலை மாற்றத்திற்குப் பின்னணியில் இருந்த முக்கியமான விடயம் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கமாகும்.

ஆம், தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்டதன் காரணமாக மக்கள் மத்தியில் ஓர் எழுச்சிப் பிரவாகம் ஏற்பட்டது என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.

குறிப்பாகத் தமிழ் மக்கள் பேரவை வடக்கிலும் கிழக்கிலும் நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தமிழ் அரசியல் புலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது, தோற்றவர்களின் கூடாரம் என்று விமர்சித்தவர்களுக்கு நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் தக்க விளக்கம் கொடுத்துள்ளது.

இதற்கு மேலாக, இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை தமிழ் மக்கள் பேரவை தயாரித்து அதனை வெளியிட்டமை மிக முக்கியமான விடயமாகும்.

அதிலும் தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தெரிவித்திருந்தன.

இவ்வாறு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழிந்த இரண்டு கட்சிகளினதும் ஒட்டுமொத்த வெற்றி என்பது தமிழ் மக்கள் பேரவைக்கான அங்கீகாரம் ஆகும்.

எனவே, தமிழ் மக்களின் இயக்கமாக எழுச்சி கொண்ட தமிழ்மக்கள் பேரவை காலத்தின் இன்றியமையாத தேவை என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்துள்ளனர்.

எதுவாயினும் தமிழ் அரசியல் கட்சிகளின் வெற்றியை மட்டும் நாம் தூக்கி நிறுத்தி அது தமிழ் மக்களுக்கான வெற்றி என்று கோசம் போடுவதால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை.

மாறாக, யார் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக இருந்தாலும் அவர்களைக் கட்டுப்படுத்தவும் வழிப்படுத்தவும் தமிழ்மக்கள் தயாராக இருக்க வேண்டும். இதற்காகத் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கத்தை மிகப் பெரும் பலம் மிக்க சக்தியாக ஆக்குவதிலேயே தமிழ் மக்களின் வெற்றி தங்கியுள்ளது.

எனவே, அனைத்துத் தமிழ் மக்களும் பொது அமைப்புக்களும் தமிழ்மக்கள் பேரவையுடன் இணைந்து செயற்படுவதுடன் பொருளாதாரம், கல்வி, விவசாயம், சுகாதாரம், காணி விவகாரம், அரசியல் விவகாரம் எனத் தேவைக்கேற்ற வாறு உப குழுக்களை அமைப்பதும் இத்தகைய உப குழுக்களில் துறைசார் நிபுணத்துவம் உடையவர்களை உள்வாங்குவதும் என தமிழ் மக்கள் பேரவை அவசரமாகத் தன்னை ஆழ்ந்து அகன்று வலிமைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இதுவிடயத்தில் தமிழ்ப் புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்கள் என அனைத்துத் தரப்பினரும் பேரவையைப் பலப்படுத்த முன்வரவேண்டும். தமிழ் மக்கள் பேரவையின் பலம் தமிழ் மக்களின் பலமாகும்.

விதுரன்




## செல்வம் நம்மோடு இருக்கட்டும்

அக்பர் சக்கரவர்த்தியின் அரண்மனையில் செல்வம் என்ற பெயருள்ள ஒருவன் அக்பரின் அரண்மனை பாதுகாவலனாக பணிபுரிந்தான்.

ஓர்நாள் செல்வம் ஒரு சிறு தவறு செய்ததற்காக அக்பர் அவனை வேலையிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிட்டார். செல்வமோ ஏழ்மை நிலை குடும்பத்தைச் சேர்ந்தவன்.

செல்வம் பீர்பாலிடம் சென்று தன் வறுமை நிலையைக் கூறி தனக்கு மீண்டும் அரண்மனையில் வேலை அளிக்கும்படி வேண்டினான்.

பீர்பால் அவனுடைய ஏழ்மை நிலையை எண்ணி மனம் இரங்கி, செல்வத்திடம் நாளை அதிகாலையில் அரண்மனைக்கு சென்று செல்வம் தலைவாசலில் நிற்கிறேன். உத்தரவு கொடுத்தால் உள்ளே வருகிறேன், இல்லாவிடில் போகிறேன் என்று மட்டும் சொல் எனக் கூறித் தைரியம் கொடுத்து அனுப்பினார்.

செல்வமும் மறுநாள் அதிகாலையில் அரண்மனைக்குச் சென்று, செல்வம் தலைவாசலில் நிற்கிறேன். உத்தரவு கொடுத்தால் உள்ளே வருகிறேன் இல்லாவிடில் போகிறேன் என்று கூறிக் கொண்டிருந்தான். அரசர் அக்பருக்கு இச்செய்தி எட்டியது.

உடனே அக்பர், தலைவாசலில் நின்று கொண்டிருந்த செல்வத்தை உள்ளே அழைத்து வரும்படி உத்தரவிட்டார்.

செல்வம் மன்னரை பணிவுடன் வணங்கிவிட்டு அரண்மனை வாயிலில் கூறியதை மீண்டும் கூறினான்.

அக்பர் புன்னகை புரிந்தவாறு, செல்வம் எப்பொழுதும் நம்மோடு நிரந்தரமாக இருக்கட்டும் என்று சொல்லி, அவனை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்தார்.



அரண்மனையில் உள்ள அனைவரும் இந்நிகழ்ச்சியை அறிந்து ஆச்சரியம் அடைந்தனர்.

பீர்பாலின் மதியூகத்தி னால் தான் இது நிகழ்ந்தது என்பதை அறிந்த அக்பர் உண்மையில் மனமகிழ்ச்சியடைந்தார்.

**நீதி :**

**செல்வம் வருவதை அனைவரும் விரும்புவர்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## சோழ வளநாடு சோறுடைத்து...




காவிரியின் கிளைகள் அதிகமாக்கப்பட்டன. வாய்க்கால் அமைப்புக்களால் விவசாயம் பெருகியது.

தஞ்சையில் எங்கு பார்த்தாலும் நெல் வயல்கள் காட்சி அளித்தன. தொடர்ச்சியாகப் புதிய வேளாண் நிலங்கள் உருவாக்கப்பட்டன.

வறண்ட வட தமிழகப் பகுதிகளுக்கு காவேரி நீரைக் கொண்டு சென்று ஏரிகளை அமைத்து, வேளாண் நிலங்களை உருவாக்க முயற்சி எடுத்தார் ராஜராஜன்.

சோழர் காலத்துக் கல்வெட்டு ஒன்று, தண்ணீர்ப் பந்தலில் தண்ணீர் இறைத்துத் தருபவனுக்கும் அதற்குக் கலமிடும் குயவனுக்கும் தண்ணீர் ஊற்றித் தருபவனுக்கும் மானியமளித்த செய்தியினைக் குறிப்பிடுகிறது.

நீர்ப் போக்கைக் கட்டுப்படுத்த உதவிய மதகுகளுக்கு மறவன் வாய், கண்டன்வாய், வடவாய், கீழ்வாய் என்று பெயரிடப்பட்டன.

ஊரின் மேற்கிலும் தெற்கிலும் உள்ள நிலங்களுக்கு நீரளித்த உள் வாய்க் கால்கள், திசைப் பெயர்களிலேயே அழைக்கப்பட்டன.

தேவைக்கேற்ப விளை நிலங்களின் பரப்பளவு விரிவாக்கப்பட்டது. விளைச்சலுக்காகத் தரிசு நிலம் பயன்படுத்தப்பட்டது. நிலத்தேவைக்கேற்ப நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

சீரான நீர்வசதியால் சோழ மண்ணில் பசுமை பூத்துக் குலுங்கியது என்று சொன்னால் அது மிகையே இல்லை. நெல் முதன்மைப் பயிராக விளைந்தது. பலவகைக் காய்கறிகள் பயிரிடப்பட்டன.

வாழை மரங்களும் பாக்கு மரத் தோப்புகளும் தென்னந்தோப்புகளும் செழித்திருந்தன. பயறுகளும் விளைவிக்கப்பட்டன. பலவகைப் பூக்கள் கொண்ட பூந்தோட்டங்கள் கோயில்களை அலங்கரித்தன. எல்லா ஊரிலிருந்தும், தஞ்சைக்கு உணவு தானியங்கள் வந்தன.

தமிழகத்தின் பிரமாண்ட ஏரிகள் ராஜராஜன் காலத்தில் வெட்டப்பட்டிருக்கின்றன. ஒட்டு மொத்தமாக ஐந்தாயிரம் ஏரிகள் வெட்டப்பட்டிருகின்றன.

பொதுப் பணித்துறையின் பணிகள் மிக வேகமாக முடுக்கி விடப்பட்டன. குடிநீருக்கும் விளை நிலங்களின் வாழ்வாதாரத்திற்கும் ராஜராஜன் ஆட்சியில் நீர்ப்பஞ்சமே ஏற்பட்டதில்லை.

நீர் வரத்தும் விளைச்சலும் அதிகமாக இருந்ததால் சோழ மண்டலம் முழுக்கச் செழிப்பாக இருந்தது.

மாபெரும் மத அடக்குமுறைகள், நிலப்பிரபுத்துவக் கொடுமைகள் அரங்கேறிய மத்திய காலகட்டத்தில் ராஜராஜனின் இந்தச் சாதனை, அவர் செய்த அத்தனை சாதனைகளுக்கும் நிகரானது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சையில் உழவர்கள் கொண்டாடிய முதன்மையான ஒரு விழாவாக எது இருந்தது? தைப் பொங்கல் கிடையாது.

'இழுது செய்யினுள் இந்திரத் தெய்வம் தொழுது நாற்று நடுவார் தொகுதியே பழுதில் காவிரி நாட்டின் பரப்பெல்லாம்' என்று சேக்கிழார் வர்ணிக்கிறார். மழைக் கடவுளாகிய இந்திரனுக்குரிய இடத்தை நிர்ணயிக்க உதவும் குறிப்பு இது.

இதில் தைப்பொங்கல் முன்னிலைப்படுத்தவில்லை. பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் இந்திர விழாவுக்குத் தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. (தொடரும்)



சினிமாவில் கதாநாயகனை ரசித்த காலம் போய் வில்லனைப் பின்பற்றும் காலம் வந்து விட்டதே?




மணிவண்ணனை கட்சிப்பதவிகளில் இருந்து விலக்கியமை தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்காலில் உறுதி எடுத்தது பற்றிச் சொல்லுங்களேன்?

**ராஜ் — யாழ்ப்பாணம்**

**நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்காலில் உறுதி எடுத்தது பற்றிச் சொல்லுங்களேன்?**

தமிழினத்தின் விடிவுக்காக பாராளுமன்றம் செல்லும் அவர் இறந்த ஆத்மாக்களுக்கு, உங்களுக்கு விரோதமாய் நான் நடந்து கொள்ள மாட்டேன் என உறுதி அளித்துள்ளார்.

இந்த விடயம் பலருக்கு புளியைக்கரைத் திருக்கும் என்பது உண்மை.

நீதியரசரின் தோல்விக்கு சிலர் எழுதிய எழுத்துக்களை நினைக்கும் போது சிறுமைத் தன்மை பெரியவர்களிடமும் உண்டு என்பதை உணர்த்தியது.

**கிருக்கன் — யாழ்.நகர்**

**என் காதல் கிளி என்னைவிட்டுப் பறந்து விட்டது வியாசரே?**

கிளிக்கு இறகுகளை வெட்டி கூண்டில் அடைத்து வைத்தால் அது சிறகு முளைத்ததும் பறந்து செல்லாமல் என்ன செய்யும்.

முதலில் கிளிக்கு என்ன பிடிக்கும் என்பதை அறிந்து கொள்ளும். அதன்படி நடந்து கொள்ளும்.

அதன் சுதந்திரமே இறகில் தான் உண்டு. அதை அழிக்க நினைக்காதீர்.

எது தேவை என்பதை அறிந்து செயற்பட்டிருந்தால் இன்று பறந்து போய் விட்டது என்பதை இங்கு கூறியிருக்கமாட்டீர்.

**தேவன் — மானிப்பாய்**

**அடக்கு முறைகளை உடைத்தெறிவது அவ்வளவு சுலபம் இல்லைத்தானே வியாசரே?**

சுலபமில்லைத்தான். ஆனால் அடக்குமுறைகளுக்குப் பழக்கப்படாமல் இருந்தாலே போதுமானது.

ஸ்ரேலின் அடக்குமுறைகளைத் தகர்த்தெறிய பாலஸ்தீனம் முயற்சிக்கிறது. ஆனாலும் ஸ்ரேலின் கெடுபிடி நின்றதாக இல்லை.

ஸ்ரேலின் கவச வாகனங்களுக்கு பாலஸ்தீன சிறுவர்கள் நடுவீதியில் நின்று கல் எறிவார்கள்.

அடக்கு முறையை உடைக்கும் விதை எங்கு போடப்பட்டிருக்கிறது பார்த்தீர்களா?

**கேதீஸ் — தெல்லிப்பழை**

**ஏதாவது ஆக்கபூர்வமான கதை கூறுங்களேன் வியாசரே?**

வகுப்பறையில் ஆசிரியர், மாணவர்களிடம் வாகனங்களுக்கு "பிறேக்" ஏன் இருக்கிறது என்று கேட்டார்.

வாகனத்தை நிறுத்துவதற்கு, விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க, வாகனங்களை மெதுவாக ஓட்ட என பலவகையான பதில்களைச் சொன்னார்கள்.

ஒரு மாணவன் மட்டும் வாகனத்தை வேகமாகச் செலுத்த எனப் பதில் கூறினான்.

இதைக் கேட்ட மற்றைய மாணவர்கள் சிரித்தார்கள். ஆனாலும் அந்தப் பதிலே சரியானது என ஆசிரியர் கூறினார்.

உங்கள் வாகனங்களில் பிறேக் இல்லை என்பது தெரிந்தால் நீங்கள் எவ்வளவு வேகமாகச் செல்வீர்கள் எனக் கேட்டார் ஆசிரியர். மாணவர்கள் மௌனமாக இருந்தனர்.

வாழ்வும் அப்படியே. தடை என்பது எம்மை விழச் செய்ய அல்ல, எழச் செய்ய என்று கூறி முடித்தார்.

## வியாசர் பதில்கள்

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**சதீஸ் — இணுவில்**

**தறுதலையாகத் திரியும் இளைஞர்களுக்கு ஏதும் கூறமுடியுமா?**

தம்பி தலை வெட்டை மாத்துடா. நல்லெண்ணெய் தலையில் ஊத்தி நல்லா தலைக்கு முழுகு.

காலை இறுக்கிப்பிடிச்சு நிக்கிற ரவுசர மாத்து. மற்றவர்கள் போடுற மாதிரி போடப் பழகு.

கழுத்தில தூங்கிற இரும்பை எடுத்தெறி. காதில கிடக்கிற கடுக்கனை கழற்றி எறி.

கல்வி ஒன்றே மூலதனம் என்பதை நினைச்சுப்படி நீ மனிதனாவாய்.

**சிவானு — பருத்தித்துறை**

**சினிமாவில் கதாநாயகனை ரசித்த காலம் போய் வில்லனைப் பின்பற்றும் காலம் வந்து விட்டதே?**

கதாநாயகனே வில்லனானால் வேறு என்ன செய்ய முடியும்.

வெளியாகும் எந்தத் திரைப்படத்திலாவது கதாநாயகன் நாயகனாகச் செயற்படுகிறானா? மது, சிகரெட் பாவிப்பதில் இருந்து அடிதடி அராஜகம் என அத்தனை கெட்ட வேலைகளிலும் ஈடுபடுவான்.

இப்பேற்பட்ட ரவுடியைத்தான் கல்லூரியில் படிக்கும் கதாநாயகி விரும்புவாள்.

இதுதான் இன்றைய சினிமாவின் நிலை. இன்றைய இளைஞர்களின் பிரதிபலிப்பு.

**சங்கரன் — வடமராட்சி**

**தேர்தல் முடிவுகள் வியாசருக்குத் திருப்தியா?**

மக்களின் ஆணையுடன் பாராளுமன்றம் சென்றவர்கள் மக்களுக்கு விரோதமாய் நடந்தால் என்ன ஆகும் என்பதைத் இத்தேர்தலில் மக்கள் கற்பித்திருக்கிறார்கள் என்பதை உணர முடிந்துள்ளது.

அதுவரை திருப்தியே.

**தாரா — வடமராட்சி**

**மணிவண்ணனை கட்சிப்பதவிகளில் இருந்து விலக்கியமை தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டில் அதிருப்தி கொண்ட தமிழ் மக்கள் மாற்றுத் தலைமையினை விரும்பினர், வாக்களித்தனர்.

அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓரளவு வெற்றியும் கண்டது.

ஆனால் மணிவண்ணனின் பதவி நீக்கம் என்பது ஆரோக்கியமானதல்ல. முன்னணியின் எதிர்காலத்தை சிந்திக்காமல் செயற்படுவது மக்கள் மத்தியில் கூட்டமைப்பில் ஏற்பட்ட அதே அதிருப்தி ஏற்படும் என்பதே உண்மை.

**நேதாஜி — வதிரி**

**கூட்டமைப்பு இனியாவது திருந்துமா?**

திருந்த வேண்டும். இல்லை நாம் இப்போது போகும் வழியில் தான் தொடர்ந்து பயணிப்போம் என்று அடம்பிடித்தால் மக்கள் மீண்டும் பாடம் கற்றுத் தருவார்கள் என்பது நிதர்சனமானது.

எனக்கென்னவோ இவர்கள் திருந்தி மக்களுக்குச் சேவை செய்வார்கள் எனும் எண்ணம் கொஞ்சமும் இல்லை.

இரத்தத்தில் ஊறியதை மாற்றமுடியுமா என்ன? கஷ்டம்.

# ஒருதலைக் காதல்




காதல் செய்ய எனக்கும் ஆசைதான்
மனதிற்கு பிடித்தவனோ எவருமில்லை
பிடித்தவன் கிடைத்தாலும்
அவனுக்கோ காதல் கனவு இல்லை
அன்பான மொழி
அடக்கமான திமிரு
அசரவைக்கும் மௌனத்தின் தோழனாய்
அழகாய் என் எதிரில் தோன்றி
அவனில் என்னைத் தேடச் செய்தான்
எங்கே என் காதலை அவனிடம் சொன்னால்
மறுத்துவிடுவானா என்ற தவிப்பு
காதலைச் சொல்லியிருந்தால்
ஏற்றுக்கொண்டிருப்பானோ என்ற ஏக்கமும்
இரண்டிற்கு நடுவிலும் சிக்கித் தவிக்கிறேன்
இருமனம் இணைந்தால் மட்டும் காதலல்ல
உயிராய் நினைத்தவனை மனதில்
சுமந்து வந்தாலும் காதல் தான்
நீ என்னை வெறுத்தாலும்
என் காதல் பயணம் உன்னில் என்றும் தொடரும்
ஒருதலைக் காதலாய்...

# சிரிக்கின்றார் கடவுள்

கடவுளே துணையென்று
கையெடுத்து கும்பிடும் அதிகாரிகள்
தம்மிடம் வருவோரை
அலைக்கழிக்கும் நிலைகண்டு
சிரிக்கின்றார் கடவுள்

கையூட்டு கொடுத்தால்
கைலாகு கொடுப்பார்
கைகூப்பி தொழுதால்
கைம்மாறு செய்வர்
மனிதர்கள் நிலைகண்டு
சிரிக்கின்றார் கடவுள்




யாசகம் கேட்போரைக் கண்டு
கண்மூடித்தூங்கும் பயணிகள் நிலை கண்டும்
சிரிக்கின்றார் கடவுள்

செவ்வாய்க்கிரகத்தில் ஆராய்ச்சி
செவ்வாய் தோசமென்று
போன மாப்பிள்ளை திரும்புகிறார்
சிரிக்கின்றார் கடவுள்

முப்புரம் எரித்த சிரிப்பு வேண்டாம்
இப்புரம் காக்கும் சிரிப்பாய் இருக்கட்டும்

இணுவில் வாகீசன்

# மீனவனே...

மழை, வெயில், பனி, காற்று என்று பாராது
உற்றவர் வாழ்வில் நலம் பயக்க
அலையுடன் போராடி வலை போடும் மீனவனே
ஆழியில் கட்டுமரம்
அல்லற்படுவதே உன் வாழ்க்கை
கடற்கரையை விட்டுப்போனா
உனக்கு வேறு கதியுமில்லை
பொங்குகடல் தூறம் போராடிச் செல்லும் மீனவனே
கஷ்டம் தீர்த்து அவனை கரையனுப்பி வை கடல்தாயே

# இயற்கை

அழகான சமூகம் நம்முடையது
அதில் இயற்கைதான்
நமக்கு கிடைத்த மிகப்பெரிய வரம்
அதையும் நீ அழிக்க அழிக்க
அழியப் போவது இயற்கை அல்ல
நீ தான் மனிதனே...

ந.கோபிராம், ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய்

# புதுவேடம்

அவர்கள் வீழாமல் இருக்க
இவர்கள் மிக அருகில் நின்றது
ஒரு இனமே தலைகீழாய்
துன்பத்தில் தொடர்கதையாய்
போலியாய் தேசியம் பேசி
தேர்தல்தான் அரசியல் என்று
தேறாத கனவுகளோடு
மீண்டுமொரு அணிவகுப்பு
ஆரவாரமாய்

தேன்நிலா, நல்லூர்

# வெகுநாட்கள் வாழமாட்டார்

கத்தியோடு கன்னம் வைத்தல்
புத்திகெட்ட செயற்பாடென்றோ!
சுத்தமில்லா நெஞ்சினர்
சூழ்ச்சிவலை வீசிடுவார்
ஏத்தர்கள் துணையோடு
குத்திடுவார் புறமுதுகில்
வெற்றியென்று துள்ளிடுவார்
வெகுநாட்கள் நிலைக்கமாட்டார்
சுற்றிய வேட்டியோடு
சுருண்டிடுவார் தூரதேசம்

மானந்தன், அல்வாய்

# மௌனத்தின் தேடல் -491



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்




# அலைபேசி ஆசை

இதைப்பார்த்த பரமசிவத்திற்கு படிக்கிற காலத்தில் குனிந்த தலை நிமிராமல் படித்தால் வருங்காலத்தில் பெரிய பதவியுடன் தலை நிமிர்ந்து நடப்பாய் என்று சொல்ல மனம் உந்தியபோதும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்.

பரமசிவம் உயர்தர வகுப்பு வரை படித்து சித்தியும் அடைந்திருந்தார். அந்தக் காலத்தில் அரச உத்தியோகம் பெறுவது இலகுவானதாக இருக்கவில்லை. போட்டிப் பரீட்சைகளே நடந்தன. அதில் சித்தியடைந்த எல்லோருக்குமே வேலை கிடைப்பதில்லை. வேலை கிடைத்தவர்களும் கொழும்பிலுள்ள அரச அலுவலகங்களிலேயே கடமையாற்ற வேண்டுமென்ற நிலைப்பாடுமிருந்தது.

இதையெல்லாம் பார்த்த பரமசிவம் அரச வேலையிலும் விவசாயமே சுதந்திரமானது. அதிக இலாபம் பெறக்கூடியது. உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்தது என நினைத்து தனது சொந்த நிலத்தில் பலவிதமான பயிர்களையும் உற்பத்தி செய்து அதிக வருமானம் பெற்று வந்தார்.

வருடங்கள் சில கடந்த பின் பரமசிவத்தின் கையில் ஒரு தொகைப் பணம் சேர்ந்திருந்தது. இந்நிலையில் தன்னுடன் படித்த உறவினனான சரஸ்வதியைத் திருமணம் செய்து கொண்டார்.

இல்லற வாழ்க்கை கருத்தொருமித்த விதத்தில் இனிதே நகர்ந்தது. காலங்கள் சில கடந்த பின் ஆண் குழந்தையொன்றுக்குத் தாயானாள் சரஸ்வதி. அக்குழந்தைக்கு சரவணன் என்ற பெயரே பதிவாகியது.

இக்குழந்தை கண்ணை இமை காப்பது போல மிகுந்த கவனத்துடன் வளர்ந்தது. ஆண்டுகள் ஐந்து மறைந்த பின் பிள்ளையும் பள்ளிக்கூடம் செல்லும் பருவத்தையடைந்திருந்தது. தங்கள் ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திலேயே ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக சேர்த்துக் கொண்டார் பரமசிவம்.

ஆரம்பத்திலேயே படிப்பதில் மிகுந்த அக்கறை உடையவனாகக் காணப்பட்டான் சரவணன். இதைக் கண்ட தந்தையும் தாயும் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து உற்சாகப்படுத்தினார்கள். எப்படியாவது தன் மகனைப் படிப்பித்து ஊர் போற்றும் உத்தமனாக்க வேண்டும் என நினைத்தார் பரமசிவம்.

வருடங்கள் சில மறைந்தன. எவ்வித தடைகளோ தாமதங்ளோ இல்லாமல் உயர்தர வகுப்பிற்குக் காலடி எடுத்து வைத்தான் சரவணன்.

அன்றொரு நாள் சரவணன் பாடசாலையால் வந்தவுடன் சமையலறையிருந்த தாயாருடன் ஏதோ ஒன்றைப் பற்றி விவாதம் செய்யும் பாணியில் கதைத்துவிட்டு ரியூசனுக்குச் சென்றான்.

அவன் போன பின் பரமசிவமும் ஓய்வாக இருந்த சமயம் சரஸ்வதி சொன்னாள். எங்கடை சரவணனோடை படிக்கிற பிள்ளையளெல்லாம் "டச்போன்" வைச்சிருக்கிறாங்களாம். அந்தப் போனிருந்தால் படிக்க வேண்டிய சில விடயங்களை அதில் பதிஞ்சு வைத்திருந்து அடிக்கடி பார்த்து ஞாபகப்படுத்தலாமாம். ரியூசனிலை படிப்பிக்கிறதையும் அப்படியே ஒலிப்பதிவு செய்து வீட்டிலை வைச்சும் கேட்கலாமாம் என்றாள்.

இதைக்கேட்ட பரமசிவத்திற்கு தன் இதயத்தை யாரோ நெருடுவது போலிருந்தது. ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு தன் மனதில் தோன்றியதை சரஸ்வதிக்குச் சொன்னார். நாங்கள் படித்த காலத்தில் எத்தனை பண்டிதர்கள்? எத்தனை கலைஞர்கள்? எத்தனை அறிஞர்கள்? எனப் பலதரப்பட்டோர் இருந்தனர். இவர்களெல்லாம் "டச்போன்" வைத்திருந்துதான் படித்தார்களா? எனக் கேட்டவர் மேலும் தொடர்ந்தார்.

உந்த "டச்போன்" வைத்திருந்த சில பொடியங்கள் பொலிஸ் நிலையம், நீதிமன்றமெல்லாம் போய் இப்ப சிறையிலும் இருக்கிறார்கள்.

அரசடி அருணாசலத்தின்ரை மோன் தன்ரை போனில ஆபாசப்படங்கள் பதிஞ்சு வைச்சிருந்த குற்றத்திற்காக இரண்டு வருஷ சிறைத்தண்டனை கிடைச்சது. மதவடி மயில்வாகனத்தின்ரை மோன் எங்கடை தாமரைக் குளத்தில குளித்த பெட்டையள மறைந்திருந்து போன் கமராவினால் படமெடுத்த குற்றத்திற்காக மூன்று வருடங்கள் சிறையிலிருக்க வேண்டியதாயிற்று.

பிள்ளையார் கோயிலுக்கை பொட்டையொன்றைப் படமெடுத்ததுக்காக வடிவேலுவின்ர பொடிய்னுக்கு ஒரு கையையும் முறிச்சு போனையும் பறிச்சுக்கொண்டு போட்டாங்கள். இதைவிட வாகனச் சாரதிகள் போனில் கதைச்சபடியே வாகனத்தைச் செலுத்தி எத்தனை ஆயிரம் பேரை துலைச்சுப் போட்டான்கள். இப்ப கொலைகள், கொள்ளைகள் செய்வோருக்கும் இந்தப் போன் உறுதுணையாக இருப்பதாகக் கதையடிபடுகுது.

இந்தப் போன் பாவனை இளம் பிள்ளையளுக்கு அதுவும் படிக்கிற காலத்திலை இருக்குமாயின் படிப்பிலை பின்னடைவு வரும். வாழ்க்கையையும் சீரழிக்கும். படிச்சு ஒரு பதவிக்கு வந்த பிறகு போன் பாவிச்சால் செய்யிற வேலைக்கு உதவியாக இருக்கும் என்றார் பரமசிவம்.

நீங்கள் நினைக்கிற மாதிரி சரவணன் ஒண்டும் செய்யமாட்டான். அவனுடைய "டச்போன்" வாங்கும் ஆசையை நிறைவேற்றினாற்தான் எங்களிலை பற்று வரும். படிப்பிலும் ஆர்வமிருக்கும். நாற்பதாயிரம் ரூபாதானே கேட்கிறான் கொடுத்துவிடுங்கோ! என்றாள்.

சரஸ்வதியின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாத நிலையில் அன்றே கேட்ட பணத்தைக் கொடுத்தார் பரமசிவம்.

அடுத்தநாள் சரவணனின் கையில் புதிய "டச்போன்" ஒன்று காணப்பட்டது. அது பாடசாலை நேரத்தில் மட்டுமே அவனிடமிருந்து பிரிந்திருக்கும். ஏனைய நேரம் முழுவதும் குனிந்த தலை நிமிராமல் தட்டித் தடவிக் கொண்டேயிருப்பான்.

இதைப்பார்த்த பரமசிவத்திற்கு படிக்கிற காலத்தில் குனிந்த தலை நிமிராமல் படித்தால் வருங்காலத்தில் பெரிய பதவியுடன் தலை நிமிர்ந்து நடப்பாய் என்று சொல்ல மனம் உந்தியபோதும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்.

அன்றொரு ஞாயிற்றுக்கிழமை பரமசிவத்தின் வீட்டின் முன்னாலுள்ள வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் ஓடிவந்த இருவரும் காயமடைந்த நிலையில் இரத்தம் பாயக் கிடந்தனர். அப்போது அவ்வீதியால் வந்த ஆட்டோக்காரன் அவர்களைத் தூக்கி வைத்தியசாலைக்கு ஏற்ற முற்பட்டபோது சரவணன் அவனுக்கு உதவி செய்யாமல் ஓடியோடி விபத்துக்குள்ளானவர்களை போனினால் படமெடுத்துக்கொண்டு நின்றான்.

இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட பரமசிவம் போன் பாவனையால் சிலருக்கு மனிதப் பண்புகள்கூட மழுங்கிப் போய் விடுகின்றன என நினைத்துக் கவலையடைந்தார்.

"டச்போன்" வாங்கிய நாளிலிருந்து பரமசிவத்திற்கும் சரஸ்வதிக்கும் முறுகல் நிலையே காணப்பட்டது. இடையிடையே வாக்குவாதங்களும் நடந்தன. இதனால் இருவரும் மனக்குமுறலுக்கு ஆளாகினர்.

இப்படியே சில மாதங்கள் மறைந்தன. உயர்தரப் பரீட்சைக்கான நாட்களும் வந்தது. சரவணனும் பரீட்சைக்குத் தோற்றினான்.

சரியாக ஆறு மாதங்களின் பின் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. சரவணனின் முடிவு கவலைக்குரியதாகவே காணப்பட்டன. இதைப்பார்த்த சரஸ்வதியின் மனம் வேதனைப்பட்டது. கண்களும் கண்ணீரை வடித்தன. நினைவுகளும் அலைமோதின.

ஒரேயொரு பிள்ளையென்று ஆசையாய் வளர்த்தம். நன்றாய்ப் படித்து நல்லதொரு அரச உத்தியோகம் பெற வேண்டுமென நினைத்தம். இப்ப எல்லாம் பகற்கனவாய்ப் போச்சு என எண்ணி வேதனைப்பட்டாள்.

பரீட்சைப் பெறுபேறுகளால் சரவணனும் கவலையிற் தோய்ந்திருந்தான். இந்தக் கவலையை மறக்க நண்பர்களுடன் மது அருந்துவிட்டு வீட்டிற்கு வந்து ஏதோ தன்பாட்டில் அலட்டியபடி படுத்திருந்தான்.

இதைக்கண்ட பரமசிவமும் சரஸ்வதியும் வேதனையில் மூழ்கிப் போயிருந்தனர். இருவரும் யோசித்தபடியே அங்குமிங்குமாக நடந்தனர். அன்றைய தினம் சமையல் வேலைகள்கூட நடைபெறவில்லை.

இதனால் சரவணனும் பசியுடனே படுத்திருந்து கடந்த காலத்தைப் பற்றி யோசித்தான். பெற்றோரின் கவலை படர்ந்த முகத்தைப் பார்க்க பரிதாபமாகவேயிருந்தது. இந்த நிலையெல்லாம் ஏன் வந்தது? இந்தப் போன் தான் யாவற்றிற்கும் காரணியாறிற்று என்பதை உணர்ந்தான்.

அதன்பின் அம்மா... என்று அழைத்தபடி தாயின் முன் சென்று தன்னை மன்னிக்குமாறு கேட்டதுடன் இன்றிலிருந்து நான் படிப்பில் கவனமெடுக்கப் போறன் என்று சொல்லிக் கொண்டே "டச்போனையும்" காலால் மிதித்து உடைத்தான்.

சி.காசிப்பிள்ளை
கொடிகாமம்

# “கண் விழித்துப் பார்த்தால் ஒரே அழுகுரல்கள்!”

## கேரள விமான விபத்து... விபரிக்கிறார் உயிர்தப்பிய பயணி

**“கொட்டும் பெருமழைத் தண்ணீரைக் கடந்து கண்ணீரில் தத்தளிக்கிறது ‘கடவுளின் தேசம்.’ இடுக்கி நிலச்சரிவு, கோழிக்கோடு விமான விபத்து, பெருவெள்ளம் என அடுத்தடுத்து பேரிழப்புகளால் பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது கேரளா. டுபாயிலிருந்து கோழிக் கோடு விமான நிலையம் வந்த ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் 10 பச்சிளம் குழந்தைகள் உட்பட 184 பயணிகள், விமானப் பணியாளர்கள் எட்டுப் பேர் பயணித்தனர். மோசமான வானிலை காரணமாக, விமானம் இறங்குவதில் ஏற்பட்ட சிக்கல், கோர விபத்தில் முடிந்து விட்டது. விபத்துக்குக் கூடுதல் காரணம், கோழிக்கோடு விமான நிலையம் ‘டேபிள்டாப் ரன்வே’ என்கிற வகையில் அமைந்திருப்பது தான். நான்கு குழந்தைகள், இரண்டு விமானிகள் உட்பட 18 பேர் இந்த விபத்தில் பலியாகிவிட்டனர்.**



களநிலவரம் அறிய கோழிக்கோடு விமானநிலையம் அமைந்துள்ள கரிப்பூர் பகுதிக்குக் கிளம்பினோம். தமிழக-கேரள எல்லைப் பகுதியில் விடயத்தைச் சொல்லி அனுமதி வாங்கி, கொட்டும் மழையில் நான்கு மணி நேரம் பயணித்து சம்பவ இடத்தை அடைந்தோம்.

கேரள மாநிலம் பெரும்பாலும் மலைகளும் மலைகள் சார்ந்த பகுதியும் தான். அந்த வகையில் கோழிக்கோடு விமான நிலையம் என்பது, கிட்டத்தட்ட ஒரு மலைக்குன்று மீதுதான் அமைந்திருக்கிறது. ரன்வே முடியும் இடத்திலிருந்து சில மீற்றர்கள் தூரத்திலேயே பெரும் பள்ளமான பகுதி ஆரம்பமாகிவிடுகிறது. இதுபோன்ற அமைப்பிலிருக்கும் விமான ஓடுதளங்களைத்தான் ‘டேபிள் டாப் ரன்வே’ என்று அழைக்கிறார்கள்.

மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. மீட்புப் பணிகள் முடிந்து காயம்பட்டோர் அனைவரும் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருந்தனர். உடல்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். ஏர்போர்ட் அத்தாரிட்டி அதிகாரிகள் விபத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தனர். டேபிள்டாப் ரன்வேயிலிருந்து விலகி, கிட்டத்தட்ட 50 அடி ஆழமான பள்ளத்தில் விழுந்து, மூன்று பாகங்களாக உடைந்திருந்தது விமானம். பள்ளத்தில் விழுவதற்கு முன்பாக மோதியதில் விமான நிலைய மதில் சுவரும் இடிந்து விழுந்திருந்தது.

விமானத்தைப் பார்வையிட்டோம். பயணிகளின் சீட்கள் நொறுங்கிப் போயிருந்தன. காலணிகள், பயணிகளின் உடைமைகள் சிதறிக் கிடந்தன. மோசமான வானிலை, டேபிள்டாப் ரன்வே என விபத்துக்குப் பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. விமானத்தின் கறுப்புப்பெட்டி கைப்பற்றப்பட்டு, ஆய்வுக்காக டில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த ஆய்வில்தான் விபத்துக்கான உண்மையான காரணம் தெரியவரும்.

இந்த விமானத்தில் தமிழகத்தைச் சேர்ந்த மூன்று பேர் பயணித்துள்ளனர். அதிர்ஷ்டவசமாக மூவரும் உயிர் தப்பியுள்ளனர். நீலகிரி மாவட்டம், கூடலூரைச் சேர்ந்த ஷஹலா என்ற பெண், டுபாயில் பணியாற்றும் தன் கணவருடன் சில மாதங்கள் தங்கிவிட்டுத் திரும்பியிருக்கிறார். தற்போது அவர், கோழிக்கோடு எம்.ஐ.எம்.எஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஷஹலாவின் கணவர் இர்ஷாத்திடம் பேசினோம். “எனக்குச் சொந்த ஊர் கூடலூர். 2018 இல் டுபாயில் வேலைக்குச் சேர்ந்தேன். போன வருஷம்தான் எனக்கும் ஷஹலாவுக்கும் நிக்கா முடிந்தது. கொஞ்ச நாளிலேயே நான் டுபாய் வந்துட்டேன். ஜனவரி மாதம் டூரிஸ்ட் விசாவுல என் மனைவி இங்கே வந்தாங்க. கொரோனா பாதிப்பால அவங்க இங்கேயே இருக்க வேண்டிய சூழ்நிலை. இந்தச் சூழலில் தான் ‘வந்தே பாரத்’ திட்டத்துல டுபாயிலிருந்து கோழிக்கோட்டுக்கு ஒரு விமானம் கிளம்பறதா கேள்விப்பட்டேன். எனக்கு லீவு இல்லை. அதனால என் மனைவியையும், உறவுக்காரச் சகோதரி ஒருத்தரையும் அவங்க குழந்தையுடன் அனுப்ப முடிவு செஞ்சு டிக்கெட் போட்டோம். வெள்ளிக்கிழமை மதியம் 1:30 மணிக்கு ஃபிளைட். காலையிலேயே அவங்களை ஏர்போர்ட்டுல விட்டுட்டு வந்துட்டேன். நடுவுல மனைவி கிட்ட போன்ல பேசினப்போ, ‘சீட்ல உட்கார்ந்துட்டேன்’னு சொன்னாங்க.

இந்திய நேரப்படி மாலை 7:30க்கு ஃபிளைட் லேண்ட் ஆகியிருக்கணும். ஆனா, லேண்ட் ஆகலை. மனைவிக்கு போன் பண்ணினேன். லைன் கிடைக்கலை. திடீர்னு ஃபிளைட் அக்ஸிடன்ட்னு மெசேஜ் வந்துச்சு. அடிச்சு, பிடிச்சு டி.வி போட்டுப் பார்த்தா, ஃபிளைட் மூணு பாகமா உடைஞ்சு போயிருந்துச்சு. எனக்கு உசுரே இல்லை. வெடிச்சு அழுதுட்டேன். நல்ல வேளையா என் மனைவியின் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை. நான் எப்பவும் லேடீஸ்க்கு விமானத்தின் முன் பக்கத்தில்தான் சீட் போடுவேன். ஆனா, இந்தமுறை என்ன தோணிச்சோ நடுவுல சீட் புக் பண்ணிட்டேன். அதுதான் என் மனைவியைக் காப்பாத்தியிருக்கு. ஆனா, இத்தனை பேரு இறந்திருக்குறது ரொம்ப வேதனையா இருக்கு” என்றார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஷஹலாவிடம் கான்ஃபரன்ஸ் கால் மூலம் பேசினோம். மிகவும் சிரமப்பட்டு மெல்லிய குரலில் பேசினார் அவர். “கோழிக்கோடு பக்கத்துல வந்ததும், பிளைட் லேண்ட் ஆக முடியலை. சுத்திக்கிட்டே இருந்துச்சு. ‘க்ளைமேட் மோசமா இருந்தா, ஃபிளைட் இப்படிச் சுத்தும்’னு என் கணவர் சொல்லியிருக்கார். அதனால தைரியமா இருந்தேன். முதல் முயற்சி தோல்வி. இரண்டாவது முயற்சியில ஃபிளைட் ஜம்ப் அடிச்சு குலுங்கிச்சு. எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது. ப்ரேயர் பண்ணத் தொடங்கிட்டோம். நிறைய பேர் உள்ளே அழ ஆரம்பிச்சுட்டாங்க. கடைசியா, ‘ஃப்ளைட் லேண்ட் ஆகப் போகுது’னு பைலைட் கமென்ட் பண்ணினாரு. உடனே மைக் ஆஃப் ஆகிடுச்சு. அதுக்கப்புறம் இன்ஜினும் ஆஃப் ஆயிடுச்சுனு நினைக்கிறேன். அடுத்த சில நிமிடங்கள்ல என்ன நடக்கக்கூடாதுனு நினைச்சோமோ அது நடந்துருச்சு...” என்றவர் சற்றே இடைவெளிவிட்டுத் தொடர்ந்தார்.

“ டமார்’னு பெரிய சத்தம். விமானம் வேகமா எங்கெங்கேயோ போகுது. உள்ளே சீட்டெல்லாம் ‘கடமுடா கடமுடா’னு உருள ஆரம்பிச்சுது. சீட்டை கெட்டியா பிடிச்சிக்கிட்டேன். சில நொடிகள் தான். கண்ணு முழிச்சுப் பார்த்தா, சுத்தி ஒரே அழுகுரல்கள். என் முன்னாடி இருந்த சீட்டெல்லாம் நொறுங்கிப் போயிடுச்சு. நிறைய பேர் என்னை மிதிச்சுக்கிட்டே ஓடுறாங்க. எந்திரிக்க முயற்சி பண்றேன், முடியலை. என் கால் கேபிள்ல சிக்கிடுச்சு. பக்கத்துல ஒருத்தரு தலையில ரத்தம் சொட்டச் சொட்ட எந்திரிச்சுக் கிளம்பினாரு. என்னைப் பார்த்துட்டு, அவர் தான் மெள்ள கேபிளையெல்லாம் எடுத்துவிட்டு உதவி பண்ணினாரு. அதுக்கப்புறம், மீட்புக்குழுவினர் என்னை மீட்டு ஆஸ்பத்திரியில சேர்த்தாங்க. கால், முதுகு, கழுத்துல பலமான அடி. வலி அதிகமா இருக்கு” என்றார் வலி முனகலுடன்.

களத்திலிருந்த பொலிஸார் மற்றும் அந்தப் பகுதி மக்கள் சிலரிடம் பேசினோம். “வெள்ளிக்கிழமை மாலை 7:40 மணிக்குப் பெரிய சத்தம் கேட்டது. சத்தம் வந்த இடத்துக்கு ஓடினோம். அங்கே நாங்கள் பார்த்த காட்சி படுபயங்கரமாக இருந்தது. விமானம் சுக்கு நூறாக உடைந்து, பயணிகளின் கதறல் நெஞ்ஸைப் பிளந்தது. நாங்களே மீட்புப் பணிகளைத் தொடங்கினோம்” என்றவர்கள் விமான நிலையத்தின் குறைபாடுகள் குறித்தும் சொன்னார்கள்.

“எப்போதும் இங்கு இந்த ரன்வே தான் பிரச்சினை. ரன்வேயின் நீளம் குறைவு. ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து ஜம்போ ஃபிளைட்ஸெல்லாம் இங்கு வர முடியாது என்று சொல்லி விட்டனர். கடந்த 2010இல் மங்களூரில் டேபிள் டாப் ரன்வேயில்தான் விபத்து ஏற்பட்டது. அதனால், ‘கோழிக்கோடு விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும்’ என்று ஏர்போர்ட் அத்தாரிட்டி அதிகாரிகள் சொல்லியுள்ளனர். ஆனால்; அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனியும் தாமதிக்காமல் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்து, வருங்காலத்தில் இப்படி ஒரு விபத்து நடக்காமல் தடுக்க வேண்டும்” என்றனர்.

மலப்புரம் மாவட்ட ஆட்சியர் கோபால கிருஷ்ணனிடம் பேசினோம். “விமானம் ரன்வேயிலிருந்து விலகி, சறுக்கி, பள்ளத்தில் விழுந்துள்ளது. பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறையினரின் உதவிகளுடன் மீட்புப் பணிகளை விரைவாக முடித்தோம். காயமடைந்தவர்களை கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களிலுள்ள 19 மருத்துவமனைகளில் அனுமதித்துள்ளோம். விபத்துக்கான காரணம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ரன்வே உட்பட விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளைத் தொடங்கினோம். ஆனால், 80 இற்கும் மேற்பட்டோர் அதற்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். அதனால் தான் விரிவாக்கம் செய்ய முடியவில்லை. விரைவில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்” என்றார்.

ரன்வே பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும். மற்றொரு துயரத்தைத் தாங்காது கேரளா!

ஜூனியர் விகடன்

# பலமான போது அழைக்காமையும் பலவீனமான போது அழைத்தலும்

## அரசியல் சாணக்கியம் அறிவுசார் மக்களுக்குப் புரியும்

“ பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகளின் பின்னர் இப்போது “ஒற்றுமை” என்கின்ற பதம் அதிகமானவர்களிடம் பேசுபடு பொருளாகிவிட்டது ”

ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். ஊரில் சகல பொது நிகழ்வுகளிலும் குறித்த செல்வந்தர் முதன்மைப்படுத்தப்படுவார்.

அதற்குக் காரணம் அவரிடம் இருந்த பணமோ சொத்துக்களோ அல்ல.

அவர் அந்தச் சமூகத்தின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தமையே காரணம்.

இல்லை என்று வரும் யாரையும் அவர் வெறும் கையுடன் அனுப்பியது கிடையாது.

அத்துடன் ஊரில் பொது விடயங்களுக்கு என்ன தேவை என்றாலும் சற்றும் சிந்திக்காமல் கொடுத்து சந்தோசப்படுவார்.

அந்தச் செல்வந்தரின் இரு புதல்வர்களில் இளையவன் தகப்பனைப் போல சமூக அக்கறை கொண்டவனாகவும் மூத்தவன் பணம், சொத்துக்கள் மீது ஆசை கொண்டவனாகவும் இருந்தான்.

பெரியவருக்கு முதிர்வு வந்து விடவே தன்னிடம் உள்ள சொத்துக்களை மகன்களுக்குப் பிரித்துக் கொடுக்க எண்ணினார்.

ஆனாலும் மூத்தவன் தந்தையின் சொத்துக்கள் அனைத்தும் தனக்கு மாத்திரமே வரவேண்டும் எனத் தந்தையிடம் வாதிட்டான்.

இளையவனோ அமைதியாய் நின்றான். அண்ணனின் விருப்பப்படியே அவரிடமே சொத்துக்களை ஒப்படையுங்கள் எனத் தந்தையிடம் வேண்டினான்.

தந்தையோ இல்லை எனது சொத்தில் பாதி உனக்கும் சேர்வதுதானே முறை என்றார்.

இறுதியில், இருவருக்கும் ஒரு சோதனை வைக்கின்றேன். அதில் வெல்பவர்க்கே முழுச் சொத்தையும் தருகின்றேன் என்கிறார்.

இருவரும் சம்மதிக்கின்றார்கள். வயதான அந்தத் தந்தை வீட்டின் ஒரு அறையினைக் காட்டி இந்த அறையினை முழுமையடையச் செய்பவர்க்கே எனது சொத்துக்களை எழுதி வைக்கிறேன் என்றார்.


உடனே சுறுசுறுப்பான மூத்தவன் மாட்டுத் தொழுவம் உள்ள பக்கமாக ஓடினான்.

ஓடியவன் வைக்கோற்பட்டடையில் இருந்த வைக்கோல்களை சர சர என இழுத்து வந்து மளமள வென அறையை நிறைத்தான்.

அவனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வைக்கோல்களை எடுத்து அறையில் அடைந்து முடித்தான்.

இளையவன் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாய் இருப்பது கண்டு எள்ளி நகைத்தபடி தந்தையிடம்,

அப்பா அறை முழுவதையும் நிறைத்துவிட்டேன் எனக்கு அனைத்துச் சொத்தையும் எழுதி வையுங்கள் என்றான்.



தந்தை அமைதியாக இருந்த சிறியவனை நோக்கினார். அப்போது சிறியவன் ஒரு அகல் விளக்கை அறையின் மத்தியில் ஏற்றி வைத்துவிட்டு மீண்டும் அமைதியாக இருந்தான்.

தந்தை மெய்சிலிர்த்து போனார்.

மூத்தவனைப் பார்த்து தந்தை, அறையை முழுமை அடையச் செய்ய வேண்டிய நீ அறையை இன்னும் இருளடையச் செய்தாய்.

ஆனால் உன் தம்பியோ அகல் விளக்கின் ஒளியினால் இருளை அகற்றி ஒளியேற்றி அறையை முழுமையடைய வைத்துவிட்டான். அவனுக்கே எனது சொத்துக்கள் எனக் கூறினார்.

அப்போது சிறியவன் தகப்பனிடம் அண்ணனுக்குச் சேரவேண்டிய பங்கைக் கொடுத்து விடுங்கள் அப்பா.

எனக்குச் சேர வேண்டிய பங்கை இந்த ஊரை முன்னேற்றும் வகையாய்ச் செய்யுங்கள் என்றான்.

தள்ளாத வயது தந்தை அவனை ஆச்சர்யமாய்ப் பார்த்தார்.

அவன் கூறினான் உழைப்பு என்பதை உங்களிடம் கற்றுக் கொண்டேன் அப்பா.

எனக்கு உழைப்பைக் கற்றுத் தந்திருக்கிறீர்கள். அந்த உழைப்பால் நான் உயர்வேன். கவலை கொள்ளாதீர்கள் என்றான் அவன்.

இது வெறும் கதையே.

தற்போதைய எமது அரசியல் களம் கூட வெறுமனே நிறைத்தல் என்கின்ற செயற்ப்ாடு மட்டுமே காணப்படுகிறது. தவிர, அங்கு ஆக்கபூர்வமான எதுவும் உண்டா எனும் கேள்வி எழுமாயின் விடை இல்லை என்றே கொள்ளமுடியும்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தல் வெறும் வெற்று வார்த்தைகளை உதிரவிட்டு உசுப்பேற்றியவர்களுக்கு நல்லதொரு முடிவைத் தந்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகளின் பின்னர் இப்போது “ஒற்றுமை” என்கின்ற பதம் அதிகமானவர்களிடம் பேசுபடு பொருளாகிவிட்டது.

தாம் பலமாக இருந்த காலங்களில் இந்த ஒற்றுமை என்பதை வலியுறுத்தியிருப்பார்களாயின் இப்போது இவர்கள் கேட்பதில் நியாயம் இருக்கும்.

ஆனால் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் நாம்தான் என்ற இறுமாப்புடன் தேர்தலில் தோல்வியுற்றவர்கள், மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்ற பதம் சூட்டி அவர்களை இழிநிலைப்படுத்திவிட்டு,

இப்போது தமக்கான பலம் குறைந்தபோது அவர்களை ஒன்றிணைத்து செயற்பட அழைப்பது எதற்காக என்பது தமிழ் மக்களுக்கு புரியாமல் இல்லை.

காலம்காலமாக தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டபோதெல்லாம் நாம் ஒன்றுபடுவோம் என அழைப்பு விடுத்து இறுதியில் அறுத்துவிடுவதே நடந்தேறியது.

பெரும்பான்மை ஆட்சியாளர்களை தொடர்ந்து நம்பி நம்பி ஏமார்ந்ததைத் தவிர வேறு எதுவும் நடந்ததாக இல்லை.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கான நீதிகோரல், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான பொறுப்புக்கூறல், தமிழ் மக்களின் அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்தல் போன்றவற்றை வலியுறுத்தாமல் அரசாங்கத்துக்குத் தொடர்ந்து ஒத்தூதி அவர்களின் தேவைகளுக்கு தாமே கறிவேப்பிலையாகி தமது தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்றியவர்களுக்குத் தேர்தல் என்ற ஒன்று வரும், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்குமாக இருந்தால் இன்று இந்த நிலை வந்திருக்காது.

மக்களை ஏமாற்றி அவர்களுக்கான வாக்குறுதிகளை புதைத்தபடியினால் இப்போது பலம் இழந்து நிற்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இருந்தால் அதைவிட முட்டாள்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஒற்றுமை எனும் எண்ணப்பாட்டில் இணைந்து கொண்டாலும் காலப்போக்கில் தாம் பலம்பெற்றபின் மற்றவர்களைத் தூக்கி வீசவும் தயங்கமாட்டார்கள் என்பது நிதர்சனம்.

கடந்தகால செயற்பாடுகளும் வார்த்தைப் பிரயோகங்களும் அவற்றைப் பறைசாற்றி நிற்கின்றன.

வெறுமனே தோல்வியை வைத்துக்கொண்டு எந்த முடிவையும் எடுத்துவிட முடியாது என்பதை இம்முறை தேர்தல் நன்றாக விளக்கி இருக்கிறது.

வடிவேல் கூறியது போல உனக்கு வந்தா இரத்தம் எனக்கு வந்தா தக்காளிச் சட்னியா? என்பது இப்போது பலருக்கு பாடம் புகட்டியிருக்கும் என்பது உண்மை.

வெறும் வைக்கோலைக் கொண்டு அறையினை முழுமை அடையச் செய்யும் எண்ணம் போன்றதே இப்போதைய சாணக்கிய அரசியலின் ஒற்றுமை என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

மக்களுக்காக மக்கள் உரிமைக்காக பிரிந்து நிற்பதிலும் ஒன்றுபட்டுச் செயற்படுவதே பலமானது.

ஆனாலும் அந்த ஒற்றுமை எனும் பதத்தில் உள்நோக்கம் ஏதும் இருக்கக்கூடாது.

அப்படி உள்நோக்கம் ஏதும் இருக்குமாயின் அடுத்த தேர்தல் அதற்கும் பாடம் கற்றுத்தரும் என்பது உறுதி.

அபிமன்யு

# உலக சுகாதார நிறுவனத்தை உதறி எறியும் அமெரிக்கா

## பாதிப்படையும் ஏழை நாடுகள்

World Health Organization

உலக சுகாதார நிறுவனம், உலக அளவில் மருத்துவத்துறையை கண்காணித்து வழிகாட்டும் ஒரு சர்வதேச அமைப்பு. உலக நாடுகள், தாங்கள் எதிர்கொள்ளும் மருத்துவம் சார்ந்த பிரச்சினைகளை உலக சுகாதார நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லும். அந்த நிறுவனத்தில் உள்ள நிபுணர்கள், அதற்கான தீர்வை முன்மொழிவார்கள்.

சீனாவில் கொவிட்-19 பரவியுள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டு, இரண்டு மாதங்கள் கழித்து, ஜனவரியில்தான் அதுகுறித்து உலக சுகாதார நிறுவனத்திற்கு (WHO) சீனா தெரிவித்தது.

மேலும் இரண்டு மாதம் எடுத்துக் கொண்டு, மார்ச் 11 இல் கொரோனாவை, மனிதரிலிருந்து மனிதருக்குப் பரவும் கொள்ளை நோயாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. இந்த ஆறு மாத காலத்தில் கொவிட்-19 என்றழைக்கப்படும் கொரோனா வைரஸ், உலக அளவில் பரவி நிலைகுலையச் செய்துவிட்டது.

சீனாவில் வுஹான் மாகாணத்தில் தொற்று ஆரம்பித்த அறிவிப்பு முதல், உலகளவில் அவசர நிலையை அமுல்படுத்தியது மற்றும் தற்போது கொரோனா வைரஸ் காற்றின் மூலமும் பரவும் என்ற புதிய எச்சரிக்கை வரை உலக சுகாதார நிறுவனத்தின் ஒவ்வோர் அறிவிப்பும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அண்மையில், உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகளிலிருந்து அமெரிக்கா வெளியேறியது உலக சுகாதார நிறுவனத்தை நோக்கி அனைவரின் கவனத்தையும் திருப்பியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கம்தான் உலக சுகாதார நிறுவனம். ஜெனிவாவைத் தலைமையிடமாகக் கொண்டு இந்த நிறுவனம் செயற்படுகின்றது. பொருளாதார மற்றும் சமூக அளவில் திறம்படச் செயற்படும் அளவுக்கு அனைவரும் உடல் நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும் உலகளவில் மக்களின் நல்வாழ்வை முன்னிறுத்தியும் செயற்பட்டு வருகின்றது. இதன் உறுப்பு நாடுகள் பட்டியலில் தற்போது 194 நாடுகள் உள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகள்.


- நோய்களைத் தடுப்பது, தொற்று நோய்கள் பரவுவதைத் தீவிரமாகக் கண்காணித்து அதைக் கட்டுப்படுத்துவது.

சின்னம்மைக்குத் தீர்வைக் கொண்டு வந்ததிலும், போலியோ நோயைக் கட்டுப்படுத்தியதிலும் சிறந்த முறையில் இந்த நிறுவனம் பங்காற்றியது. கொரோனா வைரஸ்போன்ற கொள்ளை நோய்கள் பரவும் காலகட்டத்தில் உலகளவில் அந்த நோய்த் தொற்றினுடைய பரவலைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகளை எடுக்கின்றது. அதேநேரம் இருதய நோய், புற்றுநோய், மரபணுக் கோளாறு நோய்கள், பார்வை இழப்பு, மனநோய் போன்ற பல தொற்றா நோய்களின் மீதும் கவனம் செலுத்தி வருகிறது.

- கர்ப்பிணிகளின் நலன், குழந்தைகள் நலன், சுகாதாரக் கல்வி, ஊட்டச்சத்து, மனித இனப்பெருக்கம் ஆகியவை குறித்துப் பல வழிகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. உறுப்பு நாடுகள் செயற்படுத்தி வரும் சுகாதார மேம்பாட்டிற்கான வழிமுறைகளுக்கும் ஆதரவு அளிக்கின்றது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுகாதாரம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், பிறப்பு, இறப்பின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தல், உலகளவில் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளித்தல் போன்ற பணிகளையும் உலக சுகாதார நிறுவனம் மேற்கொள்கிறது.
- ஐக்கிய நாடுகள் மற்றும் அதனுடன் இணைந்த மற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து இந்த நிறுவனமும் செயற்படுகின்றது. உலக சுகாதார நிறுவனம், தனது நிதித் தேவையை இரண்டு வகைகளில் பெறுகின்றது. ஒன்று உறுப்பு நாடுகள் தரும் சந்தா தொகை. இரண்டாவது உறுப்பு நாடுகள் தாமாக விருப்பப்பட்டு அளிக்கும் தொகை மற்றும் இதர பங்களிப்பாளர்கள் அளிப்பது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UN General Assembly) ஒத்துக்கொண்டுள்ள வரைமுறைப்படி, உறுப்பு நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் (GDP) பொறுத்து, உறுப்பு நாடுகளின் பங்களிப்புத் தொகை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு அளிக்கப்படும் தொகை மொத்த பட்ஜெட்டில் 20 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

பெரும்பாலும் உறுப்பு நாடுகள் தாமாக விரும்பிப் பங்களிப்பு செய்கின்ற தொகை, ஐக்கிய நாடுகள் அமைப்பு, இண்டர் கவர்மெண்டல் ஓர்கனைசேஷன் (Inter-governmental organisation), கொடையாளர்கள் மற்றும் இதர வகைகளிலும்



இதற்கான நிதி கிடைக்கின்றது.

2018-2019 இல் WHO-வுக்கு நிதியளித்த முதல் 10 நிதியளிப்பாளர்கள் (மில்லியன் டொலர்களில்)

**National philanthropic Trust -** 115.9, **Rotary International - 168, European Commission - 213.3, Japan - 233.9, Germany - 358.8, GAVI Alliance - 388.7, Bill and Melinda Gates foundation - 455.3, UK - 463.4, USA - 851.6**

உலக மக்கள் தொகையில் 4 சதவிகிதமே அமெரிக்கர்கள். ஆனால், கொரோனாவால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளில் கால் பங்கு அமெரிக்காவில்தான் நிகழ்ந்தது. அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நோய்த்தொற்று மற்றும் உயிரிழப்பின் காரணமாக, ட்ரம்ப் WHO-வின் மேல் சரமாரியாக விமர்சனங்களை வைத்துள்ளார். 30 நாட்களுக்குள் WHO தன் நிலைப்பாட்டில் முன்னேற்றத்தைக் கொண்டு வரவில்லை என்றால் அமெரிக்கா, WHO உடனான தன் உறவை முறித்துக்கொண்டு, உலக அளவில் செயற்படும் ஏனைய பொதுச் சுகாதார நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்குமென்று ஏப்ரல் மாதத்திலிருந்து கூறி வந்தார்.

- "சீன அரசின் பொறுப்பற்ற தன்மையால், இன்று உலகமே கொரோனாவால் பாதிப்படைந்துள்ளது. சீனா சொல்வதைத்தான் WHO கேட்கிறது" என்று ட்ரம்ப் தன் வாதத்தை கடுமையாக முன்வைத்து வருகிறார்.

இந்த நோய்த் தொற்றுக் காலத்தில் தேவையான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று வருந்திக் கேட்டும், உலக சுகாதார நிறுவனம் செவி சாய்க்காததால் WHO-விலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்தது. இந்த அமைப்பிலிருந்து வெளியேறுவதால், எதிர்காலத்தில் உலகளவில் ஆரோக்கியத்தைப் பேணுவதிலும், நோய்களைக் கையாள்வதிலும் பின்னடைவைச் சந்திக்க நேரிடலாம்.

அதேநேரம், WHO-விலிருந்து விலக வேண்டுமானால் ஒரு வருடத்திற்கு முன்பாக உறுப்பினர்கள், விலகலைப்பற்றி அறிவிக்க வேண்டும். அதன்படி, அமெரிக்கா எடுத்துள்ள விலகும் முடிவானது 2021, ஜூலை 6 ஆம் திகதியிலிருந்துதான் அமுலுக்கு வரும்.

ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகள் கோவிட்-19 இற்கு தடுப்பூசி உருவாக்குவதில் உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து செயற்படப் போவதாகவும் தாங்கள் வெளியேறுவதாக இல்லை என்றும் தெரிவித்துள்ளன.

உலக நாடுகள், கொரோனாவிற்கான மருந்து மற்றும் தடுப்பூசி உருவாக்கத்தில் உலக சுகாதார நிறுவனத்திடம் அனுமதி பெறாமல், தங்கள் நாட்டின் மருத்துவச் சட்ட திட்டத்திற்கு உட்பட்டுச் செயற்படலாம் என்று இருந்தாலும், உலகமே கொரோனாவால் தத்தளிக்கும் இந்த வேளையில், இந்தக் கூட்டமைப்பிலிருந்து அமெரிக்கா விலகுவது தவறான முடிவாகக் கருதப்படுகின்றது.

இது ஏழை நாடுகளையும் வளர்ந்துவரும் நாடுகளையும் பாதிக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

# இலங்கை விடயத்தில் இந்தியாவை முந்தியோடும் சீனா

கடந்த மாதம் 30 ஆம் திகதி கொழும்பில் உள்ள ஷங்ரிலா விடுதியில் நடந்த ஒரு நிகழ்வில் சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்ற இலங்கை இராணுவ அதிகாரிகளின் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது.

தற்போது சுங்கப் பணிப்பாளராக உள்ளவரும் இறுதிக்கட்டப்போரில் 57 ஆவது டிவிசனின் பிரிகேட் தளபதியாகவும் பின்னர் பிரதிக் கட்டளை அதிகாரியாகவும் செயற்பட்டவருமான மேஜர் ஜெனரல் விஜித ரவிப்பிரியவே இந்தச் சங்கத்தின் அழைப்பாளராகவும் முதலாவது தலைவராகவும் இருக்கின்றார்.

பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி ஹு்வெய் ஆகியோர் இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புக் கற்கைகளுக்கான சர்வதேச கல்லூரியின் சார்பில் இந்த சங்கம் ஆரம்பிப்பதற்கு வரவேற்புத் தெரிவித்து மேஜர் ஜெனரல் சூஹியூப், ரியர் அட்மிரல் காவோஜியான்கி ஆகியோர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றும் இந்தக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

அதில் இரண்டு நாடுகளின் இராணுவத்தினருக்கும் இடையில் தந்திரோபாய தொடர்பாடலை வலுப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை - சீன இராணுவங்களுக்கிடையிலான நெருக்கமும் உறவுகளும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவே அந்த உறவுகளின் முக்கியத்துவத்தையும் ஆழத்தையும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார்.

சீனா பல்வேறு வழிகளில் இலங்கையின் வரலாற்று ரீதியான கூட்டாளி என்று குறிப்பிட்டிருந்த அவர் அண்மைக்காலத்தில் சர்வதேச ரீதியாக இலங்கை கடினமான நிலையில் இருந்தபோது சீனா உதவியாக இருந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஒத்துழைப்பை இலங்கை மறந்து விட முடியாது என்றும் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கான போரின் போது எதிர் உத்திகளை திட்டமிடுவதற்கு களமுனைத் தளபதிகளுக்கு நிபுணத்துவ பயிற்சிகளை சீனா வழங்கியது என்றும் அவர் கூறியிருந்தார்.

சீன தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கம் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கிடையில் இருக்கும் உறவுகளை எட்ட முடியாத உயரத்துக்கு கொண்டு செல்லும் என்றும் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிகழ்வில் தொடக்கவுரை நிகழ்த்தியிருந்த மேஜர் ஜெனரல் ஜி.பி.ரவிப்பிரிய, அதிகளவானோருக்கு இராணுவப் பயிற்சிகளை அளித்து இலங்கை இராணுவத்துக்கு எப்போதும் உதவ சீனா தயாராக இருந்து வந்துள்ளது என்று கூறியிருந்தார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக 1985 ஆம் ஆண்டு பீஜிங்கில் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருந்த போதும் 2001 ஆம் ஆண்டில் இருந்துதான் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.



> “சர்வதேச ரீதியாக இலங்கை கடுமையான நிலையில் இருந்தபோது சீனா உதவியுள்ளது. இந்த ஒத்துழைப்பை இலங்கை மறந்து விடக்கூடாது. விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கான போரின்போது எதிர் உத்திகளை திட்டமிடுவதற்கு களமுனைத் தளபதிகளுக்கு சீனா பயிற்சிகளை வழங் கியது.”

இதுவரை 75 இற்கும் அதிகமான இராணுவ அதிகாரிகள் சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றிருக்கின்றார்கள்.

இவர்களை உறுப்பினர்களாக கொண்ட அமைப்பே தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தச் சங்கத்தை உருவாக்குவதில் சீனத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் Colonel Chang Dong உள்ளிட்ட அதிகாரிகளின் பங்கு முக்கியமானது.

புலிகளுக்கு எதிரான போருக்கான உத்திகளை திட்டமிடுவதில் சீனாவின் பங்கு முக்கியமானதாக இருந்து வந்திருக்கின்றது என்பது மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் உரையில் இருந்து உணர முடிகின்றது.

இரண்டு நாடுகளின் இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் பிணைப்பை வலுப்படுத்துவதற்காகவே இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் முப்படை அதிகாரிகளும் அங்கு பயிற்சிகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

அவர்களில் முன்னாள் இராணுவத் தளபதிகளான ஜெனரல் தயா ரத்நாயக்க, ஜெனரல் ஜகத் ஜயசூரிய மற்றும் தேசிய புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், முன்னாள் இராணுவ புலனாய்வு பணிப்பாளர் அமல் கருணாசேகர, இறுதிப் போரில் முக்கிய பங்கு வகித்த மேஜர் ஜெனரல் சுராஜ் பன்சஜய, மேஜர் ஜெனரல் ரோகண பண்டார உள்ளிட்டவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இவர்களுடன் இணைப்பை ஏற்படுத்தி இலங்கை இராணுவத்திற்குள் தமக்கான ஒரு ஆதரவு வட்டத்தை உருவாக்க முயன்றிருக்கின்றது சீனா.

வெளிநாட்டு இராணுவ பல்கலைக்கழகங்கள், பயிற்சிக் கல்லூரிகளில் இலங்கை படை அதிகாரிகள் பயிற்சி பெற்று வந்துள்ள போதும் வெளிநாடு ஒன்றில் பயிற்சி பெற்ற முன்னாள் படை அதிகாரிகளைக் கொண்ட சங்கம் ஒன்று இப்போது தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிகழ்வு நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் தான் இந்திய தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகராக பொறுப்பேற்றுள்ள கப்டன் விகாஷ் சூட் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகெத்தென்ன ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தப்பட்டதாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தகவல் வெளியிட்டிருந்தது.

எனினும் இந்தியத் தூதரகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகருடனான சந்திப்புக்களுக்கு இலங்கையின் பாதுகாப்பு அமைச்சோ, அதிகாரிகளோ முக்கியத்துவம் அளிக்கவில்லை.

இந்தியாவில் உள்ள பயிற்சி முகாம்களில் வெளிநாட்டுப் படையினருக்கு ஒதுக்கப்படும் இடங்களில் 50 சதவீதம் இலங்கைப் படையினருக்கே ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் விகாஷ் சூட் குறிப்பிட்டிருந்தார்.

ஒவ்வொரு ஆண்டும் 800 இலங்கை இராணுவத்தினர் இந்தியாவில் பயிற்சி பெற்று வருவதாக சில ஆண்டுகளுக்கு முன்னர் செய்திகள் வெளியாகின.

இளநிலை அதிகாரிகளுக்கான பயிற்சிகளை இந்தியாவின் பயிற்சி முகாம்களில் பெற்றுக் கொள்வதை இலங்கை இராணுவ அதிகாரிகள் அதிகளவில் விரும்புவது வழக்கம்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் பெருமளவு இலங்கைப் படை அதிகாரிகள் பயிற்சிகளைப் பெற்றிருக்கின்றார்கள்.

முன்னாள் இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் ஜே.ஈ.டி பீற்றர், மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க, ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, மேஜர் ஜெனரல் நளின் செனவிரத்ன, முன்னாள் விமானப்படைத் தளபதிகளான எயர் சீவ் மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ, எயார் சீவ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையான முக்கிய தளபதிகள் டில்லியில் உள்ள தேசியப் பாதுகாப்பு கல்லூரியில் முன்னர் பயிற்சி பெற்றவர்கள் தான்.

இவர்கள் பல தசாப்தங்களாக அங்கு பயிற்சிகளைப் பெற்று வருகின்ற போதும் அங்கு பயிற்சி பெற்ற அதிகாரிகளுக்கிடையில் ஒரு தொடர்பு கிடையாது. அவர்களுக்குள் ஒரு சங்கமும் இல்லை.

ஆனால் சுமார் 19 ஆண்டுகளுக்கு முன்னர் பயிற்சிகளைத் தொடக்கி இதுவரை 75 அதிகாரிகளுக்கு மாத்திரம் பயிற்சிகளை அளித்துள்ள சீனாவின் தேசியப் பாதுகாப்பு பல்க்லைக்க்ழகத்தின் பழைய மாணவர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த ஒருங்கிணைப்பு இராணுவ ரீதியாக முக்கியமானது. இலங்கையை விட சீனாவுக்கு இன்னும் அதிக பலனைத் தரக் கூடியது.

ஓய்வுபெற்ற பல படை அதிகாரிகள் இப்போது அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் இருக்கின்றார்கள். இன்னும் சிலர் ஓய்வில் இருக்கின்றார்கள்.

இவ்வாறான சங்கங்களை உருவாக்குவதன் மூலம் சீனா தனது உறவுகளை புதுப்பித்துக் கொள்ள மாத்திரம் முற்படவில்லை. தமக்கான தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கிறது.

ஆனால் இந்தியா இதுபோன்ற புத்திசாலித்தனமான நகர்வுகளை எடுப்பதில் இன்னமும் பின்னால்தான் நிற்கின்றது.

இந்தியப் பெருங்கடலில் பிராந்திய ஆதிக்கத்துக்காக சீனாவும் இந்தியாவும் முட்டி மோதுகின்ற போதும் இலங்கை போன்ற நாடுகளை வளைத்துப் போடுவதற்கு சீனா பல்வேறு உத்திகளை கையாளுகின்றது என்பதை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சங்கமும் உறுதி செய்திருக்கின்றது.

**சுபத்திரா**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மயங்குகிறாள் ஒரு மாது
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஜய பாஸ்கர்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம்




சம்சாரம் என்பது வீணை
சந்தோஷம் என்பது ராகம்
சலனங்கள் அதில் இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை

சம்சாரம் என்பது வீணை
சந்தோஷம் என்பது ராகம்
சலனங்கள் அதில் இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை

என் வாழ்க்கை திறந்த ஏடு
அது ஆசைக் கிளியின் கூடு
என் வாழ்க்கை திறந்த ஏடு
அது ஆசைக் கிளியின் கூடு
பல காதல் கவிதை பாடி
பரிமாறும் உண்மைகள் கோடி
இது போன்ற ஜோடி இல்லை
இது போன்ற ஜோடி இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை

சம்சாரம் என்பது வீணை
சந்தோஷம் என்பது ராகம்
சலனங்கள் அதில் இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை


தை மாத மேக நடனம்
ஏன் தேவி காதல் நளினம்
தை மாத மேக நடனம்
என் தேவி காதல் நளினம்
இந்த காதல் ராணி மனது
அது காலம் தோறும் எனது
இதில் மூடும் திரைகள் இல்லை
இதில் மூடும் திரைகள் இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை

சம்சாரம் என்பது வீணை
சந்தோஷம் என்பது ராகம்
சலனங்கள் அதில் இல்லை
மணம் குணம் ஒன்றான முல்லை

# பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் விடுதலை

## நம்பிக்கையூட்டிய நீதிமன்ற நகர்வுகள்

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேர் 29 ஆண்டுகளாகச் சிறையிலுள்ளனர். இவர்களின் விடுதலை தொடர்பாக தமிழக அமைச்சரவை நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் மீது, இரண்டு ஆண்டுகளாகியும் ஆளுநர் பன்வாரிலால் எந்த முடிவையும் எடுக்கவில்லை. கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் சூழலில் பேரறிவாளனுக்கு 90 நாட்கள் பரோல் கோரி அற்புதம்மாள் கடந்த மார்ச் 24 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணையின்போது, ஆளுநர் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். தொடர்ந்து, பதில் மனுத்தாக்கல் செய்யவும் உத்தரவிட்டனர். "எம்.டி.எம்.ஏ. எனப்படும் பன்னோக்கு விசாரணை முகாமையின் அறிக்கைக்காகக் காத்திருப்பதாக ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது" என்று அரசுத் தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.



எம்.டி.எம்.ஏ.அறிக்கைக்கும் பேரறிவாளன் விடுதலைக்கும் என்ன தொடர்பு? ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில், சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் 41 எதிரிகள் மீது வழக்கு தொடரப்பட்டது. அவர்களில் 12 பேர் இறந்துபோன எதிரிகளாக அறிவிக்கப்பட்டனர். மீதமுள்ள 29 பேரில் ஏ1, ஏ2, ஏ3 எனக் குறிப்பிடப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், பொட்டம்மன், அகிலா ஆகியோரின் பெயர்களை 09.12.1992 அன்று தனியாகப் பிரித்து வழக்கு எண் 11/92 எனத் தனி வழக்காக சி.பி.ஐ. பதிவு செய்தது.

மீதமுள்ள நளினி, சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன், பேரறிவாளன் உள்ளிட்ட 26 பேரைப் பிரித்து வழக்கு எண் 3/92 எனத் தனி வழக்காக சி.பி.ஐ. பதிவு செய்தது. ஏ1, ஏ2, ஏ3 ஆகியோரின் வெளிநாட்டுத் தொடர்புகள் குறித்த வழக்கு எண் 11/92 என்ற வழக்கில் தான் ஜெயின் கமிஷன் விசாரணை முடிவின்படி அமைக்கப்பட்ட எம்.டி.எம்.ஏ. மற்றும் சி.பி.ஐ. தங்களது விசாரணையை மேற்கொள்ள தடா நீதிமன்றத்தில் 17.06.1999 இல் அனுமதி பெறப்பட்டது.

அதன்படி, மேற்கண்ட இரு அமைப்புகளும் 1999 ஆம் ஆண்டு முதல் சீலிடப்பட்ட கவர்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை விசாரணை விபரங்களை தடா நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வருகின்றன. இப்படி சுமார் 64 இற்கும் மேற்பட்ட சீலிடப்பட்ட உறைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. "ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பயன்படுத்தப்பட்ட வெடி குண்டு எங்கே, யாரால் தயாரிக்கப்பட்டது என்ற எந்தப் புலனாய்வையும் சி.பி.ஐ. மற்றும் எஸ்.ஐ.டி (சிறப்பு புலனாய்வுக்குழு) மேற்கொள்ளாத காரணத்தால், அதுபற்றிப் புலனாய்வு செய்தாலே ஒட்டுமொத்த சதியும் தெரிய வந்துவிடும்" என நீதிபதி ஜெயின் தனது இறுதி அறிக்கையில் கூறியிருந்தார்.

இது தனது விடுதலைக்கு உதவும் என நம்பிய பேரறிவாளன், "எம்.டி.எம்.ஏ. தாக்கல் செய்த சீலிடப்பட்ட கவர்களை தடா நீதிமன்றம் பிரித்துப் பார்க்க வேண்டும். அந்த அமைப்பின் புலனாய்வையும் தடா நீதிமன்றம் கண்காணிக்க வேண்டும்" எனக் கோரி வழக்கு தொடுத்திருந்தார். இந்த வழக்கில் சி.பி.ஐ. மற்றும் எம்.டி.எம்.ஏ. தாக்கல் செய்த பதில் மனுவில், "பேரறிவாளனுக்கும் தற்போது நடைபெற்று வரும் எம்.டி.எம்.ஏ-வின் மேல் விசாரணைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை" எனத் தெரிவித்திருந்தது. இதை ஏற்றுக்கொண்ட தடா நீதிமன்றம், பேரறிவாளனின் மனுவைத் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில், பேரறிவாளனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற சி.பி.ஐ. மற்றும் எஸ்.ஐ.டி. அதிகாரி தியாகராஜனின் வாக்குமூலம் மற்றும் வெடிகுண்டு குறித்த புலனாய்வே நடைபெறாமை ஆகிய குளறுபடிகளைக் கண்ட தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான மூவர் அமர்வு, பேரறிவாளன் அளித்த அரசியல் யாப்பு உறுப்பு 161 இன்படியான மனுவை தமிழக அரசு பரிசீலிக்க உத்தரவிட்டது. ரஞ்சன் கோகோய் ஓய்வுபெற்ற நிலையில், கடந்த 05.11.2019 அன்று இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நாகேஸ்வரராவ் அமர்வின் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மீண்டும் தனது புலனாய்வு முன்னேற்றங்களை நான்கு வாரத்தில் எம்.டி.எம்.ஏ. தாக்கல் செய்ய வேண்டும் எனக் கூறி விசாரணையைத் தள்ளி வைத்தது.

மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, "விசாரணையில் எந்த முன்னேற்றத்தையும் காண முடியவில்லை" என அதிருப்தியைத் தெரிவித்த உச்ச நீதிமன்றம், "இவர்களின் விடுதலை குறித்த அமைச்சரவை தீர்மானம் என்னவானது?" எனக் கேள்வி எழுப்பியது. மேலும், இது குறித்து அறிய தமிழக அரசு சட்டத்தரணியை ஆஜராகுமாறு உத்தரவிட்டனர். இதையடுத்து, 11.02.2020 அன்று ஆஜரான தமிழக அரசு சட்டத்தரணி, "ஆளுநரிடம் கோப்பு நிலுவையில் உள்ளதால் தற்போது ஒன்றும் செய்ய இயலாது" எனத் தெரிவித்தார். அப்போது நீதிபதிகள், "ஆளுநரிடம் கேட்டு பதில் சொல்லுங்கள்" என்று கூறி மீண்டும் இரண்டு வாரம் அவகாசம் தந்தனர். இந்த நிலையில், கடந்த மார்ச் 20, 2020 அன்று சட்டப் பேரவையில் பதிலளித்த அமைச்சர் சி.வி.சண்முகம், "எம்.டி.எம்.ஏ-வின் இறுதி அறிக்கையைப் பெற்ற பிறகே முடிவெடுக்க முடியும்" என ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

கொரோனா பரவல் காரணமாக, எம்.டி.எம்.ஏ.குறித்த பேரறிவாளன் வழக்கு 11.02.2020 இற்கு பிறகு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வராமல் நிலுவையிலுள்ளது. இந்த நிலையில், பேரறிவாளனுக்கு பரோல் கோரி அற்புதம்மாள் கடந்த மார்ச் 24 ஆம் திகதி தொடர்ந்த வழக்கில் ஆளுநரின் அதே பதிலைத்தான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு கூறியுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக் குறித்து தற்போது அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்யவும் உயர் நீதிமன்றம் கேட்டுள்ளது.

நீதியரசர்கள் தாமாகவே முன்வந்து எழுப்பும் கேள்விகளும் தமிழக அரசின் மெத்தனப் போக்குகளுமே தற்போது பேரறிவாளனின் பரோல் விடுமுறையைத் தாண்டி விடுதலைக்கான கதவுகளைத் திறந்து விடுமா என்ற எதிர்பார்ப்பைக் கூட்டியுள்ளன.

## செம ஸ்மார்ட் ஆக இருக்கும் தல



தல அஜித் தற்போது தமிழ் சினிமாவில் மிகப்பெரிய நடிகராக திகழ்பவர். இவருக்கென்று தமிழில் பெரிய ரசிகர்கள் கூட்டமே உள்ளது.சென்ற வருடம் இவர் நடிப்பில் வெளியான விஸ்வாசம் மற்றும் நேர்கொண்ட பார்வை உள்ளிட்ட திரைப்படங்கள் பெரிய அளவில் வசூல் சாதனை செய்தது.அதனை தொடர்ந்து மீண்டும் இயக்குநர் எச். வினோத் இயக்கத்தில் வலிமை திரைப்படத்தில் நடித்து வந்தார்.மேலும் இப்படத்தின் 50 சதவீத படப்பிடிப்பு முடிந்துள்ளதாக கூறப்படுகிறது. தற்போது கொரோனா காரணத்தினால் இப்படத்தின் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் விரைவில் வலிமை திரைப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும் என செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் தல அஜித் நடிப்பில் கடந்த 2010 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் அசல்.இப்படம் வெளியாகி எதிர்பார்த்த அளவு வெற்றியை பெறவில்லை. ஆனால் இப்படத்தில் தல அஜித்தின் கெட்டப் பெரிய அளவில் ட்ரெண்ட் ஆனது.மேலும் தற்போது அப்படத்தின் படப்பிடிப்பில் எடுக்கப்பட்ட ஓர் புகைப்படம் வெளி யாகியுள்ளது.அதில் தல மிகவும் ஸ்மார்டாக உள்ளார். இதோ அந்த புகைப்படம்..

## சுதந்திர தினத்தில் வெளியாகும் கீர்த்தி சுரேஷ் பட டீசர்



முன்னணி நடிகையாக வலம்வரும் கீர்த்தி சுரேஷின் குட்லக் சகி திரைப்படத்தின் டீசர் சுதந்திர தினத்தில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. சுதந்திரதினத்தில் வெளியாகும் கீர்த்தி சுரேஷ் பட டீசர் திரைப்படம் குட்லக் சகி நாகேஷ் குக்குனூர் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

பிரபல தயாரிப்பாளர் தில் ராஜ வழங்கும் இந்தத் திரைப்படத்தை வொர்த் எ ஷாட் மோஷன் ஆர்ட்ஸ் பனர் நிறுவனத்தின் கீழ் சுதீர் சந்திர பதிரி தயாரித்துள்ளார். இப்படத்தின் டீசர் சுதந்திர தின விசேஷ வெளியீடாக நேற்று வெளியிடப்பட்டது.

விளையாட்டு, காதல், நகைச்சுவைப் பின்னணியில் உருவா கியுள்ள இந்த படத்தில் ஆதி பினிஷெட்டி மற்றும் ஜகபதி பாபு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இதில் கீர்த்தி சுரேஷ் துப்பாக்கிச் சூடு வீராங்கனையாக நடிக்கிறார்.தேவி பிரசாத் படத்துக்கு இசையமைக்க சிரந்தன் தாஸ் ஒளிப்பதிவு செய்கிறார். படப்பிடிப்புக்கு இன்னும் சில நாட்கள் மட்டுமே மீதம் இருக்க, படத்தின் பெரும்பாலான படப்பிடிப்பு வேலைகள் முடிந்துவிட்டன. இறுதிக்கட்ட பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

## தீவிர சிகிச்சைப் பிரிவில் பாலசுப்பிரமணியம்



தமிழ் சினிமாவின் ஜாம்பவான்களில் ஒருவர் எஸ்.பி.பி. இவர் ஆயிரத்திற்கும் அதிகமான பாடல்களை பாடியுள்ளார். இந்தியாவில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாளம் என இவர் பாடாத மொழிகளே இல்லை.

அந்தளவிற்கு பேர் புகழை கொண்ட இவருக்கு கடந்த வாரம் கொரோனா தொற்று ஏற்பட்டது. இதனால் ரசிகர்கள் கடும் அதிர்ச்சி ஆகினர்.

ஆனால், அவரே நேரலையாக வந்து பேசியது பலருக்கும் சந்தோஷத்தை கொடுத்தது.

தற்போது இவருடைய உடல் நிலை மிகவும் மோசமான நிலைய எட்டியதாக மருத்துவமனை சார்பில் கூறப்பட்டது.

அதைத்தொடர்ந்து அவரை தீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றினார்கள். அதைத்தொடர்ந்து பல முன்னணி நட்சத்திரங்கள் இவருக்காக பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் இவர் தம்ஸ் அப் காட்டுவது போன்ற புகைப்படம்வெளி வந்து ரசிகர்களை உற் சாகப்படுத்தியுள்ளது, அவர்மீண்டு வந்து பழைய பலத்துடன்பாட வேண்டும் என்பதே எல்லோரின் எதிர்பார்ப்பும்.




## நான்கு கோடி சம்பளம் பேசியும்; நடிக்க மறுத்த நயன்தாரா

நயன்தாரா தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகை. இவர் நடிப்பில் விரைவில் மூக்குத்தி அம்மன் படம் திரைக்கு வரவுள்ளது.

இப்படத்தை பார்க்க ரசிகர்கள் மிக ஆவலுடன் உள்ளனர், ஏனெனில் நயன்தாரா இப்படத்தில் அம்மனாக நடித்துள்ளார்.



இந்நிலையில் தெலுங்கில் நயன்தாராவை பாலிவுட்டில் சுப்பர் ஹிட் ஆன அந்தாதூன் படத்தின் ரீமேக்கில் நடிக்க அணுகினார்களாம்.

இதில் ஹீரோவிற்கு நிகரான கதாபாத்திரத்தில் தான் தபு நடித்திருப்பார். ஆனால், பணத்திற்காகவும், கள்ளக் காதலுக்காகவும் தன் கணவரையே கொல்லும் கதாபாத்திரம் அது.

ரூ.4 கோடி வரை சம்பளம் தருகிறேன் எனக் கூறியும் நயன்தாரா இதில் நடிக்க மறுத்ததாக கூறப்படுகிறது.

## திருமண கோலத்தில் பிகில் பட அமிர்தா



திருமண கோலத்தில் பிகில் பட புகழ் அமிர்தா நடத்திய போட்டோ ஷூட் வைரலாகி வருகிறது.

முன்னணி இயக்குநர் அட்லீ இயக்கத்தில் தளபதி விஜய் தெறி, மெர்சல் ஆகிய இரு படங்களை தொடர்ந்து மூன்றாம் முறையாக நடித்து வெளிவந்த படம் பிகில்.

இப்படத்தில் கால்பந்து வீராங்கனைகளாக நடிகை இந்துஜா, வர்ஷா, அமிர்தா, ரெபா மோனிகா ஜான் மற்றும் பல பெண்கள் நடித்திருந்தனர்.

அதில் குறிப்பாக படத்தில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட கதாபாத்திரம் நடிகை அமிர்தா ஐயரின் தென்றல் கதாபாத்திரம் தான்.

மேலும் இப்படத்திற்கு முன்பு ஒரிரு படங்கள் அமிர்தா நடித்திருந்தாலும், இப்படம் இவருக்கு திரையுலகில் பேர் சொல்லும் படமாக அமைந்தது.

இதன்பின் தற்போது பிக்பாஸ் நடிகர் கவினுடன் இணைந்து லிப்ட் எனும் படத்தில் கதாநாயகியாக நடித்து வருகி றார்.

சமீபத்தில் கூட இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது. மேலும் இந்த போஸ்டர் சமூக வலைத்தளங்களில் மிகவும் வைரல் ஆகியது.

இந்நிலையில் தனது சமூக வலைதள பக்கமான இன்ஸ்டாகிராமில் திருமண கோலத்தில் அழகிய புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# சத்தமில்லாமல் யுத்தம் செய்த சமிந்தவாஸ்

**“90களில் யாராலும் வீழ்த்த முடியாத அணியாக இலங்கை எழுந்து நிற்க அந்த அணியின் கூட்டு உழைப்பே காரணம். பட்டிங், பௌலிங் என இரண்டிலுமே அட்டகாசமான வீரர்களைக் கொண்டிருந்தது இலங்கை. மெக்ராத், கில்லெஸ்பி, அம்புரோஸ், வால்ஷ், டொனால்ட், வாசிம் அக்ரம், வக்கார் யூனிஸ் என வேகப்பந்து வீச்சாளர்கள் பலரும் கோலோச்சிய அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் மிகப்பெரிய ஆயுதமாக இருந்து, இலங்கைக்குப் பல வெற்றிகளைத் தேடித்தந்த மிக முக்கியமான வீரர் சமிந்த வாஸ்.”**

கிரிக்கெட்டில் பட்ஸ்மன்களுக்கும் பௌலர்களுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. ஒரு பட்ஸ்மன் திறமையாக விளையாடி ஓட்டங்கள் அடித்தால் அந்த ஓட்டங்கள் மொத்தமும் அவருக்குத்தான் கிடைக்கும். ஆனால், ஒரு பௌலருக்கு அப்படியில்லை. ஒரு பௌலர் மிகத்திறமையாகப் பந்துவீசும்போது பல நேரங்களில் அவருக்கு விக்கெட் விழாது. ஆனால், இன்னொரு முனையில் பௌலிங் போடும் பௌலருக்கு விக்கெட் விழும். நல்ல பௌலரின் பந்துகளை அடிக்க முடியாமல் தடுத்தாடிவிட்டு, எதிர்முனையில் அடிக்க ஆசைப்படும்போது பட்ஸ்மன்கள் விக்கெட்டை இழப்பார்கள். அப்படி தன் திறமையான பந்து வீச்சால் முத்தையா முரளிதரன் உட்பட இலங்கையின் பல பௌலர்களுக்கு விக்கெட் கொடை வழங்கியவர் சமிந்த வாஸ்.

அணிக்குள் இவர் இருக்கும் இடமே தெரியாது. வேகப்பந்து வீச்சாளர்களுக்கே உரிய மிரட்டல் உடல்மொழி எதுவும் இவரிடம் இருக்காது. இடது கை பந்துவீச்சாளரான சமிந்தவின் பந்துகள் அவ்வளவு துல்லியமாக இருக்கும். ஒரு ஓவரின் ஆறு பந்துகளையுமே அச்சுப்பிசகாமல் ஒரே லைன் அண்ட் லென்த்தில் அவரால் வீச முடியும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் வாசிம் அக்ரமிடம் கூட இந்தத் துல்லியம் சில நேரங்களில் மிஸ் ஆகும். ஆனால், வாஸ்க்கு எப்போது பிசிறு தட்டாது. இன்ஸ்விங், அவுட்ஸ்விங், இன்கட்டர் என அவ்வளவு வேரியஷேன்கள் காட்டுவார். சச்சின்,




லாரா, மார்க்வாக், அன்வர், கிறிஸ்டன் என 90களின் றொப் பட்ஸ்மன்கள் அத்தனை பேருமே வாஸின் பந்துவீச்சை அவ்வளவு கவனமாக எதிர்கொள்வார்கள்.

**9 முறை!**

சச்சினின் விக்கெட்டை அதிகமுறை வீழ்த்தியவர்களில் ஒருவர் சமிந்த வாஸ். 9 முறை சச்சினின் விக்கெட்டை வீழ்த்தியிருக்கிறார்.

இவரது பௌலிங் ஆக்ஷனில் எந்த ஆர்ப்பாட்டமும் இருக்காது. சீரான வேகத்தில் ஓடிவந்து துல்லியமாகப் பந்து வீசுவார். இவரின் ஓப்பினிங் ஸ்பெல்களை ஏந்த பட்ஸ்மனும் பெரிதாக அடித்ததாக நினைவேயில்லை. 1994 இல் இலங்கை அணிக்குள் வந்தவர் வாஸ். சென்னை எம்.ஆர்.எப்.பேஸ் ஃபவுண்டேஷனில் டென்னிஸ் லில்லியின் கீழ் பயிற்சி பெற்றவர். ஆரம்பத்தில் இவரது பௌலிங்கை அடித்து வெளுப்பார்கள். விக்கெட்டுகள் எதுவும் எடுக்காமல் 10 ஓவர்களுக்கு 60 ஓட்டங்களுக்கு மேல் கொடுத்தவர்தான் சமிந்த வாஸ். ஆனால், 95 இல் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிராக நியூசிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிதான் சமிந்த வாஸ்க்கு அணிக்குள் நிரந்தர இடத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. நேப்பியரில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலுமே தலா ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார் வாஸ்.

இலங்கையின் 1996 உலகக்கோப்பை வெற்றியில் சமிந்த வாஸின் பங்கு மிக முக்கியமானது. இந்த உலகக் கோப்பையில் முன்பே சொன்னதுபோல கூட்டுழைப்புதான் இலங்கைக்கு உலகக் கோப்பையை வென்று தந்தது. வாஸ், முரளிதரன் எனத் தனிப்பட்ட முறையில் எந்த பௌலருமே அதிக விக்கெட்டுகளை எடுக்கவில்லை. ஆனால், ஓட்டங்களை அதிகம் கொடுக்காமல் விக்கெட்டுகளை சரியான இடைவெளிகளில் வீழ்த்தினார்கள். அதற்கு சமிந்த வாஸின் பௌலிங் மிக முக்கிய காரணம்.

1996 உலகக்கோப்பையில் பெரும்பாலான போட்டிகளில் வாஸின் எக்கானமி ரேட் 3 - 4 ஓட்டங்களுக்குள்தான் இருக்கும். அவரது ஸ்பெல்லில் நிச்சயம் ஒரு மெய்டன் ஓவர் இருக்கும். டில்லியில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சச்சின் 137 ஓட்டங்கள் அடித்தார். ஆனால், வாஸின் பந்துகளை அவர் கைவைக்கவே இல்லை. இந்தப் போட்டியில் மட்டும் வாஸின் 3 ஓவர்கள் மெய்டன் ஆகின. அதேபோல் இந்தியாவுக்கு எதிரான அரையிறுதிப்போட்டியிலும் சித்துவின் விக்கெட்டைத் தூக்கி இந்தியாவின் சரிவைத் தொடங்கி வைத்தார் வாஸ். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் முக்கியமான விக்கெட்டான மார்க் வாகின் விக்கெட்டை வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் ரன்குவிப்பை அப்படியே தடுத்து நிறுத்தினார்.

1999 உலகக்கோப்பையில் பயங்கர சொதப்பல் ஆட்டம் ஆடியது இலங்கை. அப்போதும் இலங்கைக்கு ஒரே ஆறுதல் வாஸின் பௌலிங்தான். 2001 இல் சிம்பாவேவுக்கு எதிராக வாஸ் எடுத்த 8 விக்கெட்டுகள்தான் இன்றுவரை ஒருநாள் கிரிக்கெட்டில் சாதனை. வெறும் 19 ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெட்டுகள் வீழ்த்தினார் சமிந்த வாஸ். அன்றையப் போட்டியில் மீதமிருந்த இரண்டு விக்கெட்டுகளையும் வாஸே வீழ்த்தியிருப்பார். ஆனால், வாஸ்க்கு எதிர்முனையில் பந்துவீசிய முத்தையா முரளிதரன் ஒரே ஓவரில் 2 விக்கெட்டுகளை எடுத்துவிட 10 விக்கெட் சாதனை மிஸ் ஆனது. இந்தப் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட்டும் எடுத்தார் வாஸ்.

**ஹாட்ரிக்கில் சாதனை!**

2003 உலகக்கோப்பை வாஸின் கரியரில் மிக முக்கியமானது. பங்கதேசத்துக்கு எதிரானப்போட்டியில் முதல் ஓவரின் முதல் மூன்று பந்துகளிலுமே மூன்று விக்கெட்டுகள் எடுத்து ஹாட்ரிக் சாதனை படைத்தார். ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் இந்த சாதனையையும் இதுவரையிலும் வேறு யாராலும் நிகழ்த்த முடியவில்லை.

இந்த முதல் ஓவரின் ஐந்தாவது பந்திலேயே இன்னொரு விக்கெட்டையும் எடுத்து முதல் ஓவரை 5 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்கள் என முடித்தார் வாஸ். இந்தப் போட்டியில் மட்டும் 6 விக்கெட்டுகள் வாஸ்க்கு கிடைத்தது. 2003 உலகக்கோப்பையில் அரையிறுதி வரை சென்றது இலங்கை. அந்த உலகக் கோப்பையில் அதிகபட்ச விக்கெட்டுகளை வீழ்த்தியவர் வாஸ்தான். 10 போட்டிகளில் 23 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார் வாஸ். 2007 உலகக்கோப்பையில் இலங்கை இறுதிப்போட்டியில் விளையாடி அவுஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. இந்த உலகக் கோப்பையில் வாஸின் அதே 23 விக்கெட்டுகளை முரளிதரன் எடுத்துவிட்டாலும் வாஸ்ம் 13 விக்கெட்டுகள் எடுத்தார். எக்கானமிரேட்டும் மிகச்சிறப்பு.

இலங்கையின் உலகக்கோப்பை ஸ்பெஷலிஸ்டான சமிந்த வாஸை ஓய்வு பெற்ற பிறகும் 2011 உலகக்கோப்பை இறுதிப்போட்டிக்கு அணிக்குள் அழைத்து வந்தது இலங்கை நிர்வாகம். ஆனால், வாஸ் அந்தப் போட்டியின் ப்ளேயிங் லெவனில் சேர்க்கப்படவில்லை.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக மிகச்சிறப்பாக விளையாடியிருக்கிறார் சமிந்த வாஸ். மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 9 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 55 விக்கெட்டுகள் எடுத்திருக்கிறார். அதேபோல் 2005 இல் சென்னையில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற ரெஸ்ட் போட்டியும் வாஸின் கரியரில் முக்கியமானது.


கிரேக் சேப்பல் இந்தியாவின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்று, கங்குலி கப்டன்ஸியில் இருந்து வெளியேற்றப்பட்டு, ராகுல் டிராவிட் இந்தியாவின் தலைவராகப் பொறுப்பேற்று விளையாடிய முதல் போட்டி இது. மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட இந்த ரெஸ்ட் போட்டியில் தொடர்ந்து 11 ஓவர்கள் மெய்டன் வீசினார் சமிந்த வாஸ். நான்காவது நாளின் கடைசி ஓவரை மெய்டனாக வீசிவிட்டு ஐந்தாவது நாளைத் தொடங்கிய சமிந்த வாஸ் தொடர்ந்து 10 ஓவர்கள் மெய்டனாக வீசினார். டிராவிட், சச்சின், லட்சுமணன் என மூவராலுமே வாஸின் பந்துகளை அடிக்க முடியவில்லை. அன்று மொத்தமாக 21 ஓவர்கள் வீசி அதில் 14 மெய்டன் ஓவர்கள் போட்டு, கம்பீர், ஷேவாக், டிராவிட், கும்ப்ளே என நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார் வாஸ்.

1994 இல் இந்தியாவுக்கு எதிராக ஒருநாள் போட்டிகளில் அறிமுகமான சமிந்த வாஸ் தொடர்ந்து சிறப்பாகப் பந்து வீசியும் அவரால் ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகள் எடுக்க முடியவில்லை. ஆறு ஆண்டுகள் கழித்துத்தான் அதுவும் இந்தியாவ்க்கு எதிராகத்தான் 5 விக்கெட் ஹோல் எடுத்தார் சமிந்த. ஷார்ஜாவில் நடைபெற்ற அந்தப் போட்டியில் கங்குலி, டெண்டுல்கர், யுவராஜ் சிங், வினோத் காம்ப்ளி என டாப் 4 பட்ஸ்மன்களை வீழ்த்திய வாஸ், கடைசியாக ஜாகிர் கானின் விக்கெட்டையும் வீழ்த்தினார். 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து வாஸ் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய போட்டி அது. இந்தியா அன்று 54 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது.

டெஸ்ட்டில் 355 விக்கெட்டுகளும் ஒருநாள் போட்டிகளில் 400 விக்கெட்டுகளும் எடுத்திருக்கிறார். சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான மைதானங்களில் ஒரு வேகப்பந்து வீச்சாளர் இந்த அளவுக்கு விக்கெட்டுகள் எடுப்பது என்பது மிகப் பெரிய சாதனை. ஆசிய பிட்ச்களில் சத்தம் இல்லாமல் பல யுத்தங்கள் புரிந்த சமிந்த வாஸ் எக்காலத்திலும் கொண்டாடப்பட வேண்டியவர்.

# லெபனான்

## சிதைத்த 120 பாடசாலைகள்
## செயற்பட முடியாத மருத்துவமனைகள்
## அதிரவைக்கும் பாதிப்புக்கள்



லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள துறைமுகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்து அந்நாட்டுக்கு மிகப்பெரிய அடியாக இருந்து வருகிறது. "இந்த பாதிப்பிலிருந்து மீண்டுவர லெபனானுக்குப் பல மாதங்கள் தேவைப்படும்' என்று கூறப்படுகிறது.

துறைமுகத்திலிருந்த கிடங்கில் பல ஆண்டுகளாக இருந்த சுமார் 2,750 தொன் அமோனியம் நைட்ரேட் தான் இந்த மிகப்பெரிய பாதிப்புக்குக் காரணமாக கூறப்பட்டுவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக துறைமுக அதிகாரிகள் உள்ளிட்ட பலரிடமும் தீவிரமாக விசாரணை நடைபெற்று வருகிறது. இந்தநிலையில், வெடிவிபத்து தொடர்பாக அந்நாட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் வெளியாகும் தகவல்கள் அதிர்ச்சியையும் கவலையையும் அளிக்கும்விதமாக உள்ளன.

பெய்ரூட் வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துவருகிறது. இறுதியாக வெளியான தகவலின்படி, லெபனானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 180-ஐ நெருங்கியுள்ளது. குறைந்தபட்சம் 30 பேர் காணாமல் போயிருக்கிறார்கள்.

6,000-க்கும் அதிகமான மக்கள் படுகாயமடைந்துள்ளனர். பாதிப்பு ஏற்பட்டதை அடுத்து எடுக்கப்பட்ட விபரங்களின்படி, விபத்து நடந்த இடத்தைச் சுற்றி 15 கி.மீ தொலைவிலுள்ள மருத்துவ வசதிகள் தொடர்பாக இயங்கும் சுமார் 55 கட்டடங்கள் பாதிப்படைந்துள்ளன.

அவற்றில் பாதி மட்டுமே தற்போது பயன்பாட்டில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆறு மருத்துவமனைகள் மற்றும் 20-க்கும் மேற்பட்ட கிளினிக்குகள் முற்றிலுமாகச் செயல்பாடுகளை இழந்துள்ளன.

மருத்துவமனைகள் மட்டுமல்லாமல் பாடசாலைகளும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. சுமார் 50,000 மாணவர்கள் படித்துவந்த 120 பள்ளிகள் இந்த வெடி விபத்தில் சிதைந்துள்ளன. இலட்சக் கணக்கான மக்களின் குடியிருப்புகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளான இருப்பிடம், மருத்துவமனை மற்றும் கல்வி நிலையங்கள் என அனைத்தையும் லெபனான் மக்கள் இழந்து நிற்கின்றனர். 13 அகதிகளும் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். "பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் லெபனான் மக்கள் தங்களது இருப்பிடத்தை மீட்டெடுப்பது அல்லது சரி செய்வது என்பது மிகவும் சிரமமான ஒன்றாக இருக்கலாம்' என ஐ.நா கருத்து தெரிவித்துள்ளது.

எனினும், பாதிப்படைந்த குடியிருப்புகளில் 55மூ மக்கள் வாடகை வீடுகளில் வசித்துவந்ததால், மக்கள் எளிதாகத் தங்களது இடத்தை மாற்றிக் கொள்ளலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒருபுறம் வெடிவிபத்து பாதிப்புகள் அதிகமாக இருக்க, மறுபுறம் கொரோனா பரவல் தொடர்பான கவலைகளும் அதிகாரிகளிடையே அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பாதிப்படைந்த மக்களுக்கு உதவ தன்னார்வலர்கள் வருவதால் லெபனானில் பாதிப்படைந்த பகுதிகளில் வேறு வழியின்றி தனிமனித இடைவெளி போன்ற கொரோனா கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந் நாட்டில் ஏற்பட்ட இந்த விபத்தைத் தொடர்ந்து மக்கள் பலரும் போராட்டத்தில் இறங்கினர். ஊழல் குற்றச்சாட்டுகள், பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல் வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்து போராட்டங்களை நடத்தினர்.

இந்தப் போராட்டங்களில் வன்முறைகளும் நடந்துள்ளன. இதையடுத்து, கடந்த ஒகஸ்ட் 10 ஆம் திகதி பிரதமர் டியாப் தலைமையிலான அரசு மொத்தமாக பதவி விலகிக் கொள்வதாகவும், அமைச்சர்கள் அனைவரும் இராஜினாமா செய்துள்ளதாகவும் அறிவிப்புகள் வெளியாகின.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2087

Search for people, places and things

### கௌதமி

ஆயிரம் கவலைகள் நமக்கு இருந்தாலும், அதை எல்லாவற்றையும் மறக்க வைத்து நம்மை மிக சுலபமாக சிரிக்க வைப்பது நம் குழந்தைகள் மட்டுமே...
இனிய குழந்தைகள் தினம் நல்வாழ்த்துக்கள்.




### நிமல்சன்




### தர்ஷன்

என்ன நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்...
இன்பம், துன்பம் எது வந்தாலும் மன அமைதியை மட்டும் இழந்து விடாதே!



### எமல்சன்



நிறை, குறை இரண்டும் கலந்தது தான் வாழ்க்கை... அதில் நிறையை மட்டும் நினை...
நீ வாழ்க்கையை வென்று விடலாம்..!

### சர்மிளா

அன்பு... என்ன வடிவம் என்பது எனக்குத் தெரியாது..! ஆனால் எனக்கான மொத்த அன்பும் உன் வடிவில்..!



### நிஷா

நினைத்தவுடன் மழை... இரவு நேர மெல்லிசை... கள்ளமில்லா சிரிப்பு... பொய்யில்லா நட்பு... மீண்டும் ஒரு பள்ளிப்பருவம்... தோள் சாய தோழி... உயிர் கொடுக்கும் தோழன்... தாய் மடி தூக்கம் ... தூக்கத்தில் மரணம்... மரணம் வரை உங்கள் நட்பு...




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 217

# எமது முதியவர்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றார்களா?



சிறு குழந்தைகள் போலவே வயதானவர்களும் இலகுவில் நோய்வாய்ப்படும் தன்மை உடையவர்கள். சிறுவர்களிற்கு வழங்கப்படும் அதே கவனிப்பு முறைகள் முதியவர்களிற்கும் வழங்கப்படுகிறதா? சிறுவர்களின் உணவு முறையில் காட்டப்படும் அக்கறை முதியவர்களின் உணவு முறையிலும் கடைப்பிடிக்கப்படுகிறதா?. அல்லது அவர்கள் மிஞ்சிய உணவைத்தான் உண்ணுகிறார்களா?. முதியவர் களிற்கு நேரத்திற்கு மருந்தெடுத்துக் கொடுப்பதற்கு போதுமான ஆளுதவி இருக்கிறதா?. அல்லது அவர் கள் தாமாகவே எடுக்கும் மருந்துகள் சரியான முறை யில் எடுக்கப்படுகிறதா என்பதை சரிபார்ப்பதில் ஆர்வம் காட்டுகிறோமா?. அவர்களுடன் ஆற அமர இருந்து பேசி அவர்களின் மன உணர்வுகளை பகிர்ந்து கொள்ள எவ்வளவு நேரத்தை ஒதுக்கிக் கொள்கிறோம்.

இந்த மனப்பகிர்வுகள் அவர்களின் உள ஆரோக் கியத்திற்கு இன்றியமையாதது என்பதை புரிந்து வைத்திருக்கிறோமா? அவர்களின் சொந்தவிருப்பு வெறுப்புகள் மதிக்கப்படாமல் நாம் இட்ட சட்ட வரை யறைக்குள் அவர்கள் வாழ்ந்து முடிக்க வேண்டும் என்று எண்ணிக்கொள்கிறோமா? இவ்வாறாக தொடர்ச்சியான பல வினாக்கள் எம் மனதிலே எழுந்த வண்ணமே இருக்கின்றன.

உலக சுகாதார விற்பன்னர்கள் ஆரோக்கியமான வாழ்க்கை என்பது ஒருவர் உடல், உள, சமூக, ஆன்மீக



நன்னிலையுடன் வாழும் வாழ்க்கை என்று வரைவிலக் கணப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைய காலகட்டத் திலே முதியவர்கள ஆரோக்கியமாக வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா?

சிறுவர்கள் போலவே முதியவர்களும் பிடிவாதத் தன்மை உடையவர்கள். இது கடவுளின் இயற்கை. எனவே இந்த யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு சிறுவர்களை புரிந்து கொள்வது போல எமக்கு பெரிய வர்களையும் புரிந்து கொள்ள முடியாமல் போனதன் காரணம் என்ன?

சிறுவர் பாதுகாப்பு, மாணவர் உரிமை, பெண்கள் உரிமை என பல தரப்பினரையும் பாதுகாப்பதற்கு பல அமைப்புகள் உதயமாகி இருக்கும் இன்றைய கால கட்டத்திலே முதியவர்களின் உரிமைக்கும் பாதுகாப் பிற்குமென பலமான அமைப்புக்கள் எதுவும் உதய மாகாமல் போனதன் காரணம் என்ன? இவர்களை பிரயோசனங்கள் அனைத்தையும் பிழிந்து எடுத்த பின் வீசி எறியும் சக்கைகளாக கருதுகிறோமா?

- **இவற்றுக்கெல்லாம் எப்போது விடை காணப்போகிறோம்?**

இவை அனைத்தையும் ஒட்டு மொத்தமாக சிந்திக்கும் பொழுது எங்கோ தவறு நடந்து கொண்டிருக்கிறது போல தோற்றப்படுகிறது. இவற்றுக்கு யார் பொறுப்பு? இவற்றை நிவர்த்திக்க எங்கிருந்து ஆரம்பிப்பது? எங்கே முடிப்பது? இன்றைய நிலையிலே முதியவர்கள் அனைவரும் சுற்றவாளிகளாக இருக்க மற்றைய அனைவரையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதா? என்று சிந்திக்க வேண்டும்.

இன்று முதியவர்களாக இருப்பவர்கள் அன்றொரு நாள் மாணவர்களாகவும், பெற்றோர்களாகவும், பெரிய வர்களாகவும் இருந்தவர்கள் தான். அவர்கள் தான் இந்த இன்றைய இளைய சமுதாயத்தை செதுக்கி எடுத் திருக் கிறார்கள். அவர்களைப் பார்த்துத்தான் இன்றைய இளைய சமுதாயம் வளர்ந்து வந்திருக்கிறது.



தெரிந்தோ தெரியாமலோ அறியாமையினாலோ அல்லது அனுபவமின்மையினாலோ தவறுகள் நடக்க லாம். ஆனால் எமது இளம் சமுதாயத்தினர் முதியவர் களை வேண்டுமென்றே துன்புறுத்துமளவிற்கு மோச மானவர்கள் அல்ல. எமது மக்கள் தமது தாய், தந்தையர், பேரன், பேர்த்தி மற்றும் ஏனைய முதியவர்களிடத்தில் உண்மையான அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்தி ருக்கிறார்கள். ஆனால் அவர்களிற்கு அதனை வெளிக் காட்ட தெரிவதில்லை.

"கண் தெரியாமல் ஏன் ரோட்டிலே வெளிக்கிட்டனி நல்லாய் வாகனத்திலே அடிபட்டுசா" என்று முதியவர் களிற்கு பேச்சு விழும். பேசுபவரின் உண்மையான மனநிலை சில சமயம் எமக்குபுரியாமல் போகும். "அப்பா! பாவம் உனக்கு கண்ணும் தெரியாது உனக்குவாகனம் ஏதும் அடிச்சுப்போட்டால் என்னால தாங்க முடியாது. ஏதும் தேவையென்றால் கேள் நான் செய்து விடுகி றேன்" என்று நயமாக சொல்ல எமக்கு தெரியாது. அதனைநாம் வெளிப்படுத்தும் விதம் வித்தியாசமானது.

ஒவ்வொரு முதியவரும் மரணப்படுக்கையிலே இருக் கும் பொழுது சுற்றி நின்று கதறும் சுற்றத்தை பார்த்து தாங்கி ஜீரணித்துக் கொள்வது மிகவும் வேதனையானது. அவர்க ளின் இந்த கதறல் போலியானவை அல்ல. இவ்வளவு நாளும் இந்த பாசத்தையும் அக்கறையையும் எங்கே பூட்டி வைத்திருந்தார்கள் என்பது ஆச்சரியமாக இருக்கும். மேலை த்தேய நாடுகளிலே இதனை நாம் காண முடியாது.

எமது மக்கள் ஒவ்வொருவரும் பல முதியவர்களை ஏதோ ஒரு வகையில் பொறுப்பெடுத்து கவனித்து வரு கிறார்கள். இத்தகைய பொறுப்பு மேலைத்தேய மக்களி டையே இல்லை. அங்கே அரசாங்கமே முக்கியமாக அவர்களை பொறுப்பெடுத்து பார்த்துக்கொள்கிறது.

இங்கே ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த வேலைப்பளுக்களுக்கும் கடமைகளிற்கும் மத்தியில் பல பெரியவர்களை தம்மால் இயன்ற அளவு பராமரித்



துத்தான் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு புரிந்துணர்வற்ற நிலை காரணமாக பல சந்தர்ப்பங்க ளிலே ஒரு மனக்கசப்பு நிலைதோன்றி வருகிறது. இளைய தலைமுறையினரும் முதியவர்களின் சில அன்றாட நடவடிக்கைகளை மாற்றி அமைப்பதற்கு கடும் முயற்சி எடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. முதியவர்களின் வாழ்க்கை நடைமுறைகளை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பது பலவிதமான மனக்கசப் புக்களை ஏற்படுத்தும். அவர்களின் மனப்பதிவுகளை யும் நடைமுறைகளையும் ஒரு புதிய ஒழுங்கிலே மாற்றி அமைப்பது நடைமுறை சாத்தியமற்றது.

முதியவர்களின் மூளையின் தொழிற்பாட்டு கட்ட மைப்பு இவ்வகையான நடைமுறை மாற்றத்திற்கு இலகுவில் இடம் தராது. எனவே நல்ல நோக்கத்திற்காக வேனும் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளையும் சிந்தனைகளையும் மாற்றி அமைக்க முயல்வது அநாவசியமான மனக்கசப்புகளிற்கு வழிவகுக்கும்.

வாழும் காலத்திலே எமது கல்வியிலே அக்கறை செலுத்துகிறோம், எமது பிள்ளைகளின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துகிறோம். எமது சமுதாயத்தின் நல்வாழ்வில் அக்கறை செலுத்து கிறோம், சுற்றாடல் பாதுகாப்பில் அக்கறை செலுத்து கிறோம். ஆனால் எமது முதுமைக் காலத்தை திட்ட



மிடுவதில் அக்கறை அற்றவர்களாக இருந்து விடுகிறோம்.

எனவே எமது முதுமைக் காலத்தை திட்டமிடுவ துடன் முதியவர்கள் ஒவ்வொருவரினது கவனிப்பிலும் எம்மால் இயன்றவரை பங்களிப்பை செலுத்த வேண் டும். முதியோரின் கவனிப்பையும் சுகாதாரத்தையும் மேம்படுத்த அனைத்துத் தரப்பினரதும் ஒன்றுபட்ட முயற்சி தேவையாக இருக்கிறது

நாம் எவ்வாறு முதியவர்களை கவனித்துக் கொள் கிறோம் என்பதை எமது அடுத்த தலைமுறை பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனைப் பார்த்துத்தான் எமது அடு த்த தலைமுறை முதியவர் கவனிப்பு சம்பந்தமாக கற்றுக் கொள்ளப்போகிறது. எனவே நாம் எமது முதியவர்களி ற்கு வழங்கும் அதே கவனிப்பையே எமக்கும் எமது அடு த்த தலைமுறையினர் வழங்குவார்கள் என்பது உறுதி.

Dr.சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**